
கல்கி



KALKI 18-5-1969 40 காசு




1வது சிறந்த தேர்வு
மர்பி
முஸாபிர்
ரூ.283
murphy
musafir
மர்பியின் மற்ற மிகச் சிறந்த
தயாரிப்புகள் :
மாடல் TB 0816
3 பாண்ட் ரூ. 415.00
மினி மாஸ்டர் 3
2 பாண்ட் ரூ. 220.00
மினி பாய்
2 பாண்ட் ரூ. 175.00
ம்யூஸிஷியன்
மீடியம் வேவ் ரூ. 125.00
● கச்சிதமானது: அடக்கமானது: அழகியது. இந்த சக்திவாய்ந்த 3-பாண்ட் டிரான்ஸிஸ்டரில் உலகின் எந்த நிலையத்தையும் தெளிவாகத் தொந்தரவின்றிக் கேட்கலாம்.
● டெலஸ்கோபிக் அன்டென்னுவும், உட்பொருத்தப்பட்ட சக்தி வாய்ந்த ஏரியலும் கொண்டது.
● எளிதில் கிடைக்கும் பெரிய சைஸ் டார்ச் பாட்டரிகளில் அமோகமாக இயங்குகிறது.
மர்பி ரேடியோ, இந்தியாவின் மிகப் பெரிய அதி நவீன டிரான்ஸிஸ்டர் பாக்டரியில் தயாரிக்கப்பட்டது. ரேடியோ தயாரிப்பில் 20 வருட ஆராய்ச்சி, அனுபவம் மற்றும் தொழில் நுட்பத் திறனைப் பின்பலமாகக் கொண்டிருப்பது.
உன்னத ஒலிநயம், சிறந்த அமைப்பு, சகாய விலை
விலைகள்
எக்ஸைஸ் தீர்வை
உள்ளிட்டவை.
மற்ற வரிகள் தனி.
மர்பி — இல்லத்தை மகிழ்விக்கிறது!
NAS 215

கல்கி


பொருளடக்கம்


சௌமிய. வைகாசி 5௳ — 1969, மே 18௳

அட்டைப்படம்: கோடைக்கானல் காட்சி! — வித்யாஸ்ரதா



பம்பாய் ஆயுள் இன்ஷ்யூரன்ஸ் கார்ப்பொரேஷன், மானேஜிங் டைரக்டர் ஸ்ரீ S. D. ஸ்ரீனிவாசன் அவர்கள் குமாரர் சிர. கோபாலுக்கும், மதுரை டி. வி. எஸ். & சன்ஸ் பிரைவேட் லிமிடெட்டின் ஸேல்ஸ் மானேஜர் ஸ்ரீ வி. பாஷ்யம் அவர்கள் குமாரி சௌ. லீலாவுக்கும் சமீபத்தில் திருமணம் சிறப்பாக நடைபெற்றது. திருமணத்துக்கும், அதையொட்டி பம்பாய் தாஜ்மஹால் ஹோட்டலில் நடைபெற்ற வரவேற்பு வைபவத்துக்கும் ஏராளமான நண்பர்களும், உறவினர்களும், நகரப் பிரமுகர்களும் வருகை தந்து மணமக்களை வாழ்த்திச் சென்றனர். வாழ்க மணமக்கள்!


துடுப்பை எறிந்து விட்டீர்களே!
இனி எங்கு செல்வோம், தெரியுமா?
அதுதான் எனக்கும் தெரியவில்லை!
சர்க்கார்
மக்கள்
மதம்


உற்சாகமாகப் போ! விரைவிலேயே அவ்விடம் அடைவோம்
காங்கிரஸ் ஆட்சியாளர்
சோஷலிஸ சொர்க்கம்
மக்கள்
PK



தமிழ்த்திருநாடு தன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா — பாரதியார்

மலர் 28 ● இதழ் 42

பட்டேல் கொடுத்த வாக்குறுதி

தவறான ஒரு காரியம் செய்வது சுலபம். ஆனால் அக் காரியத்தின் விளைவைத் தவிர்ப்பதோ, அல்லது அவ் விளைவுக்குப் பரிகாரம் காண்பதோ சுலபம் அல்ல. இவ் விஷயத்தில் தனி மனிதரை விட ஓர் அரசாங்கம் மோசமான நிலையில் உள்ளது. செயலுக்குரிய பலன் கிட்டியே தீரும் என்கிற கர்மவிதி சிறிதும் தயாதாட்சிண்யம் காட்டுவதில்லை. அணுகுண்டு வீசி நாகசாகியை நாசம் செய்து, ஒரே அடியில் ஜப்பானை அடிபணிய வைத்து வெற்றி கண்ட அமெரிக்கா, இன்று தானே அச்சத்துக்கு ஆட்பட்டு, தனது திரவிய வசதிகளை அதற்காக விரயப்படுத்துவதைப் பார்க்கிறோம். செக்கோஸ்லோவேகிய விவகாரத்தைப் பார்த்தால் அமெரிக்கா எவ்வளவு பலவீனமாகி விட்டதென்பது தெரியும். 'வல்லரசாக இருப்பதால் செயல் சுதந்திரமும் முடிவெடுக்கும் சுதந்திரமும் இருப்பதாக அர்த்தமாகாது' என்று அமெரிக்க ராஜாங்கக் காரியதரிசி ஸ்ரீ ரோகர்ஸ் பகிரங்கமாகக் கூறியிருப்பதிலிருந்து பிறரை ஒடுக்க அணு ஆயுதம் வீசிய அமெரிக்கா, இப்போது எப்படித் தானே ஒடுங்கியுள்ளது என்பது புரியும்.

கர்மவிதி இவ்வாறு அமெரிக்காவில் பிரத்தியட்சமாக நிரூபணமாகியிருப்பதை, இந்திய சர்க்கார் முன்னாள் மன்னர்களுக்குத் தந்த ராஜமானிய வாக்குறுதியை முறிக்கக்கூடாது என்பதை வலியுறுத்துவதற்குப் பூர்வாங்கமாக எடுத்துக் காட்டுகிறேன்.

வாக்குறுதியை முறிப்பது சுலபம். ஆனால் அப்படி முறிப்பதால், நாம் உத்தேசிக்காமலே பல தீய விளைவுகள் ஏற்படும். இவ் விளைவுகளிலிருந்து தப்புவது சுலபமில்லை. வாக்குறுதி ஒன்றை முறித்தால் சர்வதேச அரங்கில் நம் நாட்டுக்கு உள்ள அந்தஸ்து எல்லா விதங்களிலும் சிதைந்து விடும். அரசியல், பொருளாதாரம், வர்த்தகம் முதலிய எல்லாத் துறைகளிலும் உலக அரங்கில் பரிகாரம் காண ஒண்ணாத அளவுக்கு நம் அந்தஸ்து பழுதுபடும். இது வெறும் லௌகிக நோக்கிலும் கூட அறிவுடைமை ஆகாது என்பதை அநுபவம் வாய்ந்த எந்த வியாபாரியும் அரசாங்கத்துக்கு எடுத்துக்கூற முடியும்.

தசரதன் கைகேயிக்குத் தந்த வாக்குறுதியை மையமாகக் கொண்டதே ராமாயண இதிகாசம். யௌவனப் பிராயத்திலிருந்த ஸ்ரீராமன் இந்த வாக்குறுதியை மதித்தே ஆக வேண்டுமெனக் கூறி, தனக்கு யுவராஜ்ய பட்டாபிஷேக ஏற்பாடுகள் நடந்து கொண்டிருக்கையிலேயே வனம் புகுந்து, தந்தை வாக்கை நிறைவேற்றத் துணை புரிந்தான்.

புராணமும், சாஸ்திரமும் இருக்கட்டும். நமது நம்பிக்கைக்கும் மரியாதைக்கும் உகந்த சுதந்திரப் போராட்டத் தலைவர்கள் இவ்விஷயமாகச் சொன்னதை நினைவுகூருவோம்.

சமஸ்தானங்களை இந்திய யூனியனோடு இணைத்தபோது பாரத சர்க்கார் வெளியிட்ட அறிக்கை பின்வருமாறு கூறுகிறது:

> "பெரிய சமஸ்தானங்கள், சிறிய சமஸ்தானங்கள் அனைத்தின் மன்னர்களும் காலத்தின் போக்கைச் சுயேச்சையாக அநுசரித்துள்ளனர். 'சுதேச மன்னர்களின் பிடிவாதம் என்கிற கற்பாறையில் மோதி இந்திய சுதந்திரம் நொறுங்கிப் போகும்' என்பதாக நிலவி வந்த கட்டுக் கதையைத் தகர்ப்பதில் சமஸ்தானாதிபதிகள் ஒத்துழைத்துள்ளனர். மன்னர்களும், மக்களும் ஒருங்கிணைந்து செய்யும் முயற்சி என்கிற உண்மையான அஸ்திவாரத்தின் மீது ஜனநாயக இந்திய மாளிகை எழும்புகிறது.
>
> "இம்மன்னர்கள் தேசபக்தியுடன் ஒத்துழைத்திராவிடில், மக்கள் — ஆட்சியாளர் இருவருக்கும் பரஸ்பர நலன் பயக்கும் மகத்தான மாறுதல் ஏற்பட்டே இராது. மன்னர் என்கிற

ஒரு வியக்தியின் ஆட்சி முறைக்கே நீண்ட கால சம்பிரதாயப்படி பழக்கப்பட்டு வந்துள்ள சம்ஸ்தான அதிபதிகளுக்கு, இன்றைய புது அமைப்பு ஓர் அடிப் படையான மாறுதலைச் செய்து கொள்ள அவசியத்தை ஏற்படுத்தியது. இச்சம யத்தில் அவர்கள் அறிவுக் கூர்மை, தீர்க்க திருஷ்டி, தேச பக்தி இவற்றைக் காட்டி இன்முகத்துடன் மாறுதலை ஏற்றுக் கொண்டுள்ளனர். மக்களுடைய அபிலா ஷைகளை மன்னர்கள் மதித்து, சிரமம் இல்லாத முறையில், அமைதிகரமாக ஆட்சி உரிமைகளை விட்டுக் கொடுத்து சம்ஸ்தானங்களை யூனியனுடன் இணைத் துள்ளனர். எனவே, அவர்கள் தம்மைச் சுதந்திர ஜனநாயக இந்தியாவின் நிர்மா ணத்துக்கு உதவிய சிற்பிகளாக உரிமை கோர மிகவும் நியாயமுண்டு.''

✿

இந்திய சர்க்கார் தனது தவறான சிந் தனையில் எழுந்த திட்டத்தைப் பிடிவாத மாகப் பின்தொடர்ந்து முன்னாள் மன்னர் களுடன் 'ராஜி' செய்து கொள்ளுமுகமாக, சிறிய வசதிகள் செய்து தர முன்வந்தால், இப்படிப்பட்ட ஏற்பாட்டை முன்னாள் மன் னர்கள் துச்சமாகக் கருதி மறுக்க வேண்டும் என்று யோசனை கூற விழைகிறேன். நம் பிக்கை வைத்தவர்களால் ஏமாற்றப்பட்ட வர்கள் திவாலாவாகி ஏழையாக வாழ்வது போலவே முன்னாள் மன்னர்களும் வாழ முற்பட்டால், அது அவர்களது வரலாற்றுப் பெருமைக்கும், கௌரவத்துக்கும் உரிய செயலாக இருக்கும்.

பகவானை ஒதுக்கிய நிலையிலிருந்து மக்களை உயர்நிலைக்கு அழைத்துச் செல்லாவிடில் தேசத்தின் எதிர்காலத்தில் நம்பிக்கை வைப்ப தற்கே இல்லை என்பது முற்றிலும் சத்தியம். வாக்குறுதியை முறிப்பதில் அரசாங்கமே உதாரணமாக இருக்குமாயின், அது பக வானை ஒதுக்கும் போக்குக்கு உற்சாகமூட்டு வதே ஆகும். ''மேல் நிலையில் இருப்பவர்கள் செய்வதைத்தான் மற்ற மக்களும் பின் பற்றுகின்றனர். மேல் நிலையில் உள்ளவர்கள் எதைப் பிரமாணமாகக் கொள்கின்றனரோ அதனையே மற்றோரும் அநுசரிக்கின்றனர்'' என்ற பகவத் கீதா வாசகத்தை நினைவு கொள்ளுதல் பொருத்தம்.

அரசியல் சாஸனத்தின் நகல் திட்டம் தயாரானபோது, மன்னர்களின் ராஜமானி யம், விசேஷ உரிமைகள் ஆகியன பற்றிய ஷரத்துக்கள் பற்றி அரசியல் நிர்ணய சபை விவாதித்தது. அப்போது ஸர்தார் வல்லப பாய் பட்டேல் சரித்திர முக்கியத்வம் வாய்ந் ததோர் உரை நிகழ்த்தினார். அதிலிருந்து சில மேற்கோள்களைப் பார்ப்போம்:

'' இதுவரை (பிரிட்டிஷ் ஆட்சியில்) சம்ஸ்தான மன்னர்களுக்கு அளிக்கப்பட்ட ராஜ மானியத்தில் கால் பங்குக்கும் குறை வாகவே புதிய ராஜமானியத் தொகைகள் நிர்ணயிக்கப்பட்டுள்ளன. இது தவிர மன்னர்களின் கையிருப்புத் தொகையி லிருந்து அரசாங்கத்துக்குப் பெறப்பட் டுள்ள நிதியத்தினாலும் சம்ஸ்தான இணைப்பு பயன் அளித்திருக்கிறது. உதாரணமாக, மத்திய பாரத மன்னர் யூனியனுக்குத் தந்துள்ள பெரும் நிதியத் தின் வட்டியிலிருந்தே யூனியனுடன் இணைந்துள்ள மன்னர்களின் ராஜமானியத் தில் பெரும் பங்கைக் கொடுக்க முடியும்.


''மன்னர்கள் தமது ராஜ்யங்களை இந்திய யூனியனில் ஐக்கியப்படுத்த வேண்டிய தவிர்க்க முடியாத நிர்ப்பந்தம் எதுவும் இருக்கவில்லை. அத்தகைய ஒரு நிலையில் நாம் போர் தொடுத்திருந்தால் அது நம் கொள்கைக்கு விரோதமாகாது என்பது உண்மை; ஆயினும் போர் நடவடிக்கை யால் விபரீத விளைவுகள் ஏற்பட்டிருக் கும். யூனியனில் சேராமல் தனித்தே இருப்பது என்று மன்னர்கள் தீர்மான மாக இருந்திருந்தால் முன் போலவே ராஜ்ய வருவாயைக் கட்டுப்பாடின்றி உப யோகித்து வரலாம். அப்படியிருக்க, அவர்கள் தமது ஆட்சியதிகாரத்தை விட்டுக் கொடுத்துள்ளனர். இதற்கு நாம் செய்யும் அதமபட்சமான பிரதியாகவே ராஜ மானியங்களும், சில விசேஷ உரிமை களும் வாக்குத் தரப்பட்டுள்ளன. இவை பகுத்தறிவுக்குகந்த முறையில் நன்கு வரையறை செய்யப்பட்டுள்ளன. தமது ஆட்சியதிகாரம் அவ்வளவையும் விட்டுக் கொடுத்து விட்டு, தனித் தனியாக இருந்த சம்ஸ்தானங்களை இணைக்க உதவி புரிந்த மன்னர்களுக்கு அதன் பொருட்டுத் தரப்படுவதே ராஜமானியம்.

'' பிரிட்டிஷாரின் சாம்ராஜ்யத்தைப் பலப்படுத்துவதற்கு உதவிய மன்னர்களுக் காகப் பிரிட்டிஷ் சர்க்கார் ஏராளமாகச் செலவிட்டதை நாம் மறப்பதற்கில்லை. அப்படி இருக்க, நமது கோடானு கோடி மக்களுக்கு நன்மை விளைவித்துள்ள இந்த ரத்தம் சிந்தாத புரட்சிக்காக நாம் சிறிது செலவு செய்வதைக் கண்டு குறை பாடலாமா? (''சிறிய'' செலவு என்று வேண்டுமென்றேதான் கூறுகிறேன்.)


''பேச்சு வார்த்தை மூலம் மன்னர்களி டம் உடன்பாடு காணுவிடில் அவர்களால் எவ்வளவு சச்சரவுகளும் சிரமங்களும் ஏற் பட்டிருக்கும் என்பதை இன்று கற்பனை செய்துகூடப் பார்க்க முடியாது. எனவே அவர்களுக்கு உரிய நியாயத்தை வழங்கு வோம். அவர்களுடைய நிலையில் நம்மை வைத்துக் கொண்டு, அதன் பின் அவர் களது தியாகத்தின் மதிப்பைக் கணக் கிடுவோம். ஆட்சியதிகாரத்தை விட்டுக் கொடுத்து சம்ஸ்தானங்களை யூனிய னுடன் இணைக்க ஒப்பியதன் மூலம் இப் போது உடன்படிக்கையில் மன்னர்கள் தமது பங்கை நிறைவேற்றியுள்ளனர். உடன்படிக்கையில் நமது முக்கியமான பங்கு யாதெனில் ராஜ மானிய விஷய மாகத் தந்த வாக்குறுதியை முற்றிலும் அமல் செய்வதேயாகும். இவ்வாறு செய்ய நாம் தவறினால் அது நம்பிக்கைத் துரோக மாகும்; நாம் அமைக்கும் புதிய ஆட்சி முறையின் பலத்தை அது பயங்கரமாகப் பாதிக்கும்.''

பிரதி தினமும் நாம் நன்றி யஞ்சலி தெரிவிக்கும் ஒருவரின் வாக்கிலிருந்து வந்த

ஸ்ரீமதி எம். எஸ்ஸுக்குப் பாராட்டு



பம்பாய் ஷண்முகானந்தா மணிமண்டபத்தில் சென்ற ஏப்ரல் 27ம் தேதி ஞாயிறன்று நடந்த ஸ்ரீமதி எம். எஸ். சுப்புலக்ஷ்மியின் உணர்ச்சி ததும்பிய இன்னிசைக் கச்சேரி பம்பாய் ரசிகர்கள் மனத்தை விட்டு நெடு நாளைக்கு அகலாது. சங்கீத கலாநிதி விருது பெற்ற பின்னர் ஸ்ரீமதி எம். எஸ். இச் சபையில் செய்த முதல் கச்சேரியாதலாலும், இவ்வாண்டு சபையின் வெள்ளி விழா ஆண்டாதலாலும் சபையினரின் குதூகலத்துக்கு எல்லையே இல்லை. சபைத் தலைவர் திரு எஸ். எம். ஒய். சாஸ்திரி ஸ்ரீமதி எம். எஸ்ஸுக்கும் திரு சதாசிவத்துக்கும் மாலை மரியாதை செலுத்திப் பாராட்டினார். ஷண்முகானந்த சபை நடத்திய இசைப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு ஸ்ரீமதி எம். எஸ். பரிசுகளை வழங்கினார். இந்த நன்னாளின் ஞாபகார்த்தமாக ஸ்ரீ சதாசிவம் சபைக்கு கல்கி ஸ்தாபனத்தின் பெயரில் ரூ. 2000 நன்கொடை அளித்து, இதன் வருவாயிலிருந்து ஆண்டுதோறும் இசைப் போட்டியில் வெற்றி பெறுவோருக்குப் பரிசுகள் வழங்கப்பட வேண்டும் என்று அறிவித்தார். பொருத்தமான அறிவிப்பு.



அந்தரங்க சுத்தமான வார்த்தைகள் இவை. நாம் வேஷதாரிகளாகி விடாமல் அந்த அறிவுரையைக் கடைப்பிடிப்போம். தாயகத்திடம் அன்பு, அதன் க்ஷேமத்துக்காகவும் கௌரவத்துக்காகவுமே சிந்திப்பது — இவை தவிர வேறு பற்றுதலே இல்லாதவர் ஸர்தார் வல்லபபாய். நமது தலைவர்களில் மிகவும் விவேகம் வாய்ந்தவர். அவர் அடர்ந்த மெய்யுணர்ச்சியுடனும், அந்தரங்க சுத்தத்துடனும் தந்த அறிவுரையைப் புறக்கணித்தால் நமக்குப் பெரும் தீமையே ஏற்படும்.

அரசியல் சாஸன சபையில் ஸர்தார் பட்டேல் கூறியதில் ஒரு வார்த்தை கூட மிகை அல்ல. தங்கத்துக்கு முலாம் பூச வேண்டியதில்லை அல்லவா? அவ்வாறே உண்மையை எவ்வித மிகையும் இல்லாமல் அவர் கூறியிருக்கிறார்.

முன்னாள் மன்னர்களுக்குத் தந்த வாக்குறுதியை இன்று மீற உத்தேசித்திருப்பதற்குக் காரணம் நிதியை மிச்சப்படுத்துவதல்ல; சோஷலிஸத்தை வலியுறுத்துவதற்கே ராஜ மானியத்தை நிறுத்த எண்ணியிருக்கிறார்கள். அப்படியானால் சோஷலிஸம் நம்பிக்கைத் துரோகத்துடன் பிணைக்கப்பட வேண்டியதா? ''சத்தியமேவ ஜயதே'' (உண்மையே வெல்லும்) என்ற துவஜ வாசகத்தை முறியடித்தால்தான் சோஷலிஸம் நடக்குமா? இனி பழைய துவஜ வாசகத்துக்குப்பதிலாக

அந்ருதம் ஜீ ஜயதி, ந ஸத்யம்

(பொய்தான் வெல்கிறது; சத்தியம் அல்ல) என்று புதிய சொற்றொடரைக் கைக்கொள்ள வேண்டுமா?

சமயக் கட்டளைகளுக்கு மக்கள் மீண்டும் மதிப்புத் தருமாறு செய்வதற்கு நம்மால் இயன்ற முயற்சிகள் அனைத்தும் மேற்கொள்வோம். ''யதா ராஜா ததா ப்ரஜா'' — மன்னன் எவ்வழி மன்னுயிர் அவ்வழி—என்ற பண்டைய எச்சரிக்கையை மறவாதிருப்போம். தலைவனை மக்களும் பின்பற்றுகிற தொற்று நோய் முடியரசை விட ஜனநாயகத்தில் மிகவும் வலிமையானது.

ராஜ மானிய விஷயத்தை விவாதிக்கும் போது குறளையும் நினைவுகொள்வோம்:

எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம்;
—உய்வில்லை
செய்ந் நன்றி கொன்ற மகற்கு

(ராஜாஜி 'ஸ்வராஜ்யா'வில் எழுதியது)

ராஜாஜியின் கருத்துக்கள்

"நுரையீரலில் ஏற்படும் புற்றுநோய்க்கும் புகை பிடிப்பதற்கும் தொடர்பு உள்ளது என்பது சந்தேகமற உறுதியாகி யிருக்கிறது. இதைப் புகை பிடிப்பவர்களும் — சுகாதார அதிகாரிகளும் கூட — பெரும்பாலும் புறக்கணிப்பதுதான் ஆச்சரியமாக உள்ளது" என்று ஜெர்மனியின் தலைசிறந்த பத்திரிகையாகிய "ஃப்ராங்க்ஃபர்ட்டர் ஆல்ஜிமைன்" கூறுகிறது. கண்டனகரமான மருத்துவக் கருத்துக்கு நேர் விகிதத்திலேயே சிகரெட் விளம்பரங்கள் பெருகி வருகின்றன. புகை பிடிப்பவர்கள் அவ்வாறு செய்வதன் ஆபத்தை இன்னமும் அலட்சியம் செய்வதற்கு இதுவே காரணம்.

பழைய வழக்கங்கள் வலுவாகப் பிடித்துக் கொண்டு விடுகின்றன. வாயினால் பேசாமலும் உண்ணாமலும் இருக்கும்போது வேறு ஏதாவது செய்ய விரும்புவது நீண்ட காலமாக வந்த பழக்கம். நம்மைச் சங்கடப்படுத்துகிற ஒரு விஷயத்தில் என்ன செய்வது என்று நிச்சயமாகப் புரியாதபோதும் புகை பிடிப்பது ஒரு பழக்கமாக வந்திருக்கிறது. மூளை சூனியமாகி என்ன செய்வது என்று புரியாத சமயத்திலும், நுரையீரலில் புற்றுநோயை வரவழைத்துக் கொள்வது செய்யத் தகாத காரியம்தான் என்பதில் சந்தேகமில்லை.

ஃஃஃ

யூனியன் சர்க்காரின் ஆணைக்கு உட்பட்ட எல்லா இனங்களையும் சாஸனத்தின் ஏழாவது ஷெட்யூலின் முதல் பட்டியல் கூறுகிறது. அதில் 86வது இனம் ஒன்று மட்டுமே மத்திய சர்க்காரின் சொத்து வரிக்குரிய பொருட்களைக் கூறுகிறது. அது வருமாறு:

விவசாய நிலம் தவிர, தனி மனிதர்களுக்கும் கம்பெனிகளுக்கும் உரிய சொத்துக்களின் மூலதன மதிப்பின் மீது வரிகள்; கம்பெனிகளின் மூலதனத்தின் மீது வரிகள்.

விவசாய நிலத்தின் மூலதன மதிப்பீட்டின் மீது யூனியன் சர்க்கார் வரி விதிக்கலாகாது என்று இங்கு விலக்கு தரப்பட்டிருப்பதற்கு மாறாகப் பட்டியலில் வேறெங்குமே எதுவுமே கூறப்படவில்லை.

இவ்வாறே ராஜ்யங்களின் ஆணைக்குரிய பொருட்களின் பட்டியல், யூனியன்—ராஜ்யம் இவற்றின் கூட்டு ஆணைக்குரிய பொருட்களின் பட்டியல் இவற்றிலும், விவசாய நிலத்தின் மூலதன மதிப்பின் மீது வரி விதிப்பதற்கு யூனியன் அரசாங்கம் அதிகாரம் பெற்றிருக்கவில்லை.

இந்திய அரசியல் சாஸனத்தின் ஏழாவது ஷெட்யூல் ஷரத்துக்களுக்கு மேலாக அட்டார்னி ஜெனரலின் அபிப்பிராயம் அதிகாரம் பெற முடியாது. ஏழாவது ஷெட்யூலின் 86வது இனம், சாஸனத்தின் 246வது பிரிவு இவற்றில் திட்ட வட்டமாகவும், குறிப்பாகவும் கண்டுள்ளதை இந்திய அட்டார்னி ஜெனரல் எப்படி அலட்சியம் செய்யலாம் என்பது எனக்குப் புரியவில்லை. எந்த அடிப்படையின் மீது நிதி இலாகா விவசாய நில மதிப்புக்கு வரி போடுமாறு மந்திரிக்கு யோசனை கூறியது என்றும் எனக்குப் புரியவில்லை.

விவசாய நிலம் என்பது அதன் இயற்கைத் தன்மை காரணமாகப் பயிரிடப்பட்ட நிலம்; அல்லது பயிரிடப்படக் கூடிய நிலம். நில உடைமையாளரின் நோக்கத்தினால் நிலத்தின் இயற்கைத் தன்மை மாறி, நிதி மந்திரி வரி விதிக்கக் கூடிய வேறு ஏதோ ஒன்றாக ஆகிவிடாது.

ஃஃஃ

ஸ்ரீ தண்டேகர் சுகவீனம் உற்றிருப்பது காரணமாக, சுதந்திரக் கட்சிக் காரியதரிசியின் கடமைகளை ஆற்றி வரும் ஸ்ரீ ஆர். வி. கூப்பர் கட்சியின் சார்பில் ஒரு நல்ல அறிக்கை விடுத்திருக்கிறார். நக்ஸல்பாரி பாணியில் அமைந்த கம்யூனிஸ்ட் கட்சியைத் தடை செய்ய உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இவ்வறிக்கை யூனியன் சர்க்காரை வற்புறுத்துகிறது. நக்ஸல்பாரிக்காரர்கள் குழப்பத்தையும், உள்நாட்டுப் போரையும் பகிரங்கமாக வரவேற்று, நாட்டின் பல பாகங்களில் நாச வேலை செய்து வருவது அனைவருக்கும் தெரிந்துவிட்ட விஷயம் என்கிறது அறிக்கை. உள்துறை மந்திரி வெறுமே எச்சரிக்கையும் அறிக்கையும் விடுவது தவிர யூனியன் சர்க்கார் செயலற்று இருப்பதன் ஆபத்தை கூப்பரின் அறிக்கை எடுத்துக் காட்டுகிறது. நக்ஸல்பாரியினர் மட்டுமின்றி இடது — வலது சாரியினரும் தற்போதைக்கு வெவ்வேறு உபாயங்களைக் கைக்கொண்டாலும், இறுதியாக இந்திய ஜனநாயகத்தின்



ஆசாரியர் அருள்மொழி

சம்ஸார வாழ்வில் சாரமாக உள்ளது எது ?

சம்ஸார வாழ்வில் சாரமாக ஏதேனும் உள்ளதா என்று சிந்தித்துக்கொண்டேயிருப்பதுதான் அதன் சாரம்.

அழிவையே லட்சியமாகக் கொண்டிருப்பதால் சமூகநிலைத்தின் இம் மூன்று பிரிவுகளையுமே சட்ட விரோதமானவையாகப் பிரகடனம் செய்ய வேண்டும் என்று ஸ்ரீ கூப்பர் வலியுறுத்தி யிருக்கிறார்.

கொள்கை அளவில் சரியாக உள்ள சில உத்தேசங்களும் கூட பெர்மிட் — லைசென்ஸ்— கோட்டா ராஜ்யத்தில் காங்கிரஸ் பெற்றுள்ள விசேஷ அநுகூலம் காரணமாகக் காரிய ரூபத்தில் வரும்போது மிகவும் தவறானவையாகலாம் என்று பார்லிமென்டில் ஸ்ரீ எம். ஆர். மஸானி வெகு அழகாகக் குறிப்பிட்டிருக்கிறார். இதுவரை தொழில் அபிவிருத்திக்கு மிகவும் உதவி புரிந்துள்ளதும்—இனி மேலும் உதவி புரிய வேண்டியதுமான மானேஜிங் ஏஜென்ஸி முறையை நீக்குவதற்காகச் செய்துள்ள உத்தேசத்தை அவர் ஆட்சேபித்திருப்பதும் மிகச் சரி.

பூமியிலேயே மிகவும் அழகானவை மலர்களும் பட்சிகளின் மதுர கானமுமே என்பதில் சந்தேகமில்லை. உலகில் உள்ள மிக உன்னதமான பொருட்கள் நெடிய விருட்சங்கள்தாம். மனிதன் தானே சிருஷ்டியில் மிக உயர்ந்தவன் என்று உரிமை கொண்டாடுவதற்கு அவனது அறிவொன்றே காரணம். அதிகாரத்தைக் கைப்பற்றிக் கொண்டு, 'அரசாங்கம்' என்கிற பெயரைச் சூட்டிக் கொண்டு விடுகிற ஒருசிலரிடம் மனிதன் தன் அறிவை விற்றுவிடுவானாகில் அதன் பின் அவன் தன் உயர்வைப் பற்றிக் கோரும் உரிமையும் பறிமுதலாகி விடுகிறது.

உடுப்புக்களின் மூலம் மனிதன் தன்னை அழகு படுத்திக் கொள்ள முயலுகிறான். அநேகமாக இம் முயற்சியில் தோல்வியே அடைகிறான்.

உடுப்புக்களை உபயோகிக்கும் வழக்கம் காரணமாக ஆடையற்ற நிலையைக் காணவும் ஒரு செயற்கை ருசி ஏற்படும். இந்தப் பசியைச் சிறிது தணித்துக் கொண்ட உடனேயே இதன் கவர்ச்சி போய்விடும்.

சென்ற ஆண்டு செப்டம்பரில் அமெரிக்க ஜனாதிபதி தேர்தலுக்கு நின்ற ஸ்ரீ நிக்ஸன் பின்வருமாறு கூறியதாக 'ப்ரொக்ரெஸிவ்' பத்திரிகை வெளியிடுகிறது.

> "மிகவும் பரந்து விரிந்த ஓர் அடிப்படையிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட ஓர் அரசாங்கத்தை நான் விரும்புகிறேன். அதாவது, குடியரசுக் கட்சியினர், ஜனநாயகக் கட்சியினர், சுயேச்சையாளர், அரசியல் வாதிகள், சர்க்கார் உத்தியோகஸ்தர்கள், விவசாயிகள், இதர தொழில்களைச் சேர்ந்தவர்கள் ஆகியோர் அனைவரும் அடங்கிய — உத்தியோகஸ்தர்கள், நிர்வாகஸ்தர்கள் ஆகியவரோடு அறிஞர்களும் சிந்தனையாளர்களும் அடங்கிய — அரசாங்கத்தை விரும்புகிறேன்."

ஸ்ரீ நிக்ஸன் சொல்லி யிருக்கும் அடிப்படையில் இந்திய அரசியல் நிபுணர்களும் சிந்திக்க வேண்டிய தருணம் வந்துவிட்டது. மத்திய மந்திரி சபையில் உள்ள முக்கியமான மந்திரிகள் இந்நிலை ஏற்படுவதற்குத் தாமே சுயேச்சையாக நடவடிக்கை எடுக்கும் தருணம் வாய்த்து விட்டது.

கணித சாஸ்திரத்தின் சிக்கலான நுட்பங்களில் சங்கேதங்கள் இல்லாமல் முடியாது. இவ்வாறே மதத்திலும் சங்கேதங்கள் (அடையாளங்கள், மூர்த்திகள்) இல்லாமல் முடியாது. சமய வழிபாடும் கணிதப் பயிற்சியும் அடையாளங்கள் இன்றி நடக்க முடியாது. அடையாளங்களில் பல விதம் உண்டு. அடையாளம் என்றே தோன்றாத சில சங்கேதங்களும் உண்டு.

குஹமயம்

அஷ்டபந்தன மஹா கும்பாபிஷேகம்

கந்த கோட்டம்

ஸ்ரீ முத்துக்குமாரஸ்வாமி தேவஸ்தானம்

சௌமிய ஆண்டு வைகாசித் திங்கள் 13ம் நாள் ஆங்கிலம் (26-5-1969) திங்கட்கிழமை காலை 5-15க்கு மேல் 6 மணிக்குள் கந்தகோட்டம் ஸ்ரீ முத்துக் குமாரஸ்வாமியார், பரிவார சகிதம் அஷ்டபந்தன மஹா கும்பாபிஷேகம் வெகு விமரிசையாய் நடைபெறும். ஆஸ்திக மெய்யன்பர்கள் அனைவரும் கலந்து கொண்டு இறைவன் திருவருளுக்குப் பாத்திரர்களாகும்படியாகப் பிரார்த்திக்கின்றோம்.


மேற்படி மஹா கும்பாபிஷேக திருப்பணிக்குத் தங்களால் இயன்ற பொருளுதவி நேரிலோ அல்லது பொருளாளர் – கந்தகோட்டம் ஸ்ரீ முத்துக் குமாரஸ்வாமி தேவஸ்தான மஹா கும்பாபிஷேக திருப்பணிக் கமிட்டியார் என்கிற விலாசத்திற்கோ அனுப்பி வைக்க வேணுமாய்க் கேட்டுக் கொள்கிறோம்.

இங்ஙனம்

மஹா கும்பாபிஷேக திருப்பணிக் குழுவினர்கள்

நெ. 77, இராசப்ப செட்டித் தெரு, சென்னை - 3

KALAI



பாலுஸேரி பெனிபிட் சிட் பண்டு

பிரைவேட் லிமிடெட்

"பாலுஸேரி பில்டிங்ஸ்"

3, சிங்கராச்சாரி தெரு, திருவல்லிக்கேணி

தபால் பெட்டி நெ. 414. மதறாஸ்-5

தந்தி: 'EVERMANS' போன்: 85834

மதராஸ் சிட்பண்டு 1961 ஆக்ட்படி கீழ்க்காணும் சீட்டுகள் நடத்தப்படுகின்றன
(மதராஸ் ஆக்ட் நெ. 24 of 1961)

25 மாதங்கள் — குறுகிய காலச் சீட்டுகள் — 25 அங்கத்தினர்கள்

வகுப்பு	மாதச் சந்தா	சீட்டுத் தொகை	வகுப்பு	மாதச் சந்தா	சீட்டுத் தொகை
A	ரூ. 200	ரூ. 5000	D	ரூ. 25	ரூ. 625
B	ரூ. 100	ரூ. 2500	E	ரூ. 20	ரூ. 500
C	ரூ. 50	ரூ. 1250	F	ரூ. 15	ரூ. 375

40 மாதங்கள் — நீண்ட காலச் சீட்டுகள் — 40 அங்கத்தினர்கள்

வகுப்பு	மாதச் சந்தா	சீட்டுத் தொகை
LTA	ரூ. 500	ரூ. 20000
LTB	ரூ 250	ரூ. 10000
LTC	ரூ. 125	ரூ. 5000

சேரும் குரூப்பை விவரித்து எங்கள் விதிகளுக்கு எழுதவும்

கிளைகள்: புது டில்லி — பம்பாய் — பெங்களூர் — கல்கத்தா

எங்கள் சேவை உங்களுக்குத் தேவை

VSK - BBC - 1000 TM - K

ஆற்றல் மிகுந்த ஆனந்தராவ்

''ஹலோ, ஆனந்தராவ்! பதினைந்து பேருக்கு ஒரு சிறிய 'பார்ட்டி'. எட்டு மணிக்கு. அவகாசம் இல்லை. நீங்கள்தான் கவனித்துக் கொள்ள வேண்டும்.''

''பேஷா! காத்துண்டிருக்கேன். எல்லாம் 'கரெக்டா' முடிச்சுக் கொடுக்கிறேன்.''

ஃ ஃ ஃ

''ஹலோ, ஆனந்தராவ்! ஒரு பெரிய 'கான்ஃபரன்ஸ்'. ஏறக்குறைய ஆயிரத்து இருநூறு டெலிகேட்டுகள் வருவார்கள். எல்லோரும் வி. ஐ. பி. அந்தஸ்துள்ளவர்கள். லஞ்ச், டீ, டின்னர் எல்லாம் உங்கள் பொறுப்பு. கவனித்துக் கொள்ளுங்கள்.''

''கவலை வேண்டாம். இருநூறு பேர்கூட வந்தாலும் வரட்டும். ஒரு குறையுமின்றி நடத்தித் தருகிறேன்.''

ஃ ஃ ஃ

இப்படி சின்ன விருந்தானாலும், பெரிய 'ரிஸெப்ஷ'னானாலும் பாதி ராத்திரியானாலும், பட்டப் பகலானாலும், மைதானத்திலானாலும், மணி மண்டபத்திலானாலும், திருமண விருந்தானாலும், 'லைட்' சிற்றுண்டியானாலும் தேவைக்குத் தக்கவாறு இன்சொல் கூறி உணவு பரிமாறி உபசரிக்கும் ஹோட்டல் சேவையை ஓர் உயர் கலையாகவே ஆக்கியுள்ளார், ஹோட்டல் தாஸப்பிரகாஷின் மானேஜர் திரு பி. ஆனந்தராவ்.



திரு ஆனந்தராவ்

சொல்லில் மட்டும் திருப்தியளிக்கும் வகையில் பேசுபவரல்ல ஆனந்தராவ். செயலிலும் நடத்திக் காட்டும் சமர்த்தர். ஏற்பாடுகளையெல்லாம் மிகக் கச்சிதமாகச் செய்பவர். எந்தச் சிறிய அம்சமும் அவருடைய கவனத்திலிருந்து தப்பாது. ஏற்பாடுகள்தான் செய்தாயிற்றே, சிப்பந்திகள் பார்த்துக் கொள்வார்கள் என்று ஒதுங்கியிருக்க மாட்டார். தாஸப்பிரகாஷ் 'கேடரிங்' பொறுப்பை ஏற்றுக் கொண்டு நடத்தும் எந்த விருந்திலும் திரு ஆனந்தராவ் பிரசன்னமாகி யிருப்பார். அவசியம் ஏற்பட்டால் தாமே உபசரணை செய்யவும் தொடங்கி விடுவார். அதில் இன்பம் காணுபவர்.

நவீன கால ஹோட்டல் தொழில் மிகப் பெரிய தொழில். உற்பத்தித் தொழிற்சாலையை நிறுவி நடத்துவதிலுள்ள திறமையும், சாமர்த்தியமும், நிர்வாக சாதுரியமும் ஹோட்டல் தொழிலிலும் பூரணமாக வேண்டும்.


ஹோட்டல் நிர்வாகத்தில் புகழ்பெற்ற திரு ஆனந்தராவ் தென் இந்திய ஹோட்டல் சங்கத்தின் கௌரவ காரியதரிசி. அகில இந்திய ரீதியில் செயல்பட்டுக் கொண்டிருக்கும் அகில இந்திய ஹோட்டல் சங்க சம்மேளனத்தின் காரியதரிசி. வெளிநாடுகளுக்குச் சென்று அங்கெல்லாம் பெரிய ஹோட்டல்கள் எப்படி நடத்தப்படுகின்றன என்பது பற்றி நேரில் கண்டு அறிந்தவர்.

திரு ஆனந்தராவ் இம்மாதம் 10ந் தேதி அயர்லாந்துக்குப் புறப்பட்டுச் சென்றிருக்கிறார். அங்கே டப்ளின் மாநகரத்தில் நடைபெறும் சர்வதேச ஹோட்டல் சங்கத்தின் கூட்டத்தில் இந்திய ஹோட்டல் சம்மேளனத்தின் பிரதிநிதியாகக் கலந்து கொள்ள அனுப்பப்பட்டிருக்கிறார். அங்கே பூர்வாங்கப் பேச்சு வார்த்தைகள் நடத்தி, சர்வதேச ஹோட்டல் சங்கத்தின் மகாநாடு ஒன்று இந்தியாவில் இவ்வாண்டு நவம்பர் மாதம் நடைபெறுவதற்கான ஏற்பாடுகளைப் பூர்த்தி செய்யப் போகிறார். இந்த மகாநாட்டில் உலகத்திலேயே புகழ்பெற்ற முந்நூறுக்கு மேற்பட்ட ஹோட்டல் முதலாளிகள் கலந்து கொள்வர். இதனால் நம் நாட்டுக்குக் கௌரவம் மட்டுமின்றி, பல நன்மைகளும் விளையக் கூடும். இந்த ஏற்பாடுகளைச் சரிவரச் செய்து முடிக்க திரு ஆனந்தராவ் தேர்ந்தெடுத்து அனுப்பப்பட்டிருப்பது அவருடைய திறமைக்குச் சான்று. அவர்மீது இந்திய ஹோட்டல் சங்க சம்மேளனம் வைத்திருக்கும் நம்பிக்கைக்கு எடுத்துக்காட்டு.

திரு ஆனந்தராவின் குரலை ரேடியோவில் பலர் கேட்டு மகிழ்ந்திருக்கின்றனர். கிரிக்கெட் விளையாட்டில் ஆழ்ந்த பற்றுள்ளவர். சுமார் இருபத்தைந்து வருஷங்களாக இந்தியாவில் நடைபெறும் கிரிக்கெட் டெஸ்ட் மாட்சுகளைப் பற்றிச் சுவைபட விமர்சனம் செய்யும் அதே ஆனந்தராவ்தான் ஹோட்டல் தொழில் நிர்வாகத்தில் தலை சிறந்து விளங்கும் பி. ஆனந்தராவ் என்றால் பலருக்கு ஆச்சரியமே உண்டாகும். ஹோட்டல் தொழிலுக்கும், கிரிக்கெட் விளையாட்டுக்கும் என்ன சம்பந்தம் என்றுதான் வியப்பீர்கள். ஆனால், இதே ஆனந்தராவ் இருபது ஆண்டுகளுக்கு முன் மருத்துவத் துறையில் பட்டம் பெற்ற 'ரேடியேஷன்' மருத்துவ நிபுணராக, தமது புகழ்பெற்ற சகோதரர் காலஞ்சென்ற டாக்டர் பி. ராமாராவுடன் புற்றுநோய் போன்ற மருத்துவத் துறையில் பணியாற்றியவர் என்று அறிந்தால் மூர்ச்சை போட்டு விழுவீர்கள். ஆனந்தராவின் அநுபவம் பல துறைகளைச் சேர்ந்தது. அறிவின் ஆற்றல் அற்புதம்.

ஆனந்தராவின் வெளிநாட்டுப் பயணம், நாட்டுக்குப் பயனுள்ளதாகப் போகிறது என்பதில் மகிழ்ச்சி கொள்ளலாம். அவருடைய அநுபவமும் ஆற்றலும் ஓங்கட்டும்!





ராஷ்டிரபதியின் இறுதி யாத்திரை






















ராஷ்டிரபதி ஜாகிர் ஹுஸைன் வாழ்க்கையில் சில காட்சிகளையும் அவரது இறுதி யாத்திரையையும் இங்கு இப்பக்கங்களில் காண்கிறோம்.

1. ராஷ்டிரபதி பிறந்ததின கேக்கை வெட்டுகிறார். 2. பேரக் குழந்தைகளுடன். 3. சேவாகிராமத்தில் காந்திஜியுடன் அளவளாவுகிறார். 4. ஆப்கன் பிரதமர் மரியாதை செலுத்துகிறார். 5. தாற்காலிக ராஷ்டிரபதி டாக்டர் வி. வி. கிரியும் பிரதமர் ஸ்ரீமதி இந்திரா காந்தியும். 6. இறுதிச்சடங்கில் தமிழக அமைச்சர் திரு மதியழகன். 7. சோவியத் பிரதமர் கோஸிஜின், டாக்டர் ஜாகிர் ஹுஸைன் மனைவியாருக்குத் தமது அநுதாபங்களைத் தெரிவிக்கிறார். 8. பத்திரிகை நிருபர்களிடையே பாதுகாப்புத் துறை மந்திரி. 9. ராஷ்டிரபதி பவனை விட்டு ராஷ்டிரபதி சடலம் புறப்படுகிறது. 10. ஜமியா மிலியா கல்வி ஸ்தாபனம். 11. சடலம் அடக்கம் செய்யப்படுகிறது.


காந்தீயக் கதைகள்

'ஏதோ மாமியார்-மருமகள் சண்டையையும் பஸ் ஸ்டாண்டு காதலையும் வைத்துக் கதை எழுதுகிறார்களே தவிர பாரத நாட்டில் ஏற்பட்ட — ஏற்பட்டு வருகிற - புரட்சிகரமான மாறுதல்களை அடிப்படையாகக் கொண்ட கதைகளைத் தமிழில் யார் எழுதுகிறார்கள்?' என்று கேட்கும் மகானுபாவர்கள் ஒருசிலர் இன்னமும் தமிழ்நாட்டிலே இருக்கத்தான் செய்கிறார்கள். அவர்கள் தயவு செய்து இரண்டு காரியங்கள் செய்ய வேண்டும். ஒன்று 'தமிழ்க் கதை இலக்கியத்தில் காந்திஜி' என்ற தலைப்பில் சென்னை வானொலி நிலையத்தினர் ஏப்ரல் 27ந் தேதி ஞாயிற்றுக்கிழமை ஒலிபரப்பிய நிகழ்ச்சியை மீண்டும் என்று ஒலிபரப்புகிறார்கள் என்று காத்திருந்து கேட்க வேண்டும். மற்றொன்று காந்தி வழிக் கதைகள் என்ற தலைப்பில் 'தமிழ் நாடு காந்தி நினைவு நிதி' (மதுரை — 13) வெளியிட்டுள்ள புத்தகத்தை ஏழரை ரூபாய் கொடுத்து வாங்கிப் படித்துப் பார்க்க வேண்டும். தமிழ் எழுத்தாளரிடம் நம்பிக்கை உள்ளோரும் புத்தகத்தை வாங்கலாம்; ஆட்சேபணை இல்லை!

ரேடியோ நிகழ்ச்சியிலும் சரி, புத்தகத்திலும் சரி, காந்திய சகாப்தத்தில் வாழ்ந்த எழுத்தாளர்களின் கதைகள் மட்டுமின்றித் தற்கால எழுத்தாளர்களின் கதைகளும் சேர்க்கப்பட்டிருப்பது ரொம்பவும் பொருத்தம். இதனால் காந்தி வாழ்ந்த காலத்திய காந்தீயம் காந்திக்குப் பிறகு எந்த அளவுக்குக் கடைப்பிடிக்கப்படுகிறது என்று தெரிய வருகிறது.

புத்தகத்தில் முழுக்க முழுக்கச் சிறுகதைகளே; வானொலி நிகழ்ச்சியில் நாவல்களும் சேர்க்கப்பட்டிருந்தன. வானொலி நிகழ்ச்சியில் கதாபாத்திரங்கள் ரயிலில் செல்கிறார்கள் என்றால் ரயில் ஓடுவது போன்ற சத்தத்தையும், சத்தியாக்கிரக வீரர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் என்றால் 'டப் டுப்' ஒலியையும் தர முடிந்தது. புத்தகத்தில் இந்த 'ஸ்பெஷல் எஃபெக்டு'களுக்கு எங்கே போவது? எனினும் வானொலி நிகழ்ச்சியில் இல்லாத ஒரு முழுமை புத்தகத்தில் உண்டே!

சிறுகதைகள், நாவல்கள் ஆகியவற்றிலிருந்து சில சில வரிகளை மட்டும் அந்தக் கதாசிரியர்களையே (அல்லது அவர்கள் காலமாகிவிட்டிருந்தால் அவர்களது நெருங்கிய உறவினர்களையே) வானொலி நிலையத்தினர் வாசிக்கச் செய்தார்கள். இந்தக் குரல் பேதங்கள் சுவை கூட்டின. எனினும் ''என்னை விட்டு விட்டார்களே'' என்று எந்த எழுத்தாளராவது கோபித்துக் கொண்டு விடுவாரோ என்று அஞ்சியதுபோல் ஏராளமான கதைகளும் நாவல்களும் சேர்க்கப்பட்டு ஒவ்வொன்றிலும் பத்துப் பதினைந்து வரிகளை படிக்கப்பட்டதால் ஒரு மணி நேர நிகழ்ச்சியான போதிலும் மன நிறைவு ஏற்படாமலே போய்விட்டது.



'காந்தீயக் கதைகள்' வெளியீட்டு விழாவில் முதன்மந்திரி திரு கருணாநிதி

காந்தீயம் எந்த அளவுக்குத் தற்காலத் தமிழ் இலக்கியத்தில் ஊடுருவி நிற்கிறது என்பதைக் காட்டுவதே பிரதான நோக்கமெனில் இவ்வானொலி நிகழ்ச்சி வெற்றியே.

காந்தி வழிக் கதைகள் என்ற நூல் தொகுப்பாசிரியர் மகரத்தின் பக்தி சிரத்தையான உழைப்பின் பயனாய் உருவாகியுள்ள ஒரு பொக்கிஷம்.

தமிழ் எழுத்தாளர்கள் தயக்கமின்றித் தலைநிமிர்ந்து நடக்கலாம்!

ஆசி பெறத் திருவாசிப் பணி

காஞ்சீபுரம் ஸ்ரீ காமாக்ஷி ஆலயத்திலுள்ள ஸ்ரீ சங்கர பகவத்பாதர்களின் திருமூர்த்தத்துக்கு நடைபெறும் லக்ஷார்ச்சனை, நமது காமகோடி ஜகத்குரு அவர்களின் எழுபத்தியாறுவது ஜயந்தியாகிய மே 31ந் தேதிவரை நீடிக்கப்பட்டிருக்கிறது. இந்த அர்ச்சனைக் காணிக்கையில் செலவு போக எஞ்சும் திரவியம் ஸ்ரீமத் ஆசாரிய மூர்த்திக்கு வெள்ளித் திருவாசி அமைக்கப் பயனாகிறது. ஆதி ஆசாரியர்கள், இன்றைய ஆசாரியர்கள் இருவரின் ஆசியையும் கூட்டி வைக்கும் இந்தக் கைங்கரியத்தில் ஆஸ்திகர்கள் அனைவரும் பங்கு கொள்ள வேணும். அர்ச்சனை ஒன்றுக்கு ரூ. 8ம் பெயர், கோத்திரம், நட்சத்திரம் முதலிய விவரங்களும் கீழ்க்கண்ட விலாசத்துக்கு அனுப்பி வைக்கவும்: டாக்டர் வி. எஸ். வி. ராஜப்பா, பொருளாளர், ஸ்ரீ சங்கர பக்த ஜன சபா, 4, சாலைத் தெரு, காஞ்சீபுரம்.

அண்ணலின் வாழ்விலே . . .

இரு நிகழ்ச்சிகள்

காந்திஜி பொய் சொல்வதைச் சகிக்க மாட்டார். ஆசிரமத்தில் சேர்ந்து பணியாற்றும் நோக்கத்துடன் ஒரு பட்டதாரி இளைஞன் 1926ல் சபர்மதிக்கு வந்தான். அவன் உடலுழைத்து வேலை செய்ய வேண்டும் என்றும், முதற் படியாக மூன்று மாதகாலம் தோட்ட வேலை செய்ய வேண்டும் என்றும் காந்திஜி பணித்தார். அவன் சுறுசுறுப்பான இளைஞன். ஆசிரமக் குழந்தைகள் அவனிடம் அன்புடன் பழகினார்கள். அவனும் அவர்களுக்குக் கதைகளைச் சொல்லுவான். விளையாட்டுக்களைக் கற்றுத் தருவான்.



ஒருநாள் அவன் நோயாளி ஒருவனுக்காகத் தோட்டத்திலிருந்து ஓர் எலுமிச்சம் பழத்தைப் பறித்து எடுத்து வந்து கொண்டிருந்தான். வழியில் அவனை எட்டு வயதுச் சிறுமி ஒருத்தி சந்தித்தாள். அவனிடமிருந்த எலுமிச்சம் பழத்தைக் கேட்டாள். அவன் தரவில்லை. அவனுடைய கையிலிருந்த பழத்தைத் தாவிப் பிடித்துவிட முயன்றாள். அவன் பழத்தை விட்டெறிவது போல் கையை உயர்த்தி வீசிவிட்டு, சிறுமிக்குத் தெரியாமல் பழத்தைச் சட்டைப் பைக்குள் போட்டுக் கொண்டான்.

''பழம் எங்கே?'' என்றாள் அந்தச் சிறுமி.

''ஆற்றில் எறிந்து விட்டேன்'' என்றான் அவன்.

சிறுமி ஆற்றுக்கு ஓடப் புறப்பட்டாள். ''ஓடாதே. பழம் முழுகிப் போயிருக்கும்'' என்று அவன் தடுத்தான்.

சிறுமி சமாதானம் அடைந்து விட்டாள். இருவரும் ஆசிரமத்துக்குச் செல்லும் வழியில் முகத்தில் அரும்பிய வியர்வையைத் துடைத்துக் கொள்வதற்காகத் தன்னுடைய சட்டைப்பையிலுள்ள கைக்குட்டையை இளைஞன் உருவியபோது, எலுமிச்சம் பழம் வெளியே விழுந்தது. அதைத் தாவி எடுத்துக்கொண்ட சிறுமி, ''இதை ஆற்றில் எறிந்துவிட்டதாக என்னிடம் பொய்தானே சொன்னாய்? உன்னைப் பற்றி பாபுவிடம் கூறுகிறேன்'' என்று சொல்லிவிட்டு, நேராக காந்திஜியின் அறைக்குச் சென்று நடந்ததை அவரிடம் கூறினாள்.

அன்று மாலை பிரார்த்தனைக்குப் பிறகு, காந்திஜி அந்த இளைஞனைக் கூப்பிட்டு விசாரித்தார். நோயாளிக்காக எலுமிச்சம் பழம் பறித்து வந்ததையும், சிறுமி கேட்டதற்குப் போக்குக் காட்டியதையும் அவன் சொன்னான். காந்திஜி அதைக் கேட்ட பிறகு ''தம்பி, இது ஒரு பாடமாக இருக்கட்டும். குழந்தைகளிடம் விளையாட்டுக்குக் கூடப் பொய் சொல்லக் கூடாது. விளையாட்டாகப் பேசும் பழக்கம் படிந்துவிட்டால் விபரீதமாகிவிடும்'' என்றார்.

இந்த நிகழ்ச்சியைப் பற்றி விவாதித்த சில ஆசிரம ஊழியர்கள், ''தேவதைக் கதைகள் கற்பனை நிறைந்தவைதானே. அவற்றைக் குழந்தைகளுக்குச் சொல்லவில்லையா?'' என்று ஆசிரமத்தில் பணியாற்றிக் கொண்டிருந்த காகா கலேல்கரிடம் கேட்டார்கள்.

''கற்பனை வேறு. அன்றாட வாழ்க்கையில் கூறும் பொய் வேறு. இரண்டையும் ஒப்பிட்டுக்குழப்பம் அடையக் கூடாது. குழந்தைகளுடைய மனம் நளினமானது. அதில் கறை படியாமல் எச்சரிக்கையாகப் பழகுவது அவசியம். அவர்களை உண்மை பேசவே பழக்க வேண்டும்'' என்று காகா கலேல்கர் பதிலளித்தார்.

★

ஏரவாடா சிறையிலிருந்த போது காந்திஜி குடல் அறுபந்த நோயால் வருந்தினார். அறுவை வைத்தியம் செய்வதற்காக ஆஸ்பத்திரிக்கு அழைத்துச் சென்றபோது, ஓர் ஆங்கில நர்ஸ் அவருக்கு அன்புடன் பணிவிடை செய்தாள். அவர் சிறிது குணமடைந்தபோது, ஆஸ்பத்திரியில் வேறு ஒரு பகுதிக்கு இடம் மாற்றினார்கள். அவரை அழைத்துச் செல்லும்போது அந்த நர்ஸ் கேட்டாள்: ''நீங்கள் பிரிட்டிஷ் சாமான்கள் பலவற்றை பகிஷ்கரிக்கிறீர்கள். ஆனால் இன்று பிரிட்டிஷ் மருந்துகள், அறுவைக் கருவிகள் முதலியவற்றைப் பயன்படுத்தி ஒரு பிரிட்டிஷ் டாக்டர்தான் உங்களுடைய உயிரைக் காப்பாற்றினார். இப்போது உங்கள் மீது வெயில் படாமல் மறைத்து வந்த குடைகூட பிரிட்டிஷ் தயாரிப்பு என்பது உங்களுக்குத் தெரியுமா?''



காந்திஜி சொன்னார்: ''நிலைமையைச் சரியாகத் தெரிந்து கொள்ளாமல் நீங்கள் பேசுகிறீர்கள். பிரிட்டிஷ் தயாரிப்பு என்பதற்காக நான் எந்தப் பொருளையும் பகிஷ்கரிக்கவில்லை. எங்களுடைய தொழிலை அழித்துக் கோடிக்கணக்கில் மக்களை ஏழைகளாக்கும் அந்நியத் துணி இறக்குமதியைத்தான் பகிஷ்கரிக்கிறேன்.''

ஆங்கில மக்களிடம் வெறுப்புக் கிடையாது என்பதைத் தெரிந்து கொண்டதும் அவள் மகிழ்ச்சியடைந்தாள். கதர் இயக்கத்தைத் தெரிந்து கொள்வதில் அவள் அக்கறை காட்டினாள்.

— கே. எஸ். ஜே.


CINTHOL
அதிக மணம், அதிக மென்மை
மென்மை, அன்றலர்ந்த மலரின் புதுமை, நறுமணம்
ஒப்பற்ற கிருமிநாசினியாகிய ஜி-11 (ஹெக்சாகுளோரோஃபின்) கொண்ட சிந்தால் டாய்லெட் பவுடரின் நீடித்து நிற்கும் நறுமணமும், பட்டுமென்மையும் உங்கள் உடலைத் தழுவி, சருமத்திற்கு நாள்முழுவதும் பாதுகாப்பளிக்கட்டும்.
CINTHOL
ஜி-11 கொண்ட சிந்தாலைப் போல வேறெந்தப் பவுடரும் உங்களைப் பாது காப்பதில்லை
INTERPUB/CP 17A TAM



பொன்னியின் செல்வன்

அமரர் கல்கி

இருபத்துநாலாம் அத்தியாயம்

அனலில் இட்ட மெழுகு

கிளி 'கிரீச்'சிட்ட சத்தமும், தாதிப் பெண் பயத்துடன் கூவிய சத்தமும் கலந்து வந்து நந்தினியையும் கந்தமாறனையும் திடுக்கிடச் செய்தன. கந்தமாறன் திரும்பிப் பார்த்துப் பழுவேட்டரையர் வருகிறார் என்று அறிந்ததும் கதி கலங்கிப் போனான். சற்று முன்னால் அவன் 'பழுவேட்டரையரை எனக்கும் பிடிக்கவில்லை' என்று சொன்னது அவர் காதில் விழுந்திருக்குமோ என்ற எண்ணம் உதயமாயிற்று. அதைவிடப் பீதிகரமான எண்ணம், நந்தினியையும் தன்னையும் பற்றி அவர் ஏதேனும் தவறாக எண்ணிக் கொள்வாரோ என்ற நினைவு. — அவனுக்குத் திகிலை உண்டாக்கிற்று. கிழப் பருவத்தில் கலியாணம் செய்து கொண்டவர்களின் போக்கே ஒரு தனிவிதமாக இருக்குமல்லவா? ஆகையினாலேயே அவர் அவ்வளவு கோபமாக வந்து கொண்டிருக்க வேண்டும்! வந்து என்ன செய்யப் போகிறாரோ, தெரியவில்லை. எதற்கும் சித்தமாயிருக்க வேண்டியதுதான்.

இவ்வளவும் ஒரு நொடிப் பொழுதில் கந்தமாறன் மனத்தில் அலை எறிந்த சிந்தனைகள். ஆனால் அவனுக்கு அன்று ஒரு பெரிய அதிசயத்தைக் காணும் வாய்ப்புக் கிடைத்தது. அவன் நினைத்ததற்கெல்லாம் மாறாக அந்த அதிசயம் நடந்தது. பழுவேட்டரையர் அருகில் நெருங்கியதும் நந்தினி முகமலர்ந்து அவரைத் தன் கரிய விழிகளால் பார்த்து, "நாதா! எங்கே தாங்கள் திரும்பி வருவதற்கு அதிக நாள் ஆகிவிடுமோ என்று பார்த்தேன். நல்ல வேளையாக வந்து விட்டீர்கள்!" என்றாள். அவளுடைய முகத்தைப் பார்த்து அந்தக் குரலைக் கேட்டதும் பழுவேட்டரையரின் கோபாவேசமெல்லாம் பறந்துவிட்டது. அனலில் இட்ட மெழுகைப் போல் உருகிப் போனார். அசட்டுச் சிரிப்பு ஒன்று சிரித்து, "ஆமாம்; போன காரியம் முடிந்துவிட்டது; திரும்பி விட்டேன்" என்றார்.

பிறகு கந்தமாறனைப் பார்த்து, "இந்தப் பிள்ளை இங்கே என்ன செய்கிறான்? ஏதாவது காதற் கவிதை புனைந்து கொண்டு வந்து கொடுத்தானோ?" என்று கேட்டுவிட்டுத் தம்முடைய பரிகாசத்தைக் குறித்துத் தாமே சிரித்தார்.

கந்தமாறனுடைய முகம் சிவந்தது. ஆனால் நந்தினி பழுவேட்டரையரைவிட அதிகமாகச் சிரித்துவிட்டு, "இவருக்குக் காதலும் தெரியாது; கவிதையும் தெரியாது. சண்டை போட்டுக் காயமடையத்தான் தெரியும். நல்ல வேளையாகக் காயம் ஆறிவிட்டது. ஊருக்குப் போக வேண்டுமென்று சொல்லிக் கொண்டிருந்தார்!" என்றாள்.

"இந்தக் காலத்துப் பிள்ளைகளின் வீரத்தைத்தான் என்னவென்று சொல்வது? இருபத்துநாலு யுத்தகளங்களில் நான் அறுபத்து நாலு காயங்கள் அடைந்தவன். ஆனால் ஒரு தடவையாவது படுக்கையில் படுத்ததில்லை.

இவனுக்குக் காயம் குணமாக ஒரு பட்சத்துக்கு மேலாகி யிருக்கிறது. ஆனால் என் காயங்களெல்லாம் மார்பிலும் தோளிலும் தலையிலும் முகத்திலும் ஏற்பட்டவை. இந்தப் பிள்ளை முதுகிலே காயம் பட்டவன் அல்லவா? அதனால் இவ்வளவு நாள் ஆகிவிட்டது. நியாயந்தான்!'' என்று கூறிப் பரிகாசச் சிரிப்பு சிரித்தார்.

கந்தமாறன் கொதித்து எழுந்து, ''ஐயா! தாங்கள் என் தந்தையின் ஸ்தானத்தில் உள்ளவர். அதனால் தங்களுடைய பரிகாசத்தைப் பொறுத்தேன்!'' என்றான்.

''இல்லாவிட்டால், என்ன செய்திருப்பாயடா?'' என்று பழுவேட்டரையர் கேட்டுத் தம் உறையிலிருந்த கத்தியில் கையை வைத்தார்.

நந்தினி இச்சமயம் குறுக்கிட்டாள். ''நாதா! இவருக்கு முதுகில் மட்டும் காயமில்லை, நெஞ்சிலும் காயம் பட்டிருக்கிறது என்பது தங்களுக்குத் தெரிந்ததுதானே! இவர் தம்முடைய சிநேகிதன் என்று நினைத்துக் கொண்டிருந்தவன் இம்மாதிரி முதுகில் குத்திப் போட்டுவிட்டுப் போய் விட்டான் என்ற எண்ணம் இவர் நெஞ்சில் பெரிய புண்ணை உண்டாக்கி யிருக்கிறது. முதுகில் காயம் ஆறியும் நெஞ்சில் புண் ஆறவில்லை. அந்தப் புண்ணில் கோல் இடுவதுபோல் நாம் பேசக் கூடாதுதானே? அன்றிரவு, இவர் காயம் பட்ட அன்றிரவு, என்ன நடந்தது என்று தங்களுக்குத் தெரியாதா, என்ன?'' என்று சொல்லிக் கொண்டே நந்தினி பழுவேட்டரையரைப் பார்த்த பார்வையில் மறை பொருள் ஏதோ இருந்திருக்க வேண்டும்! பழுவேட்டரையரின் முகத் தோற்றம் உடனே மாறிவிட்டது!

''ஆமாம்; நீ சொல்வது சரிதான்! பாவம், இவன் அறியாப் பிள்ளை. இவன் தந்தையோ என் பிராண சிநேகிதர். இவன் ஏதோ தெரியாத்தனமாகக் கூறியதை நான் பொருட்படுத்தக் கூடாதுதான். அது கிடக்கட்டும். நந்தினி! ஒரு முக்கியமான விஷயம்



சொல்வதற்காக இப்போது வந்தேன். அது இவனுக்கும் தெரிந்திருக்க வேண்டியதுதான். இலங்கை மாதோட்டத்தில் ஒருவனை ஒற்றன் என்று சந்தேகித்துப் பிடித்திருக்கிறார்களாம். அவனிடம் இளவரசன் அருள்மொழிவர்மனுக்கு ஓலை ஒன்றிருக்கிறதாம். அங்க அடையாளங்களிலிருந்து அவன் நம் கந்தமாறனுடைய அழகான சிநேகிதனாயிருக்கலாமென்று நினைக்கிறேன். அவன் பெரிய கைகாரனாய்த்தானிருக்க வேண்டும். நம் ஆட்களிடம் அகப்படாமல் தப்பி இலங்கைக்குச் சென்று விட்டான், பார்!'' என்றார் பழுவேட்டரையர்.

நந்தினியின் முக பாவத்தில் அப்போது ஏற்பட்ட ஒரு கண நேர மாறுதலை மற்ற இருவரும் கவனிக்கவில்லை.

''அடே! தப்பிச் சென்று விட்டானா? இலங்கைக்கா போய்விட்டான்?'' என்று கந்தமாறன் ஏமாற்றத்துடன் கூறினான்.

''நாதா! அவன் தப்பிச் சென்றது எனக்கு ஒன்றும் அதிசயமாய்த் தோன்றவில்லை. தங்கள் சகோதரர் இந்தக் கோட்டைக் காவலுக்குத் தகுதியற்றவர் என்றுதான் எத்தனையோ தடவை சொல்லியிருக்கிறேனே! அவர் அனுப்பிய ஆட்களும் அப்படித்தானே இருப்பார்கள்?'' என்றாள் நந்தினி.

''முன்னெல்லாம் நீ அப்படிச் சொன்னபோது எனக்கு அது சரியாகப்படவில்லை. இப்போது எனக்குக் கூட அப்படித்தான் தோன்றுகிறது. இன்னும் ஒரு விந்தையைக் கேள்! மாதோட்டத்தில் அகப்பட்ட ஒற்றனிடம் நமது பழுவூர் இலச்சினை ஒன்று இருந்ததாம். அது அவனிடம் எப்படிக் கிடைத்தது என்று அவன் சொல்லவில்லையாம்!....''

நந்தினி இலேசாக ஒரு பெருமூச்சு விட்டுவிட்டு, ''இது என்ன வேடிக்கை? பனை இலச்சினை அவனிடம் எப்படிக் கிடைத்ததாம்? தங்கள் சகோதரர் இதற்கு என்ன சொல்கிறார்?'' என்றாள்.

''அவனா? அவன் சொல்வதைக் கேட்டால் உனக்குச் சிரிப்பு வரும்! அந்தப் பனை இலச்சினை உன்னிடமிருந்துதான் அவனிடம் போயிருக்க வேண்டுமென்கிறான் காலாந்தகன்!'' என்று சொல்லிவிட்டுப் பழுவேட்டரையர் இடிஇடி யென்று சிரித்தார். அந்தச் சிரிப்பினால் லதா மண்டபமே குலுங்கியது போலிருந்தது. அரண்மனை நந்தவனத்து மரங்கள் எல்லாம் சிலிர்த்து நடுநடுங்கின.

நந்தினியும் அவருடன் சேர்ந்து சிரித்துக் கொண்டே, ''என் மைத்துனர் இருக்கிறாரே, அவருக்கு இணையான புத்திக் கூர்மை படைத்தவர் இந்த ஈரேழு பதினாலு உலகத்திலும் கிடையாது!'' என்றாள்.

''இன்னும் உன் மைத்துனன் என்ன சொல்கிறான் தெரியுமா? நல்ல வேடிக்கை! அதை நினைக்க நினைக்க எனக்குச் சிரிப்பு வருகிறது! தஞ்சைக் கோட்டை வாசலில் நீ பல்லக்கில் வந்து கொண்டிருந்தபோது உன்னை அந்த இந்திரஜித்து சந்தித்துப் பேசினானாம். பிறகு இந்த அரண்மனைக்குள்ளும் அந்த மாயாவி வந்திருந்தானாம். ஆகையால் நீயே அவனிடம் பழுவூர் இலச்சினையைக் கொடுத்திருக்க வேணுமாம்! அப்படியில்லாவிட்டால், உன்னிடம் யாரோ ஒரு மந்திரவாதி அடிக்கடி வருகிறானே, அவன் மூலமாகப் போயிருக்க வேண்டுமாம்! தன்னுடைய முட்டாள் தனத்தை மறைப்பதற்காக அவன் இப்படியெல்லாம் கற்பனை செய்து உளறுகிறான்!'' என்று கூறிப் பழுவேட்டரையர் தமது நீண்ட பற்கள் எல்லாம் தெரியும்படியாக மறுபடியும் ஹஹ்ஹஹ்ஹா என்று சிரித்தார்.

''என் மைத்துனருடைய அறிவுக் கூர்மையைப் பற்றி நான் சந்தேகித்தது ரொம்பத் தவறு. அவருடைய அறிவு உலக்கைக் கொழுந்துதான்! சந்தேகமில்லை! ஆனால் இதையெல்லாம் நீங்கள் கேட்டுக் கொண்டு சும்மா இருந்ததை நினைத்தால்தான் எனக்கு வியப்பாயிருக்கிறது!'' என்றாள் நந்தினி. அவளுடைய முக பாவம் மறுபடியும் மாறி, அதில் இப்போது எள்ளும் கொள்ளும் வெடித்தது. கண்களில் தீப்பொறி பறந்தது.

வீராதி வீரரும் போர்க்களத்தில் எத்தனையோ வேல் வீச்சுகளை இறுமாந்து தாங்கியவருமான பெரிய பழுவேட்டரையர் நந்தினியின் சிறு கோபத்தைத் தாங்க முடியாமல் தடுமாறினார். அவருடைய தோற்றத்திலும் பேச்சிலும் திடீரென்று ஒரு தளர்ச்சி காணப்பட்டது.

''தேவி! நான் அதையெல்லாம் சும்மா கேட்டுக் கொண்டிருந்தேன் என்றா நினைக்கிறாய்? அவனுடைய கையினாலாகாத்தனத்தைப் பற்றி மிகக் கடுமையாகப் பேசி அவனை அழ வைத்து விட்டேன். நீ பார்த்திருந்தால் அவன் பேரில் இரக்கம் அடைந்திருப்பாய்!'' என்றார்.

இதை யெல்லாம் கேட்டுக் கொண்டிருந்த கந்தமாறன் பாடு சங்கடமாகி விட்டது. நந்தினியினிடம் அவனுக்குச்

சிறிது பயமும் பழுவேட்டரையரிடம் இரக்கமும் அவமதிப்பும் ஏற்பட்டன. இந்தச் சதிபதிகளின் தாம்பத்ய விவகாரத்தில் சிக்கிக் கொள்ளாமல் அங்கிருந்து போய்விட விரும்பினான். தொண்டையைக் கனைத்துக் கொண்டு ''ஐயா!....'' என்றான்.

நந்தினி குறுக்கிட்டு, ''என் மைத்துனர் சாமர்த்தியத்தைப் பற்றிப் பேசுகையில் இவரை நாம் மறந்து விட்டோம். இவர் ஊருக்குப் போகிறேன் என்று சொல்கிறாரே, போகலாம் அல்லவா?'' என்று கேட்டாள்.

''நன்றாய்ப் போகலாம். இத்தனை நாள் இங்கு இவன் தங்கியிருந்தது பற்றியே இவனுடைய தந்தை கவலைப் பட்டுக் கொண்டிருப்பார்!''

''இவரிடம் ஓலை ஒன்று கொடுத்து அனுப்ப விரும்புகிறேன். கொடுக்கலாம் அல்லவா?''

''ஓலையா? யாருக்கு?''

''காஞ்சியிலுள்ள இளவரசருக்கு!''

பழுவேட்டரையர் நந்தினியையும் கந்தமாறனையும் சந்தேகக் கண்ணால் பார்த்து, ''இளவரசருக்கு ஓலையா? நீயா எழுதுகிறாய்? எதற்கு?'' என்று கேட்டார்.

''இளையபிராட்டி தம்பிக்கு ஓலை எழுதி இவர் சிநேகிதரிடம் அனுப்பியிருக்கிறார். பழுவூர் இளைய ராணி அண்ணனுக்கு ஏன் ஓலை எழுதக் கூடாது? எழுதி இவரிடம் ஏன் அனுப்பக் கூடாது?'' என்றாள் நந்தினி.

''இவன் சிநேகிதன் கொண்டு போன ஓலை இளைய பிராட்டி குந்தவை எழுதிய ஓலையா? உனக்கு அந்த விஷயம் எப்படித் தெரிந்தது?'' என்று பழுவேட்டரையர் கேட்டார்.

''பின்னே எதற்காக என்னிடம் மந்திரவாதி அடிக்கடி வருகிறானாம்? அவன் மந்திரத்தின் மூலமாகத் தெரிந்தது. என் மைத்துனர் ஆட்களின் இலட்சணம்தான் தெரிந்திருக்கிறதே! பழுவூர் பனை இலச்சினை அவனிடம் இருப்பதாகக் கண்டுபிடித்துக் கொண்டு வந்து சொன்னவர்கள் ஓலை குந்தவை அனுப்பியது என்று சொல்லவில்லை, பாருங்கள்!''

''இலச்சினையைப் பற்றியும் நம் ஆட்கள் சொல்லவில்லை. அன்பில் பிரம்மராயர் இராமேசுவரம் போய் விட்டுத் திரும்பி வந்திருக்கிறார். அவர் கொண்டு வந்த செய்தி....''

''அந்தப் பிராம்மணனாவது குந்தவை தேவியின் ஓலையைப் பற்றித் தங்களிடம் சொன்னாரா?''

''இல்லை!''

''நாதா! நான் தங்களுக்கு எச்சரித்ததை எண்ணிப் பாருங்கள். இந்த ராஜ்யத்தில் உள்ள அவ்வளவு பேரும் சேர்ந்து தங்களை வஞ்சிக்கப் பார்க்கிறார்கள் என்று நான் சொல்லவில்லையா? இது உண்மை என்பது இப்போதாவது தங்களுக்குத் தெரிகிறதா? மந்திரவாதி சொன்னதை மட்டும் நான் நம்பிவிடவில்லை. கோடிக்கரையிலிருந்து சிறைப்படுத்திக் கொண்டு வந்த வைத்தியர் மகனையும் அழைத்து வரச் செய்து விசாரித்தேன். அவனும் அதை உறுதிப்படுத்தினான். இளையபிராட்டி தன் தம்பிக்கு ஓலை அனுப்பியிருப்பதாகச் சொன்னான்!'' என்றாள் நந்தினி.

பழுவேட்டரையருக்குக் கண்ணைக் கட்டிக் காட்டிலே விட்டது போலிருந்தது. கந்தமாறனை அவர் அருவருப்புடன் பார்த்தார். அந்தச் சிறு பிள்ளையைப் பக்கத்தில் வைத்துக் கொண்டு இதையெல்லாம் பேசுவது அவருக்குப் பிடிக்கவில்லை.

இதைக் குறிப்பினால் உணர்ந்த நந்தினி, ''நம்முடைய கதை இருக்கவே இருக்கிறது. இவருடைய பிரயாணம் ஏன் தாமதிக்க வேண்டும்?'' என்று கூறிவிட்டுக் கந்தமாறனைப் பார்த்து, ''ஐயா! காஞ்சி இளவரசரிடம் இந்த ஓலையை நேரே கொண்டு போய்க் கொடுக்க வேண்டும். கொடுத்து விட்டு, அவர் மறு ஓலை கொடுத்தால் சர்வ ஜாக்கிரதையாக அனுப்பி வைக்க வேண்டும். தங்களுடைய கடம்பூர் மாளிகைக்கு இளவரசரை அழைப்பதற்கு மறந்துவிட வேண்டாம்!'' என்றாள்.

''என் தந்தையிடம் என்ன சொல்ல? இது பழுவூர் மன்னரின் விருப்பம் என்று சொல்லலாம் அல்லவா?'' என்று கந்தமாறன் சற்றுத் தயக்கத்துடன் கேட்டான்.

''தாராளமாய்ச் சொல்லலாம். என்னுடைய விருப்பந்தான் பழுவூர் மன்னரின் விருப்பமும். நாதா! நான் சொல்வது சரிதானே?'' என்றாள் நந்தினி.

''ஆமாம், ஆமாம்!'' என்று பழுவேட்டரையர் தலையை அசைத்தார். அவருக்கு ஒன்றும் புரியவில்லை. தலை கிறுகிறுத்தது. நந்தினியை எதிர்த்துப் பேசவும் அவரால் இயலவில்லை.

ஃ ஃ ஃ

கந்தமாறன் சென்ற பிறகு நந்தினி பழுவேட்டரையர் மீது தன் காந்தக் கண்களைச் செலுத்தி, கொஞ்சும் கிளியின் குரலில், ''நாதா! என்னிடம்

தங்களுக்கு நம்பிக்கை குன்றிவிட்டதாகத் தோன்றுகிறது! என் மைத்துனருடைய துர்ப்போதனை ஜயித்து விட்டதுபோல் காண்கிறது!'' என்றாள்.

''ஒரு நாளுமில்லை, நந்தினி! என் கையில் பிடித்த வேலிலும், அரையில் செருகிய வாளிலும் எனக்கு நம்பிக்கை குறைந்தாலும் உன்னிடம் நம்பிக்கை குறையாது. வீர சொர்க்கத்தில் நான் நம்பிக்கை இழந்தாலும் உன் வார்த்தையில் நம்பிக்கை இழக்கமாட்டேன்!'' என்றார்.

''இது உண்மையானால், அந்தச் சிறு பிள்ளையை வைத்துக் கொண்டு, என்னிடம் அவ்வளவு கேள்வி கேட்டீர்களே, ஏன்? எனக்கு அவமானமாயிருந்தது!'' என்று நந்தினி கூறிய போது, அவள் கண்களில் கண்ணீர் பெருகத் தொடங்கியது.



பழுவேட்டரையர் துடிதுடித்துப் போனார். ''வேண்டாம், என் கண்ணே! இப்படி என்னைத் தண்டிக்க வேண்டாம்!'' என்று கூறி, நந்தினியின் கண்களில் பெருகிய கண்ணீரைத் துடைத்துச் சமாதானம் செய்தார்.

''ஆயினும் உன்னுடைய காரியங்கள் சில எனக்கு அர்த்தமாகவில்லை. என்ன, ஏது, எதற்காக என்று கேட்க எனக்கு உரிமை இல்லையா?'' என்றார்.

''கேட்பதற்குத் தங்களுக்கு உரிமை உண்டு; சொல்வதற்கும் எனக்கு உரிமை உண்டு. யார் இல்லை என்றார்கள்? அன்னியர்கள் முன்னால் கேட்க வேண்டாம் என்றுதான் சொன்னேன். என்ன வேண்டுமோ இப்போது கேளுங்கள்!'' என்றாள்.

''ஆதித்த கரிகாலனுக்கு நீ எதற்காக ஓலை கொடுத்து அனுப்புகிறாய்? கடம்பூர் மாளிகைக்கு எதற்காக அவனை அழைக்கச் சொல்லுகிறாய்? அவன் அல்லவா நம்முடைய யோசனை நிறைவேறுவதற்கு முதல் விரோதி?'' என்றார் பழுவேட்டரையர்.

''இல்லை, இல்லை! ஆதித்த கரிகாலர் நம் முதல் விரோதி இல்லை. அந்தப் பழையாறைப் பெண் பாம்புதான் நம் முதல் விரோதி. அவளை எதற்காக நம் அரண்மனைக்கு நான் அழைத்தேன்? அந்தக் காரணத்துக்காகவே தான் ஆதித்த கரிகாலனைக் கடம்பூருக்கு அழைக்கச் சொல்கிறேன். நாதா! நான் அடிக்கடி சொல்லி வந்திருப்பதை இப்போது ஞாபகப்படுத்திக் கொள்ளுங்கள். இளைய பிராட்டி குந்தவை தன் மனத்துக்குள் ஏதோ ஒரு தனி யோசனை வைத்திருக்கிறாள் என்று சொல்லி வந்தேன் அல்லவா? அது என்னவென்று இப்போது கண்டுபிடித்து விட்டேன். மற்ற எல்லாரையும் விலக்கிவிட்டு அவளுடைய இளைய சகோதரன் அருள்மொழி வர்மனைத் தஞ்சாவூர் சிம்மாசனத்தில் ஏற்றி வைக்க அவள் தீர்மானித்திருக்கிறாள். அதற்காகவே அவள் இலங்கைக்குத் தூதனை அனுப்பியிருக்கிறாள். அதற்காகவே இப்போது தஞ்சைக்கு வந்திருக்கிறாள். அவளுடைய சூழ்ச்சிக்கு எதிர்ச் சூழ்ச்சி செய்து அவளுடைய நோக்கம் நிறைவேறாமல் செய்ய வேண்டும். காஞ்சிக்கு நான் ஓலை அனுப்பியதன் காரணம் இப்போது தெரிகிறதல்லவா?'' என்று நந்தினி கேட்டுவிட்டுப் பழுவேட்டரையரைப் பார்த்த பார்வை அவருடைய நெஞ்சை ஊடுருவி அவர் அறிவை நிலைகுலையச் செய்தது.

ஒன்றும் தெரியாவிட்டாலும், ''ஆம், தெரிகிறது!'' என்று குழறினார் அந்த வீரக் கிழவர்.

''நாதா! தாங்களும் தங்கள் முன்னோர்களும் புரிந்த அரும் பெரும் வீரச் செயல்களினாலேயே இன்று இந்தச் சோழ சாம்ராஜ்யம் இவ்வளவு பல்கிப் பரவியிருக்கிறது. இந்தத் தஞ்சை புரியின் தங்கச் சிங்காதனத்தில் ஒரு நாளாவது தங்களை ஏற்றி வைத்துப்

பார்க்கும் வரையில் இந்தப் பாவியின் கண்கள் இரவிலும் பகலிலும் தூங்கப் போவதில்லை! அதற்குள்ளே எந்த விதத்திலாவது தங்களுக்கு என்பேரில் சந்தேகம் ஏற்படும் பட்சத்தில் தங்கள் உடை வாளினால் என்னை ஒரே வெட்டாக வெட்டிக் கொன்று விடுங்கள்!'' என்றாள் நந்தினி.

''என் கண்ணே! இத்தகைய கர்ண கடூரமான மொழிகளைச் சொல்லி என்னைச் சித்திரவதை செய்யாதே!'' என்றார் பெரிய பழுவேட்டரையர்.

இருபத்தைந்தாம் அத்தியாயம்

மாதோட்ட மாநகரம்

நமது கதாநாயகன் வந்தியத்தேவனை நாம் விட்டுப் பிரிந்து நெடுங்காலம் ஆகிவிட்டது. தஞ்சையிலேயே அதிக நாள் தங்கி விட்டோம். சில நாள்தான் என்றாலும் நெடுங்காலமாகத் தோன்றுகிறது.

இந்தச் சில நாளைக்குள் வந்தியத்தேவன் ஈழத்துக் கடற்கரையோடு நடந்து சென்று பாலாவி நதிக்கரையில் இருந்த மாதோட்ட மாநகரை அடைந்திருந்தான்.

இராமேசுவரக் கடலுக்கு அப்புறத்தில் ஈழநாட்டுக் கடற்கரையில் இருந்த அம்மாநகரம் திருஞானசம்பந்தர் காலத்திலும் சுந்தரமூர்த்தியின் காலத்திலும் இருந்தது போலவே இப்போதும் பசுமையான மரங்கள் அடர்ந்த சோலைகளினால் சூழப்பட்டுக் கண்ணுக்கு இனிய காட்சி அளித்தது. மாவும், பலாவும், தென்னையும், கமுகும், கதலியும், கரும்பும் அந்தக் கரையைச் சுற்றிலும் செழித்து வளர்ந்திருந்தன. அந்த மரங்களில் வானரங்கள் ஊஞ்சலாடின; வரி வண்டுகள் பண்ணிசைத்தன; பைங்கிளிகள் மழலை பேசின.

அந்நகரின் கோட்டை மதில்களின் மேல் கடல் அலைகள் மோதிச் சலசலவென்று சத்தம் உண்டாக்கின.

மாதோட்ட நகரின் துறைமுகத்தில் பெரிய மரக்கலங்கள் முதல் சிறிய படகுகள் வரையில் நெருங்கி நின்றன. அவற்றிலிருந்து கரையில் இறக்கப்பட்ட பண்டங்கள் மலை மலையாகக் குவிந்து கிடந்தன.

இவையெல்லாம் சம்பந்தர் — சுந்தரர் காலத்தில் இருந்தது போலவே இருந்தாலும், வேறு சில மாறுதல்கள் காணப்பட்டன. மாதோட்ட நகரின் வீதிகளில் இப்போது கேத்தீசுவரர் ஆலயத்துக்குச் செல்லும் அடியார்கள் கூட்டத்தை அதிகம் காணவில்லை. பக்தர்கள் இறைவனைப் பாடிப் பரவசமடைந்த இடங்களிலெல்லாம் இப்போது போர்வீரர்கள் காணப்பட்டனர். கத்தியும் கேடயமும் வாளும் வேலும் கையில் கொண்ட வீரர்கள் அங்குமிங்கும் திரிந்தார்கள்.

சென்ற நூறு ஆண்டுகளுக்கு அதிகமாக அந்த நகரம் ஒரு யுத்த கேந்திர ஸ்தலமாக விளங்கி வந்தது. தமிழ் நாட்டிலிருந்து ஈழத்துப் போருக்கு வந்த படைகள் பெரும்பாலும் அங்கே



தான் இறங்கின. திரும்பிச் சென்ற படைகளும் அங்கேதான் கப்பல் ஏறின. நகரம் பல தடவை கைமாறிவிட்டது. சில சமயம் இலங்கை மன்னர்களிடமும் சில சமயம் பாண்டிய அரசர்களிடமும் அது இருந்தது. பராந்தக சக்கரவர்த்தியின் காலத்திலிருந்து சோழர்களின் ஆதிக்கத்தில் இருந்து வந்தது.

அத்தகைய யுத்த கேந்திர நகரத்தின் கோட்டை மதில் வாசலில் ஒரு நாள் வந்தியத்தேவன் வந்து நின்றான். நகருக்குள் போக வேண்டும் என்றான். சோழ சேனாதிபதியைப் பார்க்க வேண்டும் என்றான். காவலர்கள் அவனை உள்ளே விட மறுத்தார்கள். அதன் பேரில் முன்னர் கடம்பூரில் கையாண்ட யுக்தியை அவன் இங்கும் கையாண்டான். காவலர்களைப் பலவந்தமாகத் தள்ளிக் கொண்டு உள்ளே நுழையப் பிரயத்தனம் செய்தான்.

காவலர்கள் அவனைச் சிறைப்பிடித்துக் கோட்டைத் தலைவனிடம் கொண்டு போனார்கள். வந்தியத்தேவன் கோட்டைத் தலைவனிடம் இளவரசர் அருள்மொழிவர்மருக்கு முக்கியமான ஓலை கொண்டு வந்திருப்பதாகவும் அதைப் பற்றிச் சோழ சேனாதிபதியிடம்தான் விவரம் சொல்ல முடியும் என்றும் கூறினான். அவனைப் பரிசோதித்துப் பார்த்தார்கள். பொன்னியின் செல்வனுக்கு ஓர் ஓலையும் பழுவூர் பனை இலச்சினையும் அவனிடம் இருக்கக் கண்டார்கள்.

கொடும்பாளூர்ப் பெரிய வேளார் பூதிவிக்கிரம கேசரி அச்சமயம் இலங்கைப் படையின் சேனாதிபதியாக இருந்தார். அவரிடம் போய்ச் சொன்னார்கள். பூதி விக்கிரமகேசரி அப்போது முதன்மந்திரி அநிருத்தராயருடன் பேசிக் கொண்டிருந்தார். அவருடன் ராமேசுவரம் வரை போவதற்கு ஆயத்தமாக இருந்தார். ஆகையால் திரும்பி வந்து விசாரிப்பதாகவும் அது வரையில் அந்த வீரனைக் காவலில் வைத்திருக்கும்படியும் சொல்லிவிட்டுப் போனார்.

பிறகு வந்தியத் தேவனை அழைத்துப் போய் ஒரு பாழடைந்த மாளிகையில் ஓர் அறையில் தள்ளிப் பூட்டினார்கள். வாசலில் காவலும் போட்டார்கள்.

வந்தியத்தேவன் நீண்ட வழிப் பிரயாணத்தினால் களைப்படைந்திருந்தான். ஆகையால் தன்னைச் சிறைப்படுத்தியது குறித்து அவன் மகிழ்ந்தான். இரண்டொரு நாள் அலைச்சலின்றி ஓய்வு பெறலாம் அல்லவா?

முதல் நாள் அவனுக்கு அத்தகைய ஓய்வு கிடைத்தது. ஆனால் இரண்டாம் நாள் ஒரு தொல்லை ஏற்பட்டது.

அவன் இருந்த அறைக்கு அடுத்த அறையில் ஏதேதோ விசித்திரமான சத்தங்கள் கேட்கத் தொடங்கின. யாரோ ஒருவன் இன்னொருவனை அதட்டி மிரட்டினான். அவனுடைய வீரப் பேச்சுக்கள் பிரமாதமாயிருந்தன. ''இந்தா!'' ''சீச்சீ!'' ''போ போ!'' ''கிட்ட வராதே!'' ''அருகில் வந்தாயோ கொன்று விடுவேன்!'' ''அடித்து நொறுக்கி விடுவேன்!'' ''ஜாக்கிரதை!'' ''உன் உயிர் உன்னுடையதல்ல!'' ''யம லோகத்துக்கு அனுப்பி விடுவேன்!'' ''ஒரே உதையில் உன் உயிர் போய்விடும்!'' என்று இப்படியெல்லாம் அடுத்த அறையில் ஒருவன் இரைந்து கொண்டிருந்தான். யாரைப் பார்த்து இப்படி அவன் வீர வாதமிடுகிறான் என்று தெரியவில்லை. ஒரே குரல்தான் கேட்டதே தவிர, அதற்கு எதிர்க் குரல் கேட்கவில்லை. ஒருவேளை யாராவது பைத்தியம் பிடித்த போர் வீரனா யிருக்குமோ என்ற சந்தேகம் ஏற்பட்டது. அப்படியென்றால் இரவெல்லாம் தூக்கமில்லாமல் செய்து விடுவானே? கொஞ்சம் தூங்கலாம் என்றால் அதற்கும் இடையூறு நேர்ந்து விட்டதே!...

''சொன்னால் கேட்க மாட்டாயா? சும்மாப் போக மாட்டாயா! சரி,சரி! உன்னை என்ன செய்கிறேன், பார்!''

இந்த வார்த்தைகளுக்குப் பிறகு தொப்பென்று அவனுடைய அறையில் வந்து ஏதோ விழுந்தது. படுத்திருந்த வந்தியத்தேவன் தூக்கிவாரிப் போட்டு எழுந்தான். விழுந்தது என்னவென்று உற்றுப் பார்த்தான். உடனே அவனையறியாமல் சிரிப்பு வந்தது. கலகலவென்று சிரித்தான். ஏனெனில், அடுத்த அறையிலிருந்து அப்படி வேகமாக வந்து விழுந்தது ஒரு பூனை என்று தெரிந்தது!

''ஓஹோ! உனக்குச் சிரிக்க வேறே தெரியுமா? சிரி! சிரி! மறுபடியும் இங்கே மட்டும் வராதே!'' என்று அந்தக் குரல் சொல்லியது.

யாரோ பைத்தியக்காரன் என்பதில் சந்தேகமில்லை. இல்லாவிட்டால் பூனையுடன் இவ்வளவு வாதமிடுவானா? அல்லது பூனை மனிதரைப் போல் சிரிக்கும் என்றுதான் எண்ணுவானா? ஆனால் அதிலும் ஓர் அதிசயம் என்னவென்றால், அப்படியெல்லாம் பேசிய குரல் அவனுக்குத் தெரிந்த குரலோ என்ற சந்தேகம் உண்டாயிற்று. எங்கேயோ, எப்போதோ கேட்ட குரலாகத்தான் தோன்றியது. ஆனால் யாருடைய குரல்? எங்கே கேட்ட குரல்? நினைத்து நினைத்துப் பார்த்தும் ஞாபகம் வரவில்லை!

எப்படியாவது இருக்கட்டும், யாராகவாவது இருக்கட்டும் என்று எண்ணி வந்தியத் தேவன் படுத்துக் கொண்டான். கண்ணை மூடித் தூங்கப் பார்த்தான். ஆனால் தூங்க முடியவில்லை. சற்று நேரத்துக்கெல்லாம் உள்ளங்கால்களில் ஏதோ வழ வழவென்று தட்டுப்பட்டது. கண்ணைத் திறந்து பார்த்தால் பூனை அங்கே படுத்திருந்தது. அட கடவுளே! இதைக் கால்மாட்டில் வைத்துக் கொண்டு எப்படித் தூங்குவது? உதைத்துத் தள்ளினான். பூனை நகர்ந்து சென்றது. கண்ணை மூடினான். மறுபடியும் அவன் பக்கத்தில் கையில் ஏதோ மிருதுவாகத் தட்டுப்பட்டது. கண்ணைத் திறந்து பார்த்தால் பூனை அவன் பக்கத்தில் வந்து படுத்துக் கொண்டு செல்லம் கொஞ்சிக் கொண்டிருந்தது.

மறுபடியும் கையினால் பிடித்துத் தள்ளினான். பூனை தூரச் சென்றது.

மீண்டும் கண்ணை மூடினான். தலைமாட்டில் வந்து பூனை படுத்துக் கொண்டு வாலினால் அவனுடைய நெற்றியைத் தடவத் தொடங்கியது.

வாளையும் வேலையும் அச்சமின்றித் தாங்கக் கூடிய அவ்வீரனுக்குப் பூனை தன் வாலினால் தடவும் அனுபவத்தைத் தாங்க முடியவில்லை. எழுந்து பூனையை அதன் கழுத்தைப் பிடித்துத் தூக்கினான். அவனுடைய அறைக்கும் அடுத்த அறைக்கும் மத்தியில் இருந்த சுவரின் உச்சியில் கொஞ்சம் இடிந்து பொக்கை விழுந்திருந்தது. அதன் வழியாகப் பூனையைத் தூக்கி எறிந்தான்.

அடுத்த அறையில் சிறிது நேரம் ஒரே ரகளையா யிருந்தது. மனிதக் குரலின் கூப்பாட்டுடன் பூனையின் கராமுரா சத்தமும் சேர்ந்து கொண்டது. சற்று நேரத்துக்குப் பிறகு, ''போ! தொலை!'' என்ற குரல் கேட்டது. பூனையின் மியாவ் மியாவ் சத்தம் கொஞ்ச தூரம் வரையில் சென்று மறைந்தது. பிறகு நிசப்தம் நிலவியது.

வந்தியத்தேவன் கண்ணயர்ந்தான். அரைத் தூக்க நிலையில் ஒரு கனவு கண்டான். மிக இன்பமான கனவு. இளைய பிராட்டி குந்தவை அவன் அருகில் வந்து உட்கார்ந்து அவன் நெற்றியைத் தடவிக் கொடுத்தாள். ஆகா! பூனையின் வாலுக்கும் இளவரசியின் கைவிரலுக்கும் எத்தனை வித்தியாசம்!

சட்டென்று மறுபடியும் விழிப்பு வந்தது. கனவு கலைந்துவிட்டதே என்று வருத்தமா யிருந்தது.

அடுத்த அறையிலிருந்து யாரோ சுவரைத் தட்டினார்கள். அந்தப் பைத்தியமாகத்தான் இருக்க வேண்டும்.

''யார் அங்கே? பூனையை எடுத்து எறிந்தது யார்?''

வந்தியத்தேவன் மறுமொழி சொல்லவில்லை; மௌனமா யிருந்தான். ஆ இது என்ன, பூனை பிராண்டுவது போன்ற சத்தம் மறுபடியும்! இல்லை. இல்லை! யாரோ அப்புறத்தில் சுவரில் ஏறுவதற்கு முயல்கிறார்கள்.

வந்தியத்தேவன் எழுந்திருக்கவில்லை. படுத்தபடியே கவனமாய்க் காது கொடுத்துக் கேட்டுக் கொண்டிருந்தான். ஆனால் முன் ஜாக்கிரதையாகக் கைமட்டும் கத்திப் பிடியில் இருந்தது.

சுவரின் உச்சியில் இருந்த பொக்கையில் முதலில் இரு கைகள் தெரிந்தன. பிறகு ஒரு முண்டாசு தெரிந்தது. முண்டாசுக்கடியில் ஒரு முகம் மேலே வந்து குனிந்து பார்த்தது.

ஆ! இவன் ஆழ்வார்க்கடியான் அல்லவா? தலைப்பாகை கட்டியிருப்பதால் தோற்றத்தில் சிறிது மாறியிருக்கிறான். ஆனால் ஆழ்வார்க்கடியான் என்பதில் சந்தேகமில்லை.

இவன் எதற்காக, எப்படி இங்கே வந்தான்? நாம் இருப்பது தெரிந்து தான் வந்திருக்க வேண்டும்! உதவி செய்ய வந்திருக்கிறானா? அல்லது இடையூறு செய்ய வந்திருக்கிறானா?

வந்தியத்தேவன் எழுந்து உட்கார்ந்து, ''ஓ வீர வைஷ்ணவரே! வருக! வருக! சிவபுண்ய ஸ்தலமாகிய திருக்கேதீசுவரத்துக்கு வருக வருக!'' என்றான்.

''தம்பி! நீதானா? நினைத்தேன்! வேறு யார் இவ்வளவு அழுக்குப் பிள்ளையாராகக் குரல் காட்டாமல் உட்கார்ந்திருக்க முடியும்?'' என்று ஆழ்வார்க்கடியான் சொல்லிக்கொண்டு அறையில் குதித்தான். **(தொடரும்)**

கடற் கரையிலுள்ள உழைப்பாளர் சிலையின் படம்தான் இங்கு உள்ளது. இந்நிலையில் உள்ள உழைப்பாளர்களுக்குத் திடீரென்று உயிர் வந்துவிடுகிறது என்று வைத்துக் கொள்ளுங்கள். அப்போது அவர்கள் ஒவ்வொருவரும் கூறும் முதல் வாக்கியம் என்னவாக இருக்கும்?


நன்கு யோசித்து எழுதி அனுப்புங்கள். பிரசுரமாகும் வாக்கியங்கள் பரிசு பெறும். பிரசுரமாகாதவற்றைத் திருப்பி அனுப்புவதற்கில்லை.

முடிவுத் தேதி: ஜூன் 15 உறையின் மேல் உயிர் பெற்றால்...? எனக் குறிப்பிடவும். - கருத்து: கு.க.ர.





தலையெடுக்கும் தலைநகரம்



மகேந்திரரும் மாமல்லரும் புகழுடன் அரசாண்ட பரந்த பல்லவ சாம்ராஜ்யத்தின் தலைநகர் காஞ்சி. வைணவமும் சைவமும் சமணமும் பௌத்தமும் அவற்றுடன் வட மொழியும் தமிழும் பல்வேறு கலைகளும் தழைத்த தலம்...இன்று...!

இராஜவீதிகள் மேலும் அகலப்படுத்தப்பட்டுள்ளன. போக்குவரவு இன்னும் அதிகமாகி வருகிறது. க்ஷேத்திர தரிசனத்துக்காக வந்து போவோர், பட்டாடைகளுக்கு வந்து போவோர் தொகையுடன் அரசாங்க நிர்வாக அலுவல்களுக்காக வந்து போவோர் தொகையும் கூடுகிறது. காஞ்சியின் முக்கியத்துவம் மேலும் உயர்ந்திருக்கிறதே! அது செங்கல்பட்டு மாவட்டத்தின் தலைநகரமாயிற்றே!

தலைநகர் அந்த மாவட்டத்துக்கு உள்ளேயே இப்போது அமைந்து விட்டது! பல வருஷங்களாக மாவட்ட மக்கள் கோரிய விருப்பம் செயல்பட்டு விட்டது! பிறை வடிவமாய், சென்னை நகரத்தைச் சூழ்ந்திருக்கும் இந்த மாவட்டத்தின் நிர்வாகப் பிரிவுகள் இத்தனை ஆண்டுகளாகச் சிதறிக் கிடந்தன. சென்னை நந்தனத்தில் கலெக்டர் இருப்பார், சைதாப்பேட்டையில் கல்வி அதிகாரிகள் காரியாலயம், பரங்கிமலையில் போலீஸ் நிர்வாகம், செங்கல்பட்டில் நீதி மன்றம் — என்று, மாவட்டத்தினரின் எந்தத் தாலுகாவினருக்கும் திருப்தி தராத ஒரு நிலை. ஏன், எவருக்கும் அலுப்பூட்டும் ஒரு நிலை சென்ற ஆண்டு வரை இருந்து வந்தது.

''இந்தத் தலைநகர மாறுதலால் தற்போது விசேஷ நன்மை தெரிகிறதா ?''

''பேஷாகத் தெரிகிறது!'' என்று உற்சாகமாகத் தெரிவித்தார் மாவட்ட கலெக்டர். ''முதலில் மனோபாவத்தில், விரும்பத்தக்க சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. நான் என் மக்களின் இடையில் இருப்பதை இப்போது பிரத்தியட்சமாக உணர்கிறேன். நந்தனத்தில் இருந்தபோது என் நிர்வாகிகளுக்குச் செங்கல்பட்டு மாவட்டப் பிரச்னைகள் நேரடி உணர்வு தெரியாது. வெறும் எட்டிஉள்ள விஷயங்களாக இருந்தன. இப்போது அவர்கள் காட்டும் அக்கறையே வேறுதான்.''

''இருந்தாலும் இப்போதும் மாவட்டத்தின் ஒரு கோடியில்தான் தலைநகரம் இருக்கிறது. மாவட்டத்தின் மறு கோடியில் இருப்பவர்களுக்கு இதனால் கஷ்டம் இருக்காதா ?''

தலைநகர மாறுதலின்போது உடன் இருந்து நிறைவேற்றிய கலெக்டர் திரு லக்ஷ்மிகாந்த பாரதியின் அபிப்பிராயம் இது:

''இந்த இடம், மதுராந்தகம், காஞ்சி, செங்கல்பட்டு, திருவள்ளூர், திருக்கழுக்குன்றம் போன்ற ரெவினியூ பகுதிகளுக்கு மையமானது. பொன்னேரி கும்மிடிப்பூண்டி பகுதிகளுக்குத் தொலைவானதுதான். அதற்காகவே நான் வெள்ளிக்கிழமை தோறும் காலை நேரங்களில் நந்தனம் போவது வழக்கம். அந்தப் பகுதி மக்கள் நீண்ட பயணம் செய்யாமல் என்னைப் பார்க்க முடிந்தது. இன்னொன்று. பிற மாவட்டங்களிலே தலைநகரத்துக்கும் தூரத்து ஊருக்கும் இடையே உள்ள தொலைவைவிட இங்கே தூரம் அதிகம் இல்லை. மதுரை — பழனிக்கு உள்ள தூரத்தை விட இந்தத் தலைநகரம் மாவட்டத்தின் பிற ஊர்களுக்கு அருகில்தான் உள்ளது.

''நந்தனத்திலே செயலகம் உள்ளபோது எப்போது பார்த்தாலும் மக்கள் கலெக்டர் ஆபீசில் கூடியிருப்பார்கள். இப்போது முக்கிய வேலை இருந்தால் மட்டும் வருகிறார்கள். எங்கள் ஊழியர்களும் கணிசமாகவும் விரைவாகவும் பணியாற்ற முடிகிறது.''

''சென்னையிலிருந்து இந்த முக்கிய அலுவலகத்தைக் காஞ்சிக்கு மாற்றியதால் ஊழியர்கள் பாதிக்கப்படவில்லையா? இவர்கள்

வருகையால் காஞ்சி நகரம் பாதிக்கப்பட்டுள்ளதா?''

விசாரித்தபோது தெரிந்த விவரம் இது: ''சுமார் இருநூறு பேர் அங்கிருந்து இங்கே மாற்றப்பட்டனர். ஆனால் அத்தனை குடும்பங்கள் இடம் பெயர்ந்ததாகச் சொல்ல முடியாது. சிலர் முன்பே காஞ்சி, செங்கல்பட்டு, தாம்பரம் போன்ற இடங்களிலிருந்து தினமும் வேலைக்கு வந்தவர்கள். சென்னை வாசிகளான ஊழியர்களுக்கு முதலமைச்சர் விசேஷச் சலுகை வழங்கி யிருக்கிறார்.

''வேறு எந்த மாவட்ட என். ஜி. ஓ.வுக்கும் இராத சௌகரியம் இந்த அலுவலகச் சிப்பந்திகளுக்குக் கிடைக்கப் போகிறது. இங்கே எதிரிலே இருபது லட்ச ரூபாய் திட்டத்தில் ஊழியர்களுக்காக 230 குடியிருப்புக்கள் கட்டப்படுகின்றன. ஆபீசுக்கு அருகிலேயே வீடு. ஊருக்கு வெளியே நகரத்தில் தொல்லையற்று ஆரோக்கியமாக இருக்கலாம். அதேசமயம் நகரத்துக்கு மிக அருகிலே அதன் வசதிகளை அனுபவிக்கவும் முடியும்.''


காஞ்சி நகரத்துக்கும் இந்தத் தலைநகர மாற்றத்தால் நன்மை என்றுதான் சொல்ல வேண்டும். நகர அபிவிருத்தி வேலைகளால் பலருக்கும் வேலை வாய்ப்புக் கிடைக்கும். இப்போது உடனடியாகச் சாலைகள் அகலமாக்கப்பட்டு, போக்குவரவு வசதிகள் விஸ்தரிக்கப் பட்டுள்ளன. தொழிற்பேட்டை ஒன்றும் உருவாகி வருகிறது. வேறு சில புதுத் திட்டங்களும் உள்ளனவாம்.

''இந்தத் தலைநகர மாற்றத்தால் வீட்டு வாடகை ஒரேயடியாக ஏறிப் போச்சு. அதுதான் முதல் பலன்!'' என்றார் டவுன் பஸ்ஸில் கூட வந்த உள்ளூர்வாசி ஒருவர்.

''இந்த மாறுதலால் ஊர் ஜனத் தொகையோ, வந்து போவோர் எண்ணிக்கையோ ஒன்றும் கணிசமாக அதிகப்பட்டதாகத் தோன்றவில்லை'' என்றார் ராமாஸ் கபே ஸ்ரீ நடராஜ ஐயர்.


''இவ்வளவு பெரிய ஊரில் சட்டென்று கலெக்டருக்கு ஒரு நல்ல வீடு கிடைக்கவில்லை. வாட்டர் ஒர்க்ஸ் பங்களாவைத்தான் சில சொற்ப மாறுதல்கள் செய்து கொடுத்தோம். சொந்த சௌகரியங்களைப் புறக்கணித்து அவர் அனுசரித்துப் போவது, மற்றவர்களுக்கு வழிகாட்டியாக இருக்கிறது. போகப் போக இங்கே லாட்ஜிங் வசதிகளை அதிகமாக்க வேண்டி வரலாம். அதனாலும் நகராட்சிக்கு வருமானம் கூடும். சாலைகளை அகலப்படுத்தியாயிற்று. நகரத்தில் சுகாதார வசதிகளை அதிகரிக்கவும் பெரிய அளவில் பாதாளச் சாக்கடை அமைக்கவும் ஏற்பாடு செய்யப் போகிறோம்'' என்றார் கமிஷனர் திரு ரங்கசாமி.

சுமார் பன்னிரண்டு சதுர கிலோ மீட்டர் பரப்பில் தற்போது 13,500 வீடுகளுள்ள நகரத்தில் வளரும் நகரத்துக்குப் புது வீடுகள் கட்டித் தரும் தனியார் கூட்டுறவு நிறுவனம் ஒன்று தொடங்கப்பட்டுள்ளது. மாமல்லன்



வீடு கட்டும் சங்கச் செயலாளர் திரு கந்தஸ்வாமி, நான்கைந்து ஆண்டுகளில் மனையின் மதிப்பு ஐம்பது சதவிகிதத்துக்கு மேல் ஏறிவிட்டதாக அறிவிக்கிறார்.

காஞ்சியிலிருந்து சென்னையில் கோட்டைக்கும் பிற ஸ்தாபனங்களுக்கும் நாள்தோறும் பல ஊழியர்கள் வேலைக்கு வருவதும், அவர்களுக்கென்றே விசேஷ ரயில் விடுவதும் சாதாரணம். தற்போது சிலர் சென்னையிலிருந்து நாள்தோறும் காஞ்சிக்கு வேலைக்குப் போகின்றனர்! இதற்கென ரயில் வசதி இராததால் பஸ்ஸில்தான் போய்வர வேண்டி யிருக்கிறது. பஸ் கட்டணத்துக்கும், ரயில்வே சலுகைக் கட்டணத்துக்கும் உள்ள வித்தியாசத்தை இத்தகைய அரசாங்க ஊழியர்களுக்கு வழங்கவும் முதலமைச்சர் ஒப்புக்கொண்டுள்ளதாகத் தெரிகிறது. இத்தகையோர் எண்ணிக்கை குறைவு தான். சென்னையிலே குழந்தைகள் படிப்பு நீடிக்க வேண்டும் என்று இரண்டு இடங்களில் குடித்தனம் போடுவதை விடப் பிரயாணச் செலவே மேல் என்றே நினைக்கத்



காஞ்சி பஸ் நிலையம் ☐

காஞ்சி ஏகாம்பரநாதர் கோயிலின் உட்புறக் காட்சி ☐

தலைநகர் மாறியபோது - விழாவில் கலெக்டர் ☐
லக்ஷ்மிகாந்த பாரதியும், அண்ணாவும்

கலெக்டர் காரியாலயம் ☐

தோன்றுகிறது. ஆகவே, டெபுடி தாசில்தார் திரு ரத்தின சபாபதி காலை ஆறரை மணிக்கு சாந்தோம் பட்டினப்பாக்கத்தில் புறப்பட்டால், இரவு ஒன்பதரைக்கு வீடு திரும்புகிறார்!

''பண்டை நாளில் முக்கிய நகரமாக விளங்கிய காசி, உஜ்ஜயினி, மதுரை போன்ற நகரங்களில் எல்லாம் இன்று பல்கலைக்கழகங்கள் தோன்றியுள்ளன. காஞ்சியிலேயும் அவ்விதம் ஒரு பல்கலைக்கழகம் நிறுவும் எண்ணம் இருக்கிறதா?''

காஞ்சி நகர வளர்ச்சி குறித்துச் சிந்தனையும் செயலும் நிரம்பிய மாவட்ட கலெக்டர் தெரிவித்த கருத்து இது: ''எத்தனையோ பல்கலைக் கழகங்கள் போல மேலும் ஒரு பல்கலைக் கழகம் ஏற்படுத்துவதில் என்ன பயன்? உழைப்பும் சம்பிரதாயங்களும் இரட்டிப்பது தான் மிச்சம். கலைகள் செழித்த இந்தக் காஞ்சியில் 'கலா க்ஷேத்திரம்' போல ஒரு கல்விக் கூடம் இருந்தால் அர்த்தமுண்டு. நுண்கலைகளைப் பயில ஒரு கேந்திரம் அமைக்க முடியுமா என்று சிந்தித்து வருகிறோம். தற்போது இங்கே ஒரு கல்லூரி இருக்கிறது. பெண்கள் கல்லூரியும் சென்ற ஆண்டு வந்து விட்டது.''

புற்று நோய் வந்து விட்டால் குணப்படுத்தச் செலவு அதிகம். அந்த நோய் வருவதற்கு முன்பே தடுத்து விட்டால் எவ்வளவு நன்மை? நார்வே டாக்டர் புரொபசர் ஈக்கர் என்பவர் உதவியுடன் இங்கே ''கான்சர் டிடெக்ஷன் சென்டர்'' ஒன்று தொடங்கியிருக்கிறார்கள். இருபது வயதான எந்தப் பெண்ணையும் சோதித்தால் பிற்காலத்தில் கர்ப்பத்தில் புற்றுநோய் தோன்றுவதற்கான வாய்ப்பு உண்டா என்பது தெரியுமாம். அது போல் ஆண்களுக்கு வாயைச் சோதித்துப் பார்த்தாலும் தெரியுமாம்.

வெளிநாட்டு யாத்திரிகர்கள் தற்போது சென்னையிலே தங்கி, மாமல்லபுரம், காஞ்சி போன்ற ஊர்களை அவசரக் கோலத்தில் பார்த்துவிட்டு விரைகிறார்கள். இனி இவர்கள் காஞ்சியிலேயே தங்கி விவரமாகப் பார்வையிட வசதியாக இங்கே அரசாங்க ஹோட்டல் ஒன்று அமைக்கப்பட இருக்கிறது.

ரயில்வேயைப் பொறுத்தவரை அரக்கோணம் — செங்கல்பட்டு கிளைப் பாதையில் ஒரு சாதாரண நிலையம் 'கஞ்சீவரம்'. ஊரின் மையத்திலிருந்து ரயிலடி தள்ளியிருக்கிறது. பாஸஞ்சர் தவிர வேறு ரயில் போகாது. ஊரை ரயிலும், ரயிலை ஊரும் ஒதுக்கிவைத்த ஒரு நிலை! பஸ்தான் போக்குவரத்தின் ஜீவநாடி. பண்டங்கள் லாரிகளிலேதான் ஏற்றிச் செல்லப்படுகின்றன. காலை நாலு மணியிலிருந்தே பஸ் நிலையம் சுறுசுறுப்புடன் இயங்குகிறது. தென்னார்க்காடு, வடார்க்காடு, செங்கல்பட்டு மாவட்டங்கள் பலவற்றுடனும் சென்னை நகருடனும் தொடர்புள்ள சாலை — ஜங்ஷன் காஞ்சிபுரம். 'மிதக்கும் ஜனத்தொகை' என்னும் தொடருக்கு விளக்கம் தருவன போன்று ஜனம் நிரம்பிய பஸ்கள் ஓயாமல் விரைந்த வண்ணம் இருக்கின்றன.

—தம்பி சீனிவாசன்

படித்துப்பாருங்கள்!

பறக்கும் பூக்கள்

வண்ணாத்திப் பூச்சிகளின் காது அவற்றின் மார்பில்தான் அமைந்துள்ளது! அவற்றுக்கு மார்பின் அடியில காதறு நிறைந்த ஓர் அறையும் அதில் மெல்லிய ஒரு தோலும் உண்டு. ஒலி அலைகள் அந்தத் தோலின் மீது மோதும் போது அது அதிர்கிறது. அந்த அதிர்வுச் சலனம் ஒலியாக மாறி வண்ணாத்திப் பூச்சிகளுக்கு உணர்த்துகிறது. இவ்வாறு வண்ணாத்திப் பூச்சிகள் ஒலிகளை அனுபவித்து அறிகின்றன.....

இந்த விதமாக வண்ணாத்திப் பூச்சிகளைப் பற்றிய பல சுவையான — விஞ்ஞான ரீதியான — விஷயங்களை விளக்குகிறது பறக்கும் பூக்கள் என்ற சிறுவர் சிறுமியருக்கான நூல். ஏராளமான அழகிய வண்ணப் படங்கள் உள்ளன. படிப்பதற்கு வசதியான கொட்டை எழுத்து. பூக்களுக்கும் மனிதனுக்கும் வண்ணாத்திப் பூச்சிகள் எவ்விதம் பயன்படுகின்றன என்பதையும் வண்ணாத்திப் பூச்சிகளைத் துன்புறுத்தாத வகையில் எப்படிச் சிறுவர்கள் பிடித்து வளர்க்கலாம் என்பதையும் விளக்குகிறார் ஆசிரியர்.

யுனெஸ்கோ உதவியுடன் தென் மொழிகள் புத்தக டிரஸ்ட் ஆதரவில் பிரசுரிக்கப் பட்டது. கிடைக்குமிடம்: அன்னை நிலையம், சென்னை—17; எழுதியவர்: குமாரபுரம் தேவதாஸ்; தமிழாக்கம்: மணவை மூஸ்தபா; விலை: ரூ. 3.50.

இதோ 'தேவன்!'

தலைப்பைக் கொண்டே வாசகர் வட்டம் தேவனை அறிமுகப்படுத்துகிறது என்பதை உள்ளங்கை நெல்லிக் கனியாக — இல்லை பொரிவிளங்காயாகப் புரிந்து கொள்ளலாம்.

தேவனின் படைப்பு முதன் முதலாக நூல் வடிவம் பெற்றது இந்தத் தொகுப்பு மூலம்தான்.

அவரது ஆரம்பகால எழுத்தில் தொடங்கிப் பக்குவம் அடைந்தபின் பிறந்த படைப்புகள் ஈருக மாதிரிக்குச் சிலவற்றை தொகுத்துக் கொடுத்திருந்தால், அவரது எழுத்தின் வளர்ச்சியை உணர்ந்து கொள்வதற்கு உதவியிருந்திருக்கும்.


அப்படியில்லாமல் அங்கொன்றும் இங்கொன்றுமாகப் பொறுக்கித் தந்திருக்கும் இத்தொகுப்பு 'தேவன்' ரசிகர்களுக்கு மன நிறைவு தராது. 'இதோ தேவன்' என்னும் இந்த அறிமுகம் 'தேவன் இப்படியா இருப்பார்?' என்றே சிந்திக்க வைக்கும்.

ஆயினும், 'துப்பறியும் சாம்பு'விலிருந்து ஒரு நிகழ்ச்சி, 'கங்காவின் சங்கட'த்தை மல்லாரி ராவ் கதையாகப் புனைந்து கூறும் அழகு போன்றவற்றைப் படிக்கும் பொழுது, 'இதோ, தேவன்!' இருக்கிறார் என்று வாசகர்கள் மகிழலாம்.

பிரசுரம்: வாசகர் வட்டம், சென்னை—17; விலை: ரூ. 5 00.

'ஆஸ்ப்ரோ'

மட்டுமே மைக்ரோஃபைன்ட் செய்யப்படுகிறது அதிவேகமாக வலியை வெளியே இழுப்பதற்காக



கீழ்க் கண்டவைகளுக்கு புதிய மைக்ரோ ஃபைன்ட் 'ஆஸ்ப்ரோ' சாப்பிடுங்கள்:
நோவு • தலைவலி • உடல்வலி • ஃப்ளு • ஜுர வேகத்துடன் கூடிய ஜலதோஷம் • மூட்டுவலி • தொண்டை அழற்சி • பல்வலி.

புதிய மைக்ரோஃபைன்ட் 'ஆஸ்ப்ரோ' இப்பொழுது கிடைக்கும் அதி நவீனமான வலி நிவாரணியாகும்.



புதிய மைக்ரோஃபைன்ட்
'ஆஸ்ப்ரோ' அதிவேகமாக
வலியை வெளியே இழுத்துவிடுகிறது.

நிகோலஸ் (N) தயாரிப்பு

AG.37.TAM



9. வேள்வி காத்தது

ராஜாஜி

காலையானதும் முனிவர் சக்கரவர்த்தித் திருமகனைப் பக்கத்தில் உட்கார வைத்து, ''அப்பனே! உனக்கு மங்களம். என் உள்ளம் திருப்தி அடைந்தது. நீ செய்த காரியத்துக்காக உனக்கு நான் செய்யக்கூடிய கைம்மாறு என்ன இருக்கிறது? இப்போது உனக்கு அஸ்திர உபதேசம் செய்யப் போகிறேன்; பெற்றுக் கொள்வாயாக'' என்று சொல்லி முறைப்படி ராமசந்திரனுக்கு .தம் தவத்தினால் பெற்ற சகல திவ்யாஸ்திரங்களையும் உபதேசித்தார்.

அந்தந்த அஸ்திரங்களைப் பிரயோகிக்கவும் அவற்றை அடக்கிப் பின் திருப்பவும் உரிய மந்திரங்களையெல்லாம் உபதேசித்தார். அஸ்திரங்களுக்குரிய தேவதைகளும் ராமனுக்குப் பிரத்யட்சமாகத் தரிசனம் தந்துவிட்டு, ''உன் உத்தரவுக்கு அடங்கி எல்லாம் செய்வோம்'' என்று சொல்லி மறைந்தன. ராமசந்திரனும் அவற்றையெல்லாம் தம்பி லக்ஷ்மணனுக்கு உபதேசித்தான்.

அஸ்திர மந்திரங்களை ராமன் சரியாகப் பெற்றான் என்பதைப் பரீக்ஷை செய்து திருப்தியடைந்த பிறகு, ''இந்த அஸ்திரங்களைக் கொண்டு தேவாசுர கந்தர்வ உரகர்களையும் நீ யுத்தத்தில் அழித்து வெற்றி பெறுவாய்'' என்று ராமனை முனிவர் ஆசீர்வதித்தார்.

கொஞ்ச தூரம் நடந்து சென்றபின் ராமன் முனிவரைக் கேட்டான்: ''அதோ, அங்கே தெரிகிறதே பெரிய மலையும் ரமணீயமான வனமும்; அதுவா நாம் போக வேண்டிய இடம்? உங்கள் வேள்வியைக் கெடுக்கும் துராத்மாக்கள் யார்? அவர்களை ஒழித்துத் தீர்க்க நாம் என்னவெல்லாம் செய்ய வேண்டும்? எனக்கு விவரமாகச் சொல்லுவீர்'' என்றான்.

ராமசந்திரனுடைய கை துடித்தது. யுத்தம் செய்து வெற்றி பெற்று முனிவருடைய ஆசீர்வாதத்தைப் பெற ஆவல் கொண்டான்.

''அப்பனே! அந்த இடம் தான் நாம் போக வேண்டிய இடம். அதுவே ஆதிநாராயணன் முன்னாள் தவமிருந்த இடம். மகாவிஷ்ணு வாமனனாக அவதரித்த இடமும் அதுவே. அதனாலேயே அந்த ஆசிரமத்துக்குப் பெயர் சித்தாசிரமம் என்று வழங்கி வருகிறது'' என்றார் முனிவர்.

பிரஹலாதனுடைய மகனான விரோசனனுடைய புத்திரன் மகாபலி என்ற அசுரன் புகழுடன் அரசு புரிந்தான். அவனுடைய ஆதிக்கப் பெருக்கத்தைக் கண்டு தேவர்கள் பயந்தார்கள். இந்திரன் ஆதிக்கத்தையெல்லாம் மகாபலி ஆக்கிரமித்துக் கொண்டுவிட்டான்.

இந்திரனைப் பெற்ற காசியப முனிவரும் மனைவி அதிதியும் மகாவிஷ்ணுவைக் குறித்துப் பெரும் தவம் செய்து, ''லோகநாதனே! எங்களுக்குப் புத்திரனாகவும் எங்கள் மகன் இந்திரனுக்குத் தம்பியாகவும் நீயே அவதரித்து இந்திரனையும் தேவர்களையும் மகாபலியினிடமிருந்து காப்பாற்றுவாயாக!'' என்று பிரார்த்தித்தார்கள். அதன் மேல் மகாவிஷ்ணு வாமனாவதாரம்

எடுக்கத் தீர்மானித்து அதிதிக்கு மகனுகப் பிறந்து வளர்ந்தான்.

மகாபலி செய்த ஒரு யாகத்துக்கு அழகிய சிறு பிரம்மச்சாரியாக வாமனன் சென்றுன். மகாபலியின் ஆசிரியரான சுக்கிரர் — அசுரர் குலத்துக்கு இவர்தான் குரு—விஷயத்தைத் தெரிந்து கொண்டு 'இந்தப் பிராமணன் யாசிப்பதைத் தர வேண்டாம்' என்று உச்சரித்தார்.

''மகாவிஷ்ணுவே என் யாகத்தில் வந்து யாசகம் கேட்டுப் பெறுவதை விட எனக்கு என்ன மேலான நன்மை உண்டு?'' என்று மகாபலி தன் ஆசிரியருக்குச் சொன்னுன்.

''என் பாதத்தால் அளந்த மூவடிப் பிரதேசம் வேண்டும்'' என்று சிறுவன் கேட்டதை மகாபலிச் சக்கரவர்த்தி, ''தந்தேன்'' என்று ஜலம் வார்த்துத் தந்து விட்டான்.

வாமனன் உடனே திரிவிக்கிரமனுகி வளர்ந்தோங்கிப் பூவுலகம் ஓரடியாலும் வானுலகம் ஓரடியாலும் அளந்து விட்டான். மூன்றுவது அடியாகத் தன் திருப்பாதத்தை நாராயணன் மகாபலிக்கு அபயம் என்று அவன் தலைமேல் வைத்தான். உலகப் பரப்புக்குச் சமானம் பக்தனுடைய தலை என்பது இந்தக் கடைசி நிகழ்ச்சியின் பொருள். ஏழு சிரஞ்சீவிகளுள் ஒருவன் ஆனுன் மகாபலி.

இந்தப் புண்ணிய கதையைச் சொல்லி, ''ஆதியில் நாராயணன் தவமிருந்ததும், பிறகு காசியபர் தவம் செய்து தேவர்களைக் காப்பாற்ற வாமனனைப் பெற்றதுமான இந்த இடம் சித்தாசிரமம் என்கிற பெயர் பெற்றது. இந்தப் புண்ணியப் பிரதேசத்தில் நானும் ஆசிரமம் அமைத்து அதில் இருந்து வருகிறேன். என்னுடைய வேள்விக்குத் தடையாக அரக்கர்கள் அந்த வனத்துக்கு வந்து வேதனை செய்கிறுர்கள். யாகம் நடைபெறுமல் செய்து விடுகிறுர்கள். இப்போது நீ வந்திருப்பதே அவர்களுடைய முடிவு'' என்றுர் விசுவாமித்திரர்.

'' அப்படியே ஆகுக '' என்றுன் ராமன்.

அரச குமாரர்களுடன் விசுவாமித்திரர் வந்து விட்டதைக் கண்டு அங்குள்ள



மற்ற ரிஷிகள் மிக மகிழ்ச்சியடைந்து ஒருவர்பின் ஒருவராக வந்து முனிவரை வணங்கி வரவேற்றார்கள். ராஜகுமாரர்களுக்கும் முறைப்படி அதிதி பூஜை செய்து அமர்ந்தார்கள்.

"இன்றே தாங்கள் யாக தீக்ஷை எடுக்கலாம்" என்று சக்கரவர்த்தித் திருமகன் பரபரப்புடன் முனிவருக்குச் சொன்னான். அவ்வாறே விசுவாமித்திரர் வேள்வித் தொடக்கத்துக்கு உரிய விரதம் அன்றிரவே எடுத்துக் கொண்டார்.

மறு நாள் காலை சீக்கிரமாகவே ராஜ குமாரர்கள் எழுந்து யாகசாலையிலிருந்த முனிவரை வணங்கி, "ராக்ஷசர்கள் எப்போது வருவார்கள்? நாம் அஜாக்கிரதையாக இருக்கக் கூடாதல்லவா? எங்களுக்கு விவரமாகச் சமயத்தைத் தெரியப்படுத்த வேண்டும்" என்றார்கள்.

அங்கிருந்த ரிஷிகள் இதைக் கேட்டு வெகு சந்தோஷம் அடைந்தார்கள்.

"முனிவர் விசுவாமித்திரர் மௌன விரதத்திலிருக்கிறபடியால் இனிப் பேச மாட்டார். ஆறு நாட்கள், இரவும் பகலும் நீங்கள் தூங்காமல் யாகத்தைக் காப்பாற்ற வேண்டும்" என்றார்கள்.

ராஜகுமாரர்கள் வில்லும் கையுமாக ஆறு நாட்கள் இரவும் பகலும் காத்தார்கள். ஆறாவது நாள் காலையில் லக்ஷ்மணனுக்கு ராமன் சொன்னான்: "தம்பி! இப்போது வெகு ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். இது தான் அரக்கர்கள் வரும் சமயம்" என்றான்.

இதைச் சொல்லும்போதே அக்னி குண்டத்திலிருந்து நெருப்பு கொழுந்து விட்டு எழுந்தது. ராக்ஷசர்கள் ஆகாயத்தில் வந்து நின்றது அக்னிக்குத் தெரியும். யாக காரியம் சகலமும் கிரமமாக நடந்து கொண்டிருக்க, மேலே ஆகாயத்தில் ஒரு பெரும் கர்ஜனை கேட்டது. ராமன் மேலே பார்த்தான்.

மாரீசனும் சுபாஹுவும் அவர்கள் பரிவாரமும் அசுத்த மாமிசமும் ரத்தமும் கொண்டு வேதிகையின் மேல் சொரிந்து யாகத்தைக் கெடுக்க ஆயத்தமாக நின்றதைக் கண்டான். ஆகாயம் முழுவதும் நீர்கொண்ட மேகம் மூடினாற் போல் அரக்கர் கூட்டம் நின்றது. உடனே மானவஸ்திரத்தை எடுத்து, "லக்ஷ்மணா, பார்!" என்றான் ராமன்.

அந்த அஸ்திரம் மாரீசனைத் தாக்கி அவனை நூறு யோசனை தூரம் தாண்டிக் கடற்கரையில் கொல்லாமல் வீழ்த்திற்று.

பிறகு ராமன் ஆக்னேயாஸ்திரம் விட்டான். அது சுபாஹுவைத் தாக்கி, அவன் மாண்டு விழுந்தான். பிறகு வேறு அஸ்திரங்களைப் பிரயோகித்து அரக்கர் கூட்டத்தை ராஜகுமாரர்கள் முற்றிலும் அழித்தார்கள்.

ஆகாயம் மறுபடியும் வெண்மையாகப் பிரகாசித்தது.

இவ்வாறு யாகத்தைக் கெடுக்க வந்த அரக்கர்கள் வீழ்த்தப்பட்டு ரிஷிகளுக்கு ஏதொரு தொந்தரவுமில்லாமல் காரியம் முடிந்தது. விசுவாமித்திரர் எல்லை கடந்த மகிழ்ச்சி யடைந்தார்.

"சக்கரவர்த்தி தசரதனுக்கு நன்றி செலுத்துகிறேன். அவன் ஆணைப்படி நடத்திக் கொடுத்தீர்கள். உங்களுடைய பராக்கிரமத்தைப் பாராட்டுகிறேன். இந்த ஆசிரமம் மறுபடியும் எங்களுக்குச் சித்தாசிரமம் ஆயிற்று" என்று சொல்லி ராஜகுமாரர்களை ஆசீர்வதித்தார்.

அன்றிரவு ராஜ குமாரர்கள் சித்தாசிரமத்தில் தூங்கிக் களைப்புத் தீர்த்துக் கொண்டார்கள்.

மறுநாள் காலை நியமங்களை முடித்துவிட்டு ராமர் லக்ஷ்மணர்கள் முனிவர் முன் நின்று வணங்கி, "என்ன உத்தரவு?" என்றார்கள்.

அவதார ரகசியம் முனிவருக்குத் தெரிந்ததுதான். உபதேசித்துத் தந்த அஸ்திரங்களின் வல்லமையும் அவர் அறிந்ததே. ஆயினும் எதிர் பார்ப்பது வேறு. எடுத்த காரியம் முடிந்து அதை நேரில் அனுபவிக்கும் மகிழ்ச்சி வேறு.

விசுவாமித்திர முனிவருக்குச் சொல்லொணாச் சந்தோஷம். அவர் முகம் அக்னி ஜ்வாலையைப் போல் பிரகாசித்தது. இன்னும் ராமசந்திரனுக்குத் தாம் செய்ய வேண்டிய பணியைப் பற்றி நினைக்கலானார். அதுவே சீதா கலியாணம்.

அங்கு கூடிய ரிஷிகளும் விசுவாமித்திரரும் ராமரை நோக்கிச் சொன்னார்கள்:

"நாங்கள் மிதிலைக்குப் போவதாக இருக்கிறோம். ராஜ சிரேஷ்டரான ஜனகர் ஒரு யாகம் செய்யப் போகிறார். அங்கே நாம் அனைவரும் போகப் போகிறோம். ராஜ குமாரர்களும் நம்முடன் போவது நல்லது. ஜனகருடைய அற்புத வில்லைச் சக்கரவர்த்தித் திருமகன் தரிசித்தல் தகும்."

அவ்வாறே நிச்சயம் செய்தார்கள். ராம லக்ஷ்மணர்கள் விசுவாமித்திரருடன் மிதிலைக்குச் சென்றார்கள்.

(தொடரும்)





ஏழைகளுக்கு உதவிய ஏழை!

இவருடைய தலையாய குறிக்கோள், 'குறைவாகச் செலவழி; நிறையக் கற்றுக்கொள்' என்பதுதான்.

அமரகவி பாரதி அமைதியாகவும் மனத்தைத் தொடும்படியும், ''அன்ன சத்திரங்கள் ஆயிரம் கட்டுவதைவிட ஓர் ஏழைக்கு எழுத்தறிவித்தல் மேலானது'' என்ற கருத்தமைந்த பாடலைப் பாடினார்.

திருச்சியைப் பிறந்த இடமாகவும், மதுரையை வளர்ந்து தற்போது வாழும் இடமாகவும் கொண்டுவிட்ட திரு எஸ். ராமகிருஷ்ணன் பி. ஏ.; பி. எல். அவர்களும் அமரகவியின் எண்ணத்துக்கு உயிரூட்டுபவராகத் திகழ்கிறார் என்று நம்பிக்கையுடன் கூறலாம்.

ஆம்! வக்கீலுக்குப் படித்திருந்தும், அந்தத் தொழிலை நடத்தப் போதிய வசதி இல்லை எனக் கண்டவர், தனிப்பட்ட முறையில் மாணவர்களுக்குக் கல்வி கற்பிக்கலாம் என எண்ணினார். ஆனால் அப்பொழுது இவர் மிகவும் ஏழைமை நிலையிலிருந்தார்; கையில் காசில்லை; மனத்தில் தைரியம்தான் இருந்தது.

துணிந்து காபூலிவாலா ஒருவரிடம் ரூபாய் இருநூறு வட்டிக்கு வாங்கி, நாற்பது ரூபாய்க்கு ஓர் அறையை வாடகைக்கு எடுத்து நடத்தினார். முதலில் இரண்டு மாணவர்களுடன் தொடங்கிய இந்தப் பள்ளி, இருபது நாளைக்குள் ஐம்பதாகப் பெருகியது.

முதலில் மாணவர்களிடம் மூன்று பாடத்துக்கு, பத்து மாதங்களுக்கு, இவர் வாங்கிய கட்டணம் ரூபாய் ஏழு. (ஒரு பாடத்துக்கு ஒரு மாதத்துக்குப் பத்து ரூபாய் வாங்கும் இந்நாளில் இது மிக மிகக் குறைந்த கட்டணமே!)

இப்பள்ளியைப் பற்றிப் பலர் இழிவாகப் பேசினர். இவர் அதற்குத் துளியும் கலங்கவில்லை. ஆனால் இவர் எழுதி வைத்த பெயர்ப் பலகைதான் கண்ணீர் விட்டது. காரணம் —

சாதாரண அட்டையில் காவிக் கலர் 'சாக்பீஸில்' எழுதிய எழுத்துக்கள் மழை நீர் பட்டதும், கரைந்துருகிச் சிவப்பு நிறத்தில் இரத்தக் கண்ணீராகச் சொரியும்!

இன்று 'இலவசக் கல்லூரி' (Free Tutorial College) என்னும் பெயரில் நடக்கும் இவர் கல்லூரியில் முந்நூறு மாணவ மாணவிகள் நான்கு பிரிவுகளாகப் படித்து வருகிறார்கள். குறைந்த கட்டணமாதலால் ஏழை மாணவர்கள் — ஏற்கனவே தோல்வியுற்றவர்கள் — மீண்டும் கற்றுத் தேர்ச்சி பெறுகின்றனர். இதிலும் வருடத்துக்குப் பத்து மாணவர்கள் கட்டணம் செலுத்தாமல் படித்துச் செல்லுகின்றனர்.

'இலவசம்' என்பதற்கு இவர் கூறும் காரணங்கள் பல. அச்சடித்த குறிப்புகள், மை, தேர்வுக்குப் போதிய வெள்ளைத் தாள் அனைத்தும் தருகிறார். எல்லாப் பாடங்களும் கற்றுத் தருகிறார். மற்ற டுடோரியல் காலேஜுகள் வாங்கும் சம்பளத்தில் இவர் மூன்றில் ஒரு பங்கே வாங்குகிறார்.


எஸ். எஸ். எல். ஸி., பி. யூ. ஸி. மாணவர்கள் மட்டுமே பயிலுகிறார்கள்.



ஏழை மாணவர்களுக்கென்றே தம் வாழ்வை அர்ப்பணித்த இந்த இளம் வக்கீலும் ஏழைமையுடன் போராடியபடியே படித்தவர்தான்!

இவர் வக்கீலுக்குப் படித்த சமயம் இவரிடம் இரண்டு செட் உடுப்புகள்தான் இருந்தன. வடக்கத்தியர் ஒருவர் இவருக்கு வட்டியில்லாமலே ரூபாய் மூவாயிரம் கடன் கொடுத்தார்! இந்தப் பணத்தை வைத்துத்தான் இவர் வக்கீலுக்குப் படித்து முடித்திருக்கிறார்.

இந்த 'மினி கல்லூரி'யைத் தொடங்கு முன்னர் செங்கற்பட்டு மாவட்டத்தில் கலியாம்பூண்டி என்னும் ஊரில் பணி புரிந்து வந்தார். அவ்வூர் நிலைப் பள்ளியில் ஆறு மாதங்களாக விஞ்ஞான ஆசிரியரே இல்லை. பிறகு இவர் அங்கு வேலையில் சேர்ந்து மூன்று மாதங்களுக்குள் மாணவர்களை நன்கு படிக்கச்



செய்திருக்கிறார். ஆனால் சோதனைச் சாலையில் போதிய ரசாயனப் பொருட்கள் இல்லாததால் செய்முறைகளை மாணவர்களுக்கு விளக்க வசதியில்லை.

இந்தப் பள்ளிக்கு அப்பொழுது டி. இ. ஓ. மேற்பார்வையிட வந்தார். இவருடைய வகுப்புக்கு வந்த டி. இ. ஓ. மாணவர்களிடம், ''ஆக்ஸிஜன் தயாரிக்கத் தேவையான ரசாயனப் பொருள்கள் யாவை ?'' என்றார். ஒரு மாணவன் ''மங்கனீசு டை ஆக்ஸைடும், பொட்டாசியம் குளோரேட்டும் தேவை'' என்றான். உடனே டி. இ. ஓ. ''இவற்றின் நிறம் என்ன?'' என்று கேட்டார். மாணவர்கள் அவற்றைக் கண்ணால் பார்த்திருந்தால்தானே? தெரியவில்லை. ஆசிரியரைப் பார்த்தனர். ஆசிரியர் உடனே தம் தலையைத் தொட்டுக் காண்பித்தார். உடனே ஒரு மாணவன் மங்கனீசு டை — ஆக்ஸைடு கருப்பு நிறம் என்றான்! 'பொட்டாசியம் குளோரேட்டு ?' என்றவுடன் ஆசிரியர் தாம் அணிந்திருந்த வெள்ளைச் சட்டையைக் காண்பித்தார். அதனைக் கண்ட மாணவன் 'வெள்ளை' நிறம் என்றான். டி.இ. ஓ. 'சபாஷ்' போட்டு விட்டுப் போனார்!

நல்லவேளை! இவருக்கு அப்பொழுது தலை நரைக்கவில்லை! மேலும் இவர் எப்பொழுதும் வெள்ளைச் சட்டைதான் அணிவார்! இதனால் அல்லவோ தப்பித்தார்கள், ஆசிரியரும் மாணவர்களும்! ஓராண்டுப் பாடத்தை மூன்றே மாதங்களில் அப்பள்ளியில் இவரிடம் கற்றுச் சென்ற மாணவர்களுள் பதினுறில் ஒருவரே தேறவில்லை அரசினர் தேர்வில்!

தினமும் மதுரை மீனாட்சியம்மன் கோயிலில் பொற்றாமரைக் குளத்தின் படித்துறையிலுள்ள சிவலிங்கத்தின் அருகில் இவருடைய கொத்துச் சாவி சில விநாடிகள் இருந்த பிறகே இவரது 'மினி கல்லூரி' திறக்கும்!

காலை ஏழு மணிக்குக் கல்லூரியை ஆரம்பிக்கும் இவர், இரவு பத்து மணிக்குத்தான் பள்ளியை மூடுகிறார். தம் வாழ்வை மாணவர்களுக்கென்று அர்ப்பணித்த இவருக்கு வயது முப்பத்து ஒன்பது; இன்னும் திருமணமாகவில்லை. திருமணமானால் 'தாம் இவ்வளவு தூரம் மாணவர்களுடன் நெருங்கியிருக்க முடியாது' என்கிறார்!

தனிப் பயிற்சிக் கல்லூரிக்கென்று (டுடோரியல் காலேஜ்) அரசாங்கம் ஒரு சட்டம் கொண்டு வந்திருக்கிறது. அதில் தனிப் பயிற்சிக் கல்லூரிக்கென்று ஒரு விளையாட்டு மைதானம், ஒரு நூலகம் போன்ற சில அம்சங்கள் அவசியம் இருக்க வேண்டுமென அரசு எதிர்பார்க்கிறது!

இது தீவிரமாக அமுலாக்கப்பட்டால் திரு ராமகிருஷ்ணன் மிகக் குறைந்த சம்பளத்துக்கு மாணவர்களைச் சேர்த்துக் கொண்டு பயிற்சி அளிப்பது முடியாத காரியமாகி விடும். மேலும் இது பற்றி திரு ராமகிருஷ்ணன் கூறும் கருத்து கவனத்துக்குரியது: ''ஏற்கனவே மாணவர்கள் படிக்கும் நேரத்தில் விளையாடித்தான் கல்வி கற்காது. தேர்வில் தவறுகின்றனர்; தவற்றை உணர்ந்து திருந்தித் தனிப் பயிற்சிக் கல்லூரியில் படிக்க வரும்போது திரும்பவும் விளையாட்டு மைதானமா? லைப்ரரி வேண்டுமென்கிறார்கள் — பயனுள்ள புத்தகங்களைப் படிப்பதற்குப் பதிலாக ஏற்கனவே படிக்கக்கூடாத புத்தகங்களைப் படித்து மனம் கெட்டுத்தான் திருந்தி — பயிற்சிக் கல்லூரியில் ஓரளவு படிக்க எண்ணுகின்றனர்; இங்கு எதற்கு நூலகம்? மிக அவசியமான அறிவு வளர்ச்சிக்கான நூல்களை மத்திய கிளை நூலகங்களில் படித்துக் கொள்ளலாமே!''

பேட்டி: **மதுரை தங்கம்**




பெட்ரோல் கட்டிகள்

ஒரு ஜெர்மன் விஞ்ஞான ஸ்தாபனத்தின் முயற்சி வெற்றிபெறுமானால் எதிர்காலத்தில் கார் டிரைவர்கள், பெட்ரோலைக் கட்டிகட்டியாக வாங்கிக் கொள்ள வசதிப்படும். பெட்ரோலைக் கெட்டிப்படுத்தும்முயற்சியில் இந்த ஸ்தாபனம் ஈடுபட்டுள்ளது. பெட்ரோலைச் சிறு துளிகளாக்கி, அவற்றின்மீது ஒருவித பூச்சைத் தடவிக் கெட்டியாக்கிவிடுவார்கள். சூடு அல்லது அழுத்தத்தில் இப்பூச்சு கரைந்து, மீண்டும் பெட்ரோல் ஆகிவிடும். (யூ. பி. எஸ்.)


ஓரடி வைத்ததும் ஓடத் துடிக்குது
ஓங்கியெழ ஓர் சக்தி பிறக்குது..
சளைக்காத சக்தி பெற... சாதனைபுரிய ... சலிப்பூட்டும் இன்றைய வாழ்வையும் இன்ப மாக்க..வீறுகொண்டெழுவீர்! உள்ளழுந்திக் கிடக்கும் உங்-களது தென்பை விடுவித்தால் ...அதுவே வெற்றி! இதோ, அதற்கென்றே பிறந்துவரும் ஓர் அமிர்தயோக வாய்ப்பு: அஸ்ட்ரா என்ற ஒரு பாலமுத பானம். இந்தியாவில் உணவி யல் ஆராய்ச்சியிலே முன்னிற் கும் ஒரு நிலையத்தின் சிபாரிசு பெற்ற 4 டானிக் சத்துக்கள் இணைந்த ஒரு சக்திக் களஞ்சியம்! காலைதோறும் காலாரப் பருகுவீர் அஸ்ட்ரா. ஊக்கத்தின் உதயகீதம், நாள் முழுதும் சுறுசுறுப்பின் லயம்!
உள்ளுறங்கும் தென்பை உயிர்த்தெழுப்புவது
அஸ்ட்ரா
தமிழ்நாட்டிலும் கேரளத்திலும் மட்டுமே கிடைக்கிறது.
astra
HEALTH DRINK FOR VITALITY
இந்துஸ்தான் லீவர் லிமிடெட்டின் தரமான தயாரிப்பு (ரிஜிஸ்டர்டு யூஸர்ஸ்). லின்டாஸ்-AST.3-140 TM


6
அம்புலிக்கு அப்பால்...
கதை: புஷ்பா
படம்: விஜயா
ஆப்பரேஷன் தியேட்டரில் படுக்க வைக்கப் பட்டார் டாக்டர் சந்திரசேகர்.
வைத்தியமா? எனக்கா?
ஆமாம், ஒரு ஊசி போடப் போகிறோம். அது பலனளிக்க வில்லையானால் அப்புறம் சஸ்திர சிகிச்சை!
எதற்கு இதெல்லாம்?
சில உண்மைகளை உங்களிடமிருந்து வரவழைப்பதற்கு! அதாவது, ராக்கெட் பற்றிய ரகசியங்களை!
ஆயிற்று, இன்னும் ஒரு மணி நேரத்தில் புரொபசர் பேச ஆரம்பித்து விடுவார்!
அதே சமயம் முரளியின் வீட்டில் அவனும் அவன் தந்தையும் அளவளாவிக் கொண்டிருந்தார்கள்.
சே! நம்ம ஊர்ப் பத்திரிகைகளே சுத்த மோசம்! பஜாஜ் எவ்வளவு பெரிய விஞ்ஞானி அவருக்கு நேற்று பம்பாயில் கிட்னி ஆப்பரேஷன் நடந்திருக்கிறது. அதைச் சின்ன எழுத்தில், ஒரு மூலையில் செய்தியாகப் போட்டிருக்கிறார்கள்....
வெளி நாடாக இருந்தால் இந்த விஷயத்தை எவ்வளவு பிரமாதப் படுத்துவார்கள் தெரியுமா?
தந்தையின் பேச்சைக் கேட்ட முரளி திடுக்கிட்டான்.
நம்முடைய பேராசிரியர் இன்று பஜாஜைச் சந்திக்கப் போவதாகச் சொன்னாரே! அப்படியானால்.... அது யாரோ செய்த ஏமாற்று வித்தையாகத்தான் இருக்க வேண்டும்!


முரளி! எங்கே இவ்வளவு அவசரம்? அட, பதில் கூடச் சொல்லாமல் போகிறானே!
போலீஸ் ஸ்டேஷனுக்கு விரைந்து வந்தான் முரளி.
சார்! நான் புரொபசர் சந்திரசேகருடைய அஸிஸ்டெண்ட், எங்கள் பேராசிரியரை யாரோ கடத்திக் கொண்டு போய் விட்டார்கள் சார்!
என்னது!
உண்மைதான் சார்! வேறொரு பேராசிரியர் வந்திருப்பதாகச் சொல்லி, அவரைப் பார்க்க வாருங்கள் என்று சொல்லிக் கடத்திக் கொண்டு போய் விட்டார்கள்.
இந்தப் பட்டணத்தில் அவரை எங்கே என்று தேடுவது?
நல்ல வேளையாகப் புரொபஸரை அழைத்துப் போகக் கார் வந்திருப்பது தெரிந்ததும் யாரும் அறியாமல் நான் அதன் பின்புறம் பம்பருக்குக் கீழே ஓர் எலெக்ட்ரானிக் சாதனத்தைப் பொருத்தி விட்டேன். இப்போது என் காரில் உள்ள எலெக்ட்ரானிக் சாதனத்தை இயக்கினேன். அது பேராசிரியரை அழைத்துப் போன கார் நிற்கும் இடத்தை நமக்குக் காட்டி விடும்! கிளம்புங்கள் சீக்கிரம்!
இன்ஸ்பெக்டர் முரளியின் காரில் ஏறிக் கொள்ளப் பின்னால் போலீஸ் காரில் பல போலீஸார் வந்தனர்.
தாம்பரத்துக்குப் பக்கத்தில் முடிச்சூர் ரோடில் ஒரு பங்களாவுக்குப் போக வழிகாட்டியது எலெக்ட்ரானிக் சாதனம்.
தொடரும்...

சலவைக்கு சலவை...

துணிகளுக்கு அதிக ஒளியூட்டுவது ஸன்லைட்



ஸன்லைட் சோப்பினால் சலவைசெய்து பார்த்தீர்களானால் தெரியும் வெட்ட வெளிச்சமான உண்மை: சலவைக்கு சலவை உங்கள் துணிகளுக்கு அதிக ஒளி! சிறிதே தேய்த்தாலும் செழுசெழுவென்று கொழிக்கும் நுரை—தூய்மை ஓங்க வெளுக்கும் ஒளி நிரக்க. உங்கள் துணிகள் அனைத்துக்கும் உரியது ஸன்லைட்.

உங்கள் அன்றாடத் துணிகளின் சலவைக்குரியது ஸன்லைட்

லின்டாஸ்-1, 13-10 TM,

இந்துஸ்தான் லீவர் தயாரிப்பு

காட்சி 5

(டாக்டர் சரவணனிடம் கம்பௌண்டர் வேலையை ராஜினமா செய்து விட்டு வந்தவனும் மேரியின் காதலனுமான பாஸ்கரின் அறை.

இளைஞன் பாஸ்கர் தன் உடைமை களைப் பெட்டியில் திணித்துக் கொண்டு கிளம்பப் போகும் சமயம் உள்ளே நுழை கிறன் அந்தோணி! பாஸ்கரன் ஊரை விட்டே கிளம்பிவிட யத்தனிப்பதைக் கண்டு மௌனமாகவே ஜாடை காட்டி அவனைத் தன்னுடன் வருமாறு கெஞ்சு கிறன். பாஸ்கரன் முடியாது எனத் தலை யசைக்க அந்தோணி கையெடுத்துக் கும்பிட்டுத் தன் பெண்ணுக்கு வாழ் வளிக்குமாறு இறைஞ்சுகிறன். பாஸ் கரன் அவனை லட்சியம் செய்யாமல் கிளம்பும்போது அந்தோணி கைநீட்டித் தடுக்கிறன். பாஸ்கரன் கோபம் கொண்டு

காட்சி 6

(அடைக்கலம் பாதிரியாரின் இருப்பிடம். உள்ளே பாஸ்கரனின் உடலைச் சுமந்தபடி நுழை கிறன் அந்தோணி! உடலைக் கீழே போட்டு விட்டுப் பாதிரியாரின் காலடியில் விழுந்து உரிமையுடன் குலுங்கிக் குலுங்கி அழுகிறன், விலங்கு மனிதன் அந்தோணி)

அந்தோணி: *சாமீ !*

பாதிரியார்: *அந்தோணி! என்னப்பா இது?*

அந்தோணி: *நேத்து ராவுலே படுக்கை அறையிலே பாம்பு புகுந்துடுச்சு. என் மகளைத்*



ஞான ஒளி



கே. சுந்தரம்

அந்தோணியைத் தன் கையில் உள்ள பெட்டியால் அடிக்கிறன். கொடிய விலங்கு ஒன்று சீண்டி விடப்பட்டால்.....? அந்தோணியின் கை அரிவாளை ஓங்கு கிறது. அதே சமயம் லாரன்ஸ்-க்கு வாக்குக் கொடுத்தது அவனுக்கு நினைவு வரவே அரிவாளைக் கீழே போட்டுவிட்டு வெறி பிடித்தவனாக அந்த இளைஞனைத் தன் இடது கையால் ஒரு மேஜை மேல் தள்ளிக் கழுத்தை நெரித்துக் கொன்று விடுகிறன். பிறகு அவன் உடலைத் தோளில் தூக்கிப் போட்டுக் கொண்டு வெளியே செல்கிறன்.)

தீண்டின பாம்பை அடிச்சுக் கொன்னுட் டேன் சாமீ! இன்னி வரைக்கும் ஒரு ஈ எறும்புக்குக்கூடத் தீங்கு நினைச்சதில்லே சாமீ! நான் கெஞ்சினேன். கையெடுத்துக் கும்பிட்டு வாடான்னு கேட்டேன். அவன் மாட்டேன் னுட்டு என்னையே அடிச்சு என் ஆத்திரத்தைத் தூண்டி விட்டு விட்டான். என் பெண்ணைக் கெடுத்தானே என்கிற வெறியிலே அவனைக் கழுத்தை நெரிச்சுக் கொன்னுட்டேன் சாமீ! என்னை மன்னிச்சுடுங்க. எனக்குப் பாவ மன்னிப்புக் கொடுங்க சாமீ!

"இங்கே
செஞ்சு கல்யாணந்
தான் செல்லாதே!
அதனாலே தான் அங்கே
போயிட்டான்னு நினைக்கிறேன்."



(மனமொடியக் கதறுகிறாள். மௌனமாக அமர்ந்திருக்கும் பாதிரியாரின் உதடுகள் மட்டும் பிரார்த்தனையை முணுமுணுத்தபடி அசைகின்றன. அப்போது இன்ஸ்பெக்டர் லாரன்ஸ் உள்ளே நுழைகிறார்.)

லாரன்ஸ்: *அந்தோணி! அந்த இளைஞனைக் கொலை செய்ததற்காக உன்னைக் கைது செய்கிறேன். (பாதிரியாரிடம்) சாரி ஃபாதர்!*

(போலீஸ்காரர்கள் அந்தோனிக்கு விலங்கு மாட்டுகின்றனர்.)

அந்தோணி : *லாரன்ஸ்! நான் அரிவாளைத் தொடலே! கோழிக் குஞ்சை நசுக்கிறப் போலே அவனைக் கழுத்தை நெரிச்சுட்டேன். உனக்கு மட்டும் அரிவாளைத் தொடறது இல்லேன்னு சத்தியம் செய்து கொடுக்காம இருந்திருந்தா அவனை வெட்டி உருத் தெரியாமல் கூறு போட்டிருப்பேன்!*

(அதிகாரபூர்வமாக அந்தோனி கைது செய்யப்பட்டுக் கிளம்பும் நேரத்தில் மேரி ஓடி வந்து அவன் காலில் "அப்பா" என்று கதறியபடி விழுகிறாள். அந்தோணி விலகி நின்று வெறுப்புடன் பேசுகிறான்.)

அந்தோணி : *ஏய்! ஏன் என் கால்லே விழுறே? நீ ஆசை வைச்சியே உடம்பு, அதைக் கட்டிக்கிட்டு அழு! போ!*

(லாரன்ஸ், போலீஸ்காரர்கள், அந்தோணி ஆகியோர் போகின்றனர். மேரி அழுதபடியே பாதிரியார் அருகில் மண்டியிட்டு அமர்ந்து ஏதோ மெல்லிய குரலில் கூறுகிறாள். பிறகு எழுந்து வெளியே ஓடுகிறாள். செய்வதறியாது சிலையாக நிற்கிறார் பாதிரியார்.)

காட்சி 7

(போலீஸ் ஸ்டேஷன். இன்ஸ்பெக்டர் இட லாரன்ஸ் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யவேண்டி இருப்பதால் போலீஸ் ரைட்டரிடம் தாம் கூறுவதை எழுதிக் கொள்ளச் சொல்கிறார்.)

லாரன்ஸ்: *ரைட்டர்! அந்தோணி வழக்கிலே விசாரணை நடத்தப் போறேன். கேஸ் டயரி எழுதிக்கிடுங்க. (அருகிலிருந்த போலீஸ்காரர் பக்கம் திரும்பி) 172! லாக்கப்பிலேயிருந்து அந்தோணியைக் கொண்டா!*

ரைட்டர் : *சார்! லாக்கப்பிலேயிருந்து அவனை வெளியே கூட்டிக்கிட்டு வர வேணும்னு பார்க்கிறேன். வெறி பிடிச்சவனாச்சே!*



லாரன்ஸ்: *(உறுதியுடன்)*: எனக்கு அவனை நன்றாகத் தெரியும். ஒண்ணும் செய்துட மாட்டான். பயப்படாதீங்க!

(அந்தோனி லாக்கப்பிலிருந்து அழைத்து வரப்படுகிறான்.)

லாரன்ஸ் *(அந்தோனியிடம்)*: நீயாகவே தேடிக்கிட்ட முடிவு! ஆத்திரத்திலே அநியாயமா ஒருத்தனைக் கொன்னுட்டியே? ஏன் அந்த முடிவுக்குப் போனே?

அந்தோணி: லாரன்ஸ்! இந்தக் கேள்வியை நீயா என் கிட்டே கேக்கறே?

லாரன்ஸ்: உஷ்...! இது போலீஸ் ஸ்டேஷன்! நான் உன் நண்பன் லாரன்ஸ் இல்லே. இன்ஸ்பெக்டர் லாரன்ஸ். தெரியுதா? பேர் சொல்லிக் கூப்பிடக் கூடாது.

அந்தோணி: அப்படிங்களா? சரிங்க சார்!

லாரன்ஸ்: கேட்ட கேள்விக்குப் பதில். ஏன் கொலை செய்தே? ம்...?

அந்தோணி: எனக்குள்ளே ஏதோ ஒரு சக்தி.... கொலை செய்யுடான்னு சொல்லிச்சு! செய்துட்டேன்!



லாரன்ஸ்: நீ செய்தது ஒரு பயங்கரமான குற்றம்! கொலை!

அந்தோணி: அப்படிப் பார்த்தா அவன்தான் என்னை முதல்லே கொன்றான். என்னவெல்லாம் கனவு கண்டேன்! சின்னப் பிள்ளைங்க சீட்டுக் கட்டிலே வீடு கட்டி விளையாடுகிறாப் போலே என் பொண்ணோட வாழ்வு மனக் கோட்டை கட்டினதாக முடிஞ்சு போச்சு! என்றைக்கு அவன் என் வீட்டிலே நுழைஞ்சானோ அன்றைக்கே என்னைக் கொன்னுட்டாம்பா....!

லாரன்ஸ்: அப்போ? உன்னுடைய இந்த வாக்குமூலப்படி பார்த்தா நீ கொலை செய்யணும் என்கிற திட்டத்தோடே தான் அங்கே போனே! கொலையும் செய்தே! அப்படித்தானே?

அந்தோணி: லாரன்ஸ்... இல்லே, மன்னிச்சிடுங்க, சார்! பூனை தன் வாயிலேதான் குட்டியைக் கவ்விக்கிட்டுப் போகும். அப்போ அந்தக் குட்டிக்கு வலியே தெரியாது. அதே பூனை வாயாலே கவ்வினதும் எலி மட்டும் ஏன் சாகணும்? ஒண்ணு பாசம்.... இன்னொண்ணு பகை!

லாரன்ஸ்: இவ்வளவு பகுத்தறிவோடே பேசறவன் ஏன் செயல்லே மிருகமாயிட்டே?

அந்தோணி: எனக்குள்ளே இருக்கிற மிருகம் என்னைத் தப்பு செய்ய வைக்குது. செய்த பிறகுதான் தெய்வ சக்தி அந்தத் தப்பை உணர வைக்குது. இது எனக்கு அடைக்கலம் சாமி சொன்னது. நான் உனக்குச் சொல்லறேன்!

லாரன்ஸ்: நான் உன் பேரிலே இப்போ குற்றப் பத்திரிகை தாக்கல் செய்தாகணும். கேள்விக்கு எதிர்க் கேள்வி போடாமல் சரியாப் பதில் சொல்லுவியா?

அந்தோணி: நான் ஏழு வயசிலேயே கூண்டிலே நின்னவன். எனக்கு என்ன தண்டனை கிடைக்கப் போறதுன்னுதான் தெரியுமே.... கேள்வி கேட்க வேண்டிய அவசியமேயில்லையே!

(அப்போது பாதிரியார் உள்ளே நுழைகிறார்.)

லாரன்ஸ்: குட் மார்னிங் ஃபாதர்!

பாதிரியார்: மகனே! ஆண்டவன் உனக்கு அருளட்டும்!

நான் உன்னுடைய கடமையிலே குறுக்கிட றேன். என்னே மன்னிச்சுடு....

(தும் இடுங்கிய கண்களால் அந்தோனியைப் பார்த்தபடி அமைதியான அதே புன்னகை யுடன் பேசுகிறார்.)

பாதிரியார்: *என்னடா? இப்படிச் செய்த தினுலே இப்ப நீ என்னத்தைச் சாதிச்சுட்டே?*

(அந்தோனி அவர் காலடியில் குழந்தை போல் தேம்பி அழுகிறான்.)

பாதிரியார்: *ம்...யாரை நீ சொத்து, சுகம், சொந்த பந்தம்னு நினைச்சியோ, யாருக் காக வாழ்ந்தியோ, எந்த மகளுக்காக நீ இந்த முடிவுக்கு வந்தியோ அந்த மகளே போயிட்டா!*

அந்தோணி *(பதறி): என்ன சாமி, சொல்றீங்க? மேரி எங்கே சாமி போயிட்டா?*

பாதிரியார்: *சொர்க்கத்துக்கு! அங்கேதான் திருமணமே நிச்சயிக்கப்படறது! இங்கே செஞ்ச கல்யாணந்தான் செல்லாதே! அதனுலேதான் அங்கே போயிட்டாள்னு நினைக்கிறேன்.*

லாரன்ஸ்: *ஃபாதர்! நீங்க என்ன சொல் றீங்க?*

பாதிரியார்: *இது என் குடும்ப விஷயம் மாதிரி! மேரி நாலு மாதக் கர்ப்பிணி! அந்தோணி! உன்னுலே கொலே செய்யப் பட்டவனின் குழந்தையைச் சுமந்துக்கிட் டிருந்தா உன் மகள்! இதை என்கிட்டே சொல்லிட்டு அவள் வெறி பிடிச்சாப் போலே வெளியிலே ஓடினு.... என்னுலே அவளேத் தடுக்க முடியலே! அவளேத் தேடச் சொன்னேன். கிடைக்கலே. காவிரிக் கரை யோரமா இருந்த இந்தப் புடவைதான் கிடைச்சுது.*

(பாதிரியார் நீட்டிய புடவையைப் பெற்றுக் கொண்ட அந்தோனி அதில் முகம் புதைத்து அழுகிறான்.)


லாரன்ஸ்: *ஃபாதர்! ஏன் இதை இங்கே வந்து சொன்னீங்க?*

பாதிரியார்: *நாளேக்கு இவன் கேட்பானே! எங்கே, என் மகள்? ஏன் அவளேக் காப்பாற்ற வில்லே என்று? வளர்த்த பாசம்! அதோடு அதிகாரிக்குத் தெரிவிக்க வேண்டியது என் கடமையும்கூட. லாரன்ஸ்! உன்கிட்டே நான் அன்றைக்கே சொன்னேன்! ஞாபகம் இருக்கா? எது நடக்கக் கூடாதுன்னு பயந் தேனே அது நடந்திடுச்சு. ம்.... அன்பாலே நானும், அதிகாரத்தாலே நீயும் மனுஷனை மாற்றவோ, கட்டுப்படுத்தவோ முடியாத இந்த மிருகத்தைப் பாசத்தின் பிரிவாவது மனுஷனை மாற்றட்டும். அதுதான் என் ஆசை.*

(தள்ளாடியபடி போகிறார் பாதிரியார்)

(தொடரும்)

காரை ஓட்டுவது குட்டிச்சாத்தானா?



மணிக்கு எண்பது மைல் வேகத்தில் 'பறக்கிறது' இந்த மோட்டார் கார். எதிரே சாலே யில் ஒரு வளேவு. எனினும் வேகத்தைக் குறைக்காமலே செல்கிறது. சற்றுத் தூரம் போன பிறகு திடும்மென 'பிரேக்' போட்டு வேகத்தைக் குறைக்கிறது. மீண்டும் வேகத்தைக் கூட்டுகிறது. இரவு நேரத்தில் முன் விளக்குகளே எரியச் செய் கிறது.

இவை யெல்லாவற்றையும் கார் தானுகவே செய்கிறது! ஆம், இந்தக் காரை ஓட்ட டிரைவரே கிடையாது!

இந்தக் கார் சுற்றிச் சுற்றி வருவதற்கென்று ஒரு பெரிய சாலேயை ஜெர்மனியில் அமைத்திருக்கிறார்கள். இரவு பகலாகக் காரை ஓட விட்டுவிடுகிறார்கள். எலெக்ட்ரானிக் சாதனங்களால் இதன் இயக்கத்தைத் தொலேவில் ஓர் அறையில் இருந்தபடி கட்டுப்படுத்துகிறார்கள்.

இப்படி ஏதோ கண்ணுக்குப் புலனுகாத குட்டிச் சாத்தானுல் ஓட்டப் படுவதுபோல் இந்தக் கார் சுற்றிச் சுற்றி வருவதற்குக் காரணம் என்ன?

ஜெர்மனியில் கார் டயர்களே உற்பத்தி செய்யும் ஒரு ஸ்தாபனம் டயர்களின் தேய்மானம் குறித்துப் பரிசோதனேகளே இந்தவிதமாக நிகழ்த்துகிறது!

— ஸ்காரா



தீராத விளையாட்டு

கி. அழகிரிசாமி

அத்தியாயம் 9

சென்னுசிபுதூருக்கு வந்து இரண்டு நாட்கள் தங்கியது ரங்கராஜனின் சுபாவத்தையே மாற்றி விட்டதுபோல் தோன்றியது. உல்லாச புருஷனாக அவன் ஊருக்குள் நுழைந்தான். அவன் உள்ளத்தில் எந்த ஒரு கனமான சிந்தனையும் அப்போது இல்லை. அதற்கு முன் எப்போதுமே அப்படி இருந்ததில்லை என்றும் சொல்ல வேண்டும். ஊருக்குள் அடியெடுத்து வைக்கும் போதே எப்படியோ விஜயலட்சுமியின் நினைவு வந்தது; அதே நினைவு சிருங்கார மயமான ஒளி ரேகைகளாக உள்ளத்தில் அப்போது படரவும் தொடங்கியது. அது பெரிய உல்லாசமாக இருந்தது. ஊர் மக்கள் தன் தாயாருக்குச் சூட்டிய புகழ் மாலைகளையும், மாடசாமி அவளை நினைத்து நினைத்துச் செய்யும் ஆராதனைகளையும், அப்புறம் மூதாதையர் வீட்டையும் பார்த்தபின், உல்லாசம் மறைந்து, உணர்ச்சி வெள்ளங்கள் பாய்ந்தன. இப்பொழுது — சுமார் நாற்பது மணி நேரம் கழித்த பிறகு — உல்லாசமும் இல்லை; உணர்ச்சி வெள்ளங்களும் வடிந்து விட்டன. உள்ளத்தில் ஒரு பெரிய ஆழமே விழுந்து விட்டது. சாதாரண விஷயத்தைப் பற்றிக் கூட ஆழமாகத்தான் நினைக்க முடிந்தது. யார் எதைச் சொன்னாலும் சிரிக்க முடியாதவனாகவும் இருந்தான்.

மாடசாமியோடு திரும்பி வந்து, தான் தங்கியிருக்கும் வீட்டு வாசலில் நின்று அவனுக்கு விடை கொடுத்து அனுப்பும்போது, ''மாடசாமி! அவள் பேர் என்ன?'' என்று கேட்டான்.

''எவ பேரு?''

''அதுதான், அந்த வெள்ளைச் சேலைக்காரி. நீ காட்டினாயே?...?''

''அவ பேரா? நிருமலா! நிருமலா மொதலாளி! வெளக்குமாத்துக் கொண்டைக்குப் பட்டுக் குஞ்சம்! இவளுக்கு அப்படி நாகரிகமான பேரு!'' — அவன் ஏளனமாகச் சொன்னான்.

''கிராமத்திலேயும் இந்த மாதிரிப் பேர் வைக்கிறாங்களா?''

''கிராமமா? கிராமம் இப்ப எப்படி இருக்குன்னு சொல்றீங்க! டவுனுக்கு மேலே! சினிமாவைப் பார்த்துப் பார்த்து அவ்வளவும் படிச்சுக்கிட்டாங்க மொதலாளி. இங்கே இல்லாத நாகரிகம் இப்போ சீமையிலேகூட இருக்காது!''

''சரி, சரி. போய் வா. காலையிலே பார்ப்போம்!''

அன்றிரவு சாப்பிட்டுப் படுத்த ரங்கராஜனுக்கு அந்த விதவையின் நடத்தை பற்றியோ, அவள் கணவனின் தற்கொலை பற்றியோ நினைக்கத் தோன்றவில்லை. அவளுடைய அழகும் வாழ்க்கையும் பாழாகி விட்டதும், ஐந்து பிள்ளைகளோடு அவள் பட்டினி கிடப்பதுமே சிந்தனை முழுவதையும் ஆட்கொண்டிருந்தன. நல்ல விஷயங்களெல்லாம் ஏன் இந்த உலகத்தில் இவ்வாறு பாழாக வேண்டும்? இதன் மர்மம் என்ன? விதியின் விளைவு என்று அலட்சியமாகச் சொல்லி விடுவதா? விதி இல்லையென்றால், இந்தச் சதியை யார் செய்கிறார்கள்?

இப்படியே யோசித்துக் கொண்டிருந்தான்; தூங்கியும் விட்டான்.

மறு நாள் காலையில் பலகாரம் சாப்பிட்டதுமே அவன் புறப்படத் தயாராகி விட்டான். மேற்கொண்டு நான்கு நாட்கள் தங்கிச் செல்ல யார் யாரோ வந்து கூப்பிட்டுப் பார்த்தார்கள். ஆனால் ஒன்றும் முடியவில்லை. ஊரை விட்டுச் சாத்தூருக்குப் போய்ச் சில மணி நேரமாவது ஆசுவாசமாக மூச்சுவிட வேண்டும் போல் இருந்தது. அவன் பிறகு வேண்டுமானால் இந்த ஊருக்குத் திரும்பி வந்து நான்கு நாட்கள் இருந்து விட்டுப் போகலாம். ஜீவாதாரமான பிராணவாயுவை அந்த ஊரை விட்டு வெளியில் போய்த்தான் சேகரிக்க வேண்டும் போல் தோன்றி விட்டது.

அவனை வழியனுப்ப மாடசாமி உள்படப் பத்துப் பன்னிரண்டு பேர் பிரதான சாலைவரையிலும் வந்தார்கள். வண்டி கட்டிக் கொண்டு போகலாம்

என்று அவனுக்கு விருந்திட்ட அந்த முதலியார் முதலில் சொன்னார். அவன் வேண்டாம் என்று மறுத்து விட்டு நடந்தே வந்தான்.

கோவிலை அப்போதும் திரும்பிப் பார்த்தான். அந்த எழுத்துக்கள் — ''விஜய லட்சுமி'' என்ற போஸ்டர் எழுத்துக்கள் அவன் கண்ணில் பட்டன. அந்த எழுத்துக்கள் அவனுக்கு அப்போது அளித்த ஆறுதலை, ஆனந்தத்தை, ஆசுவாசத்தை அளவிடவே முடியாது.

அவன் பஸ் ஏறுவதற்கு முன் அங்கே நின்றவர்கள் பலவிதமாக அவனுக்குப் பிரியாவிடைச் செய்திகள் கூறத் தொடங்கி விட்டார்கள். அம்மாவோடு ஒரு தடவை ஊருக்கு வந்து பத்து நாட்களாவது தங்கிச் செல்ல வேண்டும் என்பது ஒரு பெண்மணியின் வேண்டுகோள். எல்லோருமே வந்து ஊரில் நிரந்தரமாகத் தங்கிவிட வேண்டும் என்றும், ''நான் சொன்னதாக அம்மாகிட்டச் சொல்லுங்க மொதலாளி. அம்மா இந்த ஊருக்கு வந்துடத்தான் பிரியப்படுவாங்க'' என்றும் கூறி மாடசாமி விடை கொடுத்தான். கல்யாணம் பண்ணிக் கொண்டு மனைவியோடு அவன் மாப்பிள்ளை விருந்து சாப்பிட வர வேண்டும் என்று ஓர் அம்மணி சொன்னாள். இந்த வேண்டுகோளில் மட்டும் அனைவருமே வாய்ச் சொல்லால் ஒப்பம் இட்டார்கள். ஒரு மாதம் தங்கினால்தான், வீட்டுக்கு ஒரு நாளாவது விருந்து சாப்பிட முடியும் என்றும், எனவே, அப்படித் தங்குவதற்குத்





''போன மாதம் நீ உன் சம்பளப் பணத்தில் 3 புடவை 10 ஜாக்கெட் வாங்கிக் கொண்டாய், என் சம்பளம் ரேஷன், மளிகை, வாடகைக்கே சரியாப் போச்சு....!''

''சரி; சரி! கோபித்துக் கொள்ளாதீர்கள்! இந்த மாதம் என் சம்பளத்தில் ரேஷன், மளிகை, வாடகைக்குச் செலவழிக்கிறேன். உங்க சம்பளத்தில் 8 புடவை 12 ஜாக்கெட் வாங்கி விடுங்கள் !''

தயாராக வரவேண்டும் என்றும் எல்லோரும் சொன்னார்கள்.

சந்தோஷமாக விடைபெற்றுக் கொண்டு பஸ்ஸில் ஏறினான் ரங்கராஜன். பஸ் நகர்ந்தது. ஒரு பர்லாங் தாண்டுவதற்குள்ளாகவே, 'இத்தனை பேரும் மனப்பூர்வமாக என்னை வருந்தி வருந்தி விருந்துக்கு அழைக்கிறார்கள். இப்படிப்பட்ட நல்ல உள்ளங்கள் இருக்கின்ற ஊரில்தான் — ஒரு மாத காலம் எனக்கு முழக்கமாக விருந்திடுவதற்குக் காத்திருக்கும் ஊரில்தான் — ஒரு விதவை ஐந்து குழந்தைகளோடு பட்டினி கிடக்கிறாள்!' என்று நினைத்துக் கொண்டான்.

ரங்கராஜனின் மனம் மட்டும் சிரித்துக் கொண்டது.

சொன்னதற்கு ஒரு நாள் முன்னதாகவே ரங்கராஜன் சாத்தூருக்கு வந்துவிடவே, அருணாசல முதலியார் பெரிதும் சந்தோஷமடைந்தார். தாம் திரும்பி வந்த பிறகு ரங்கராஜனிடம் பிணுங்கு கப்பையா வந்து ஏதாவது பேசினானா என்று அவர் கேட்டார்.

''அவனை நான் பார்க்கவே இல்லை. சொல்லப் போனால் அவன் ஞாபகம் கூட எனக்கு வரவில்லை'' என்றான் ரங்கராஜன்.

''ராஜா! நாம் புறப்பட்டுப் போன நேரம் நல்ல நேரம். காலக் கிரயத்துக்கு ஐயாயிரம் ரூபாய்க்கு மேலேயே விலை பேசி அவனையும் சம்மதிக்க வச்சிட்டோம். சீக்கிரமா ரிஜிஸ்தர் பண்ணிப்பிடணும். இல்லேன்னா எவனாவது போய் அவன் மனசைக் கலைச்சுப்பிடுவான்'' என்றார் அவர்.

சொத்து விற்பனை விஷயத்தில் அவன் கவனம் செல்லவே இல்லை. அருணாசல முதலியாரோ அந்த விஷயத்தைப் பற்றியே தொடர்ந்து பேசிக் கொண்டிருந்தார்.

''மிச்சம் உள்ளதுகளையும் சீக்கிரமாத் தள்ளி விட்டுடணும். பக்கத்து ஊர் திருவேங்கடம் நாயுடுவும் தோட்டமோ புஞ்சையோ வாங்கலாம்னு இருக்கிறாராம். அதை விசாரிக்கச் சொல்லியிருக்கிறேன். அவர் பெரிய புள்ளி. நினைச்சா இந்தச் சாத்தூரரையே விலைக்கு வாங்குறதுக்கு ரூபா வச்சிருக்கிறார்...''

''சித்தப்பா! நம்ம ஊர்க்காரன் ஒருத்தன் இங்கே ஆத்துப் பாலத்திலே ரயிலுக்கு முன்னாலே விழுந்து செத்துப் போயிட்டானாமே போன வருஷம்?'' என்று திடீரென்று அவன் கேட்டான்.

அவருக்கு இது ஆச்சரியமாக இருந்தது. ''ராஜா! நான் என்ன சொல்றேன்? நீ என்ன கேட்கிறே? எவன் எங்கே விழுந்து செத்தால் நமக்கு என்ன?'' என்று கேட்டார் அருணாசல முதலியார்.

''அவன் மனைவி மக்களெல்லாம் இப்போ நடுத்தெருவிலே நின்னு தத்தளிக்கிறாங்களாமே...?''

''தத்தளிக்கிறாங்க. அதுக்கு நீ என்ன செய்யணும் என்கிறே?''

''நான் என்ன செய்ய முடியும்?''

''அப்புறம் என்ன, பேச்சை விடு. ஊரிலே நாலும் நடக்கும். அவன் ஊரெல்லாம் கடனை வாங்கிட்டுத் திருப்பிக் கொடுக்க முடியாமல் ரயிலுக்கு முன்னாலே போய் விழுந்திருக்கிறான்.''

''வேறேமாதிரியில்லே சொல்றாங்க.''


''வேறே மாதிரி என்னப்பா? அவ நடத்தை சரியில்லேன்னு சொல்லியிருப்பாங்க. அதுதானே? எனக்குத் தெரியாத சங்கதியா?''

''நிஜம்தானா அது?''

''எவன் கண்டான்? இருக்கும். அவ ஆளு கொஞ்சம் நல்லா இருப்பா. பல பேருக்கு அவ மேலே கண்ணு. மத்தப்படி உள் அந்தரங்கம் எனக்குத் தெரியாது. ஆனா நல்ல பொம்பிளை இல்லே என்கிறது மட்டும் நிச்சயம். நல்லவளா இருந்திருந்தா, புருஷனை இவ்வளவு தூரம் கடன் வாங்க விட்டிருக்க மாட்டா... நடத்தை சரியில்லேன்னு ஊரெல்லாம் பேச்சு அடிபட்டது வாஸ்தவம்தான்.''

''இப்போ பட்டினி கிடக்கிறாளாம். பரிதாபம்!''

''அவளுக்கு ஒரு காலத்திலே இருந்த கிராக்கிக்கு இந்த மாதிரி கதியும் அவ



ஆண்டுதோறும் அவதியூட்டும் அரிப்பு

இதைப் போக்க என்னதான் வழி?



வேர்க்குரு—அடேயப்பா!
என்ன அரிப்பு! என்ன எரிச்சல்!
சொரிந்து சொரிந்து தோலே
உரிந்து போகிறது! இதைப்போக்க
வழியே இல்லையா? ...ஏன் இல்லை?
முதலில், மருந்து கலந்த ஜான்ஸன்ஸ்
ப்ரிக்லி ஹீட் சோப் தேய்த்துக் குளியுங்கள்.
இது சருமத் துவாரங்களில் உண்டாகும்
எரிச்சலைப் போக்கி, அரிப்பு
பரவாமல் தடுக்கிறது.
பின்னர், ஈரப் பசையை உறிஞ்சி
சருமத்திற்கு இதமளிக்கும்



ஜான்ஸன்ஸ் ப்ரிக்லி ஹீட்
பவுடரைப் பூசுங்கள். இதில்,
வேர்க்குருவை எதிர்க்கும் ஒரு
விசேஷ நச்சுத்தடை மருந்து
சேர்க்கப்பட்டுள்ளது. உடனடியாக
நிவாரணம் உண்டாகும்.

வேர்க்குருவை விரட்டியடிக்க
இதுவே சிறந்த வழி!



HTA-JJ-8006

ஜான்ஸன்ஸ் ப்ரிக்லி ஹீட் தயாரிப்புகள்!

ளுக்கு வந்திருக்கே! தன் வினை தன்னைச் சுடும்!''

''இப்படிச் சொல்லாதீங்க, சித்தப்பா! அவன் வினை அவனைச் சுடுறதிலே நமக்கு என்ன திருப்தி?'' என்று மனக் கஷ்டத்தோடு சொன்னான் ரங்கராஜன்.

இதைப் பார்த்த அருணாசல முதலியாருக்கு ஒன்றும் புரியவில்லை.

''ராஜா! நீ ரொம்பவில்லே உருகுறே! உலகத்திலே இப்படிக் கஷ்டப்படுறவங்க லட்சம் லட்சமா இருக்கிறாங்க. அத்தனை பேருக்கும் நீ அன்னதானம் பண்ணிப்பிடுவியா?''

ரங்கராஜன் ஒரு பதிலும் சொல்லாமல் தலை குனிந்து கொண்டிருந்தான். 'லட்சம் பேர் இருக்கட்டும், ஒரே ஒருத்திக்குக்கூட, ஒரு வேளை ஆகாரத்துக்குக் கூட வழி பண்ணாமல் வந்து விட்டோமே. அப்படிச் செய்ய வேண்டும் என்று தனக்கு ஏன் தோன்றாமல் போய் விட்டது' என்று மனப்பூர்வமாக வருந்தினான்.

''ராஜா! எழுந்திரு சாப்பிடலாம். நடக்க வேண்டிய காரியத்தைக் கவனிப்போம்'' என்று அவனை அழைத்துச் சென்றார் சித்தப்பா.

அத்தியாயம் 10

சாத்தூருக்கும் அப்புறம் சன்னாசிப் புத்தூருக்கும் சித்தப்பாவுடன் போன ரங்கராஜன் அந்த இரண்டு ஊர்களிலும் தங்கியிருந்தது மொத்தம் ஐந்தே நாட்கள்தான். ஆனால் அவன் மதுரையை விட்டுப் போய் ஐந்து மாதங்கள் ஆனது போலவும், அவன் திரும்பி வருவதற்கு இன்னும் ஐந்து மாதங்கள் ஆகுமோ என்பது போலவும் நடராஜ முதலியாருக்கும் மற்றவர்களுக்கும் தோன்றியது. ''இன்னிக்கும் வரக் காணலியே? உம்! என்ன விஷயம்?'' என்று தினமும் இரண்டு தடவையாவது சொல்லி அவர் கவலையோடு கேட்டுக் கொண்டிருந்தார்.

''ராஜா இங்கே இல்லாதது எப்படியோதான் இருக்கு. நாம்ப மதுரையிலே இருக்கிற மாதிரியே இல்லே. ஏதோ வேற்றூருக்குப் போய் முன் பின் தெரியாதவங்க வீட்டிலே நடமாடிக்கிட்டு இருக்கிற மாதிரியே தோணுது'' என்றாள் சுந்தரி.

''இப்போ இப்படிச் சொல்றயே, அண்ணனை விட்டுட்டுத் திருச்சியிலே இத்தனை நாட்களும் நீ எப்படி இருந்தே? இன்னும் நாலு நாட்களிலே திரும்பவும் திருச்சிக்கே போயிடப் போறே?...'' என்றாள் தங்கம்.

''அங்கே இருக்கும்போது தெரியல்லே. இந்த வீட்டிலே அவன் இல்லாமல் இருக்கிறதுதான் கஷ்டமாயிருக்கு. வீடே வெறிச்சோடிப் போச்சே.''

தங்கம் அவளையும் பெரியப்பாவையும் ஒரு கலக்குக் கலக்கி வேடிக்கை பார்க்க வேண்டும் என்று நினைத்து, ''எனக்குத் தெரியும். நான் சொல்றேன். ராஜா வர்றதுக்கு இன்னும் ஒரு மாசமாவது ஆகும். தெரிஞ்சுதான் சொல்றேன்'' என்று ஒரு குண்டைத் தூக்கிப் போட்டாள்.

முதலியார் பயந்தடித்துக் கொண்டு, ''ஒரு மாசமா?'' என்று கேட்டார்.

''ஆமா. ஒரு மாசம் ஆகும்.''

''எதுக்கு?''

''அதை நான் சொல்ல மாட்டேன்'' என்று தங்கம் சொல்லவே, சுந்தரி, ''இவ சும்மா கயிறு விடுறா! தங்கம், இந்தப் பூச்சாண்டிக்கு நான் பயந்துட மாட்டேன்'' என்றாள்.

இவர்கள் பேசிக் கொள்வதைப் பார்த்து ஜானகியம்மாள் சிரித்தாள்.

''தங்கம்! உன்கிட்டே அப்படி ஏதாச்சும் சொன்னானா?'' என்று முதலியார் கேட்டார்.

அவருடைய பயத்தையும் படபடப்பையும் பார்த்த சுந்தரி, ''அப்பா, நீங்க பயப்படப் பயப்பட இவள் கயிற்றைப் பெரிசாத் திரிச்சிக்கிட்டிருப்பாள். சும்மா இருங்க'' என்று சொல்லிவிட்டு அப்பால் போனாள்.

உடனே தங்கம் கையைத் தட்டிக் கொண்டு சிரித்தாள். அவள் தமாஷாகத்தான் அப்படிச் சொன்னாள் என்பதை முதலியாரும் உணர்ந்து கொண்டார்.

''தங்கம்! நீ சொன்னது உண்மையாயிருக்கும் பட்சத்திலே நான் இப்பவே சாத்தூருக்குப் புறப்பட்டிருப்பேன். போய்க் கையோடே ராஜாவைக் கூட்டிக்கிட்டு வருவேன்'' என்றார் நடராஜ முதலியார்.

அப்போது ஜானகி அம்மாள் சொன்னாள்: ''இன்னிக்குச் சாயங்காலமே கூட வந்தாலும் வந்துவிடுவான். சித்திரா பௌர்ணமிக்கு எங்கிருந்தெல்லாமோ ஜனங்கள் மதுரைக்கு வர்றப்போ இவன் மதுரையை விட்டுட்டு வெளியூரிலே போய் இருப்பானா தங்கம்? இன்னிக்கு ராஜா வருவான். நாளை மாப்பிள்ளையும் வந்துவிடுவார்...''

மனைவி சொன்ன வார்த்தைகளைக் கேட்டுக் கலவரம் நீங்கி அமைதியும்

ஆறுதலும் பெற்றார் முதலியார். ''ஒரு நிமிஷத்திலே எப்படிப் பயந்துட்டார் பார்த்தியா?... நான் விளையாட்டுக்கு அப்படிச் சொன்னேனே தவிர, ராஜா இல்லாதது எனக்கே பைத்தியம் பிடிச்ச மாதிரிதான் இருக்கு. ஒரு நாள் போறது ஒரு யுகம் போற மாதிரி ஆயிட்டது'' என்று தங்கம் சொன்னாள்.

ஐந்து நாட்கள் அவனைப் பிரிந்திருக்க இவர்கள் கஷ்டப்பட்டது போலவே, அதே அரசடி விநாயகர் கோவில் தெருக் கோடி வீட்டுக்கு அடுத்த வீட்டில் இருந்த விஜயாவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தாள். ஆனால் அவளுடைய கஷ்டமோ பெரிய கஷ்டமாக இருந்தது. இவர்கள் அன்றையப் பிரிவுக்காக மட்டும்தான் கஷ்டப்பட்டார்கள். அவளோ, பிரிவுக்காகவும் கஷ்டப்பட்டாள்; எதிர்காலத்தில் நம்பிக்கை இழந்தும் கஷ்டப்பட்டாள். ரங்கராஜனின் குடும்பத்தோடு ஒட்டி உறவாடுவதற்கு வழி செய்யும் ஒரு சந்தர்ப்பம் கிடைப்பதற்காக அவள் தவித்துக் கொண்டிருந்தாள். தெய்வாதீனமாக ஒரு சந்தர்ப்பமும் கிடைத்தது. ஆனால், நெருங்கி வந்ததும் கானல் நீரைப் பார்த்தது போல் ஆகிவிட்டது. மிக உயரமான ஆசார வாசலில் நுழையும்போதுகூடத் தலை தட்டிக் குனிய நேரும் என்று அவள் எதிர்பார்க்கவேயில்லை.

சுமார் ஒரு வாரத்துக்கு முன், கடைசி வெள்ளிக்கிழமையன்று விஜயா தன் தங்கையோடும் பெற்றோர்களோடும் சுவாமி தரிசனத்துக்காகத் திருப்பரங்குன்றத்துக்குப் போயிருந்தாள். அப்போது ரங்கராஜனின் வீட்டாரும் அங்கே வந்திருப்பதை அவள் பார்த்துக் கொண்டாள். இரவு ஏழரை மணி இருக்கும். முருகப் பெருமானை வணங்கி அருச்சனை முதலானவற்றையும் முடித்துக் கொண்டு வெளியே வந்தார்கள். சுற்றுத் தேவதைகளையும் நவக்கிரகங்களையும் சுற்றி வந்து தொழுவதற்காக எல்லோரும் போய்க்கொண்டிருக்கும்போது நடராஜ முதலியாரும் அவரோடு மற்றவர்களும் நடந்து வருவதைப் பார்த்தார்கள். பரஸ்பரம் அறிமுகமாகிப் பழகாத குடும்பங்கள் அதனால் சந்தித்த மாதிரியே காட்டிக் கொள்ளாமல் அவரவர் திசையில் போய்க் கொண்டிருந்தார்கள். அப்படிப் போகும்போது விஜயா மட்டும் சற்று நின்று ஜானகியம்மாளைக் கவனித்துப் பார்த்தாள். அதே சமயத்தில் தங்கமும் இவளைத் திரும்பிப் பார்த்தாள். பார்த்தவள் அப்படியே அங்கே நிற்கவும் செய்தாள்.

விஜயாவுக்கு நம்பிக்கை பிறந்தது. தங்கத்தைப் பார்த்து அருகில் நெருங்கி வந்தாள். பேச்சை எப்படித் தொடங்குவது என்று தெரியாமல் தடுமாறிக் கொண்டு இவள் நிற்கும்போது, தங்கமும் அவளை உச்சியிலிருந்து உள்ளங்கால்வரை பார்த்தாள். அவள் பார்த்த பார்வையிலும் அவளுடைய முகத் தோற்றத்திலும் சற்றேனும் கனிவென்பதே இல்லாமல், ஒருவித வெறுப்பும், இகழ்ச்சியுமே குடிகொண்டிருந்தன.

விஜயா அன்று விலையுயர்ந்த பட்டு உடுத்தி, நகைகளையும் நிறையப் போட்டுக்கொண்டு கோவிலுக்கு வந்திருந்தாள். விளக்கு வெளிச்சத்தில் அவளுடைய ஆடை ஆபரணங்கள் கண்ணைப் பறித்தன. தங்கம் அவளைப் போலத் தன்னை அலங்கரித்துக் கொள்ளாமல் சாதாரணமாகவே கோவிலுக்கு வந்திருந்தாள். 'நான் இப்படி வந்திருக்கும்போது, நீ மட்டும் சர்வாலங்கார பூஷிதையாகக் கோவிலுக்கு எப்படி வரலாம்?' என்று கேட்பது போல் விஜயாவைப் பார்த்தாள் தங்கம். ஆனால் விஜயாவின் கண்களுக்கு இவளுடைய வெறுத்த பார்வையோ, கடுத்த முகமுமோ தென்படவில்லை. அவளுடைய இரு விழிகளிலும் பரந்த உள்ளத்திலும் குடிகொண்டிருந்தவை ரங்கராஜனின் நினைவு முகம், ஒரு கணத்துக்கு முன் பார்த்துப் பிரமித்த ஜானகியம்மாளின் முகத் தோற்றமும்தான்.

எந்த நிமிஷத்திலும் ரங்கராஜன் அங்கே வந்து நிற்கலாம் என்று எதிர்பார்த்த வண்ணமே விஜயா பேச்சுக் கொடுத்தாள்:


''இப்பத்தான் வர்றீங்களா?''

தங்கம் அழுத்தலாகப் பேசுவது போல், ''ஆமாம்'' என்று ஒரே வார்த்தையில் பதில் சொன்னாள். 'நாங்கள் எப்பொழுது வந்தால் உனக்கு என்ன?' என்று கேட்பவளைப் போல் இருந்தது அவள் பதில் சொன்ன விதம்.

விஜயா இந்த அழுத்தலையும் உதாசினத்தையும் கவனிக்கவேயில்லை. முன்னால் சென்ற ஜானகியம்மாளைச் சுட்டிக் காட்டி, ''உங்க அம்மாவா?'' என்று பரவசத்தோடும், பரவசத்தைக் காட்டிக்கொண்டும் கேட்டாள்.

''ஆமாம்...''

''நான் பார்த்ததேயில்லை. இப்பத்தான் பார்க்கிறேன்...'' — இவ்வாறு சொல்லி விட்டு ரங்கராஜனைச் சுற்று



முற்றும் திரும்பிப் பார்த்தாள். அவனை எந்த மூலையிலும் காண முடியவில்லை.

தங்கம் அதோடு போய் விடுவாளோ? போய்விட்டால் என்ன செய்வது? தன் தங்கையும் தன் பெற்றோர்களும் தன்னைத் தேடி வந்து விட்டால் என்ன செய்வது?

அரைக் கணத்துக்குள் சொல்லவேண்டியதை யெல்லாம் சொல்லி உறவுக்கு வழி திறந்துவிட வேண்டும் என்று துடித்தாள் விஜயா.

ஒரு கனவான் தம் வீட்டை இன்ஷூரன்ஸ் ஏஜண்டிடம் இன்ஷ்யூர் செய்து கொண்டார். உடனே அவருக்கு ஒரு சந்தேகம் தோன்றியது. "இன்று இரவே என் வீடு தீப்பற்றி எரிந்து விட்டால் எனக்கு என்ன கிடைக்கும்?"

"பத்து வருஷம்" என்றார் அந்த ஏஜண்ட்.

-- ஜி. ராஜாராமன்



"வந்து... நான் ஒரு நாள் கூடப் பார்த்ததில்லே. உங்க அம்மா உங்க மாதிரியே இருக்கிறாள்!...."

இதைக் கேட்டதும் தங்கம் மிக மிக ஏளனமாகச் சிரித்தாள். 'இப்படி முழுப் பொய்யைச் சொல்லி முகஸ்துதி செய்கிறாளே!' என்று நினைத்தபோது அவளை ஏதோ பிச்சைக்காரி மாதிரியும் தன்னை மகாராணி மாதிரியும் கருதிக்கொண்டு தங்கம் அலட்சியமாகத் திரும்பினாள்.

விஜயா மேலும் சிறிது தூரம் உடம்பாலும் உள்ளத்தாலும் நெருங்கி வந்து, "நான் இப்பத்தான் பார்க்கிறேன். மீனாட்சியம்மனைப் பார்க்கிற மாதிரியே இருக்கு. உங்கம்மா மட்டும் தடுக்காமல் இருந்தால், நான் தினமும் அவங்க காலிலே பூப்போட்டுக் கும்பிடுவேன்" என்று தான் கொள்ள விரும்பும் உறவுக்கும் தொடர்புக்கும் காணிக்கை செலுத்துவதைப்போல் பேசி விட்டாள்.

தங்கம் மற்றொரு முறையும் கோணல் சிரிப்பு சிரித்தாள். விடை பெற்றுக் கொள்ளும் முகமாக ஒரு வார்த்தைகூடச் சொல்லிக் கொள்ளாமல் திரும்பி வேகமாகப் போய்விட்டாள்.

முகத்தில் அறைந்து அவமானப் படுத்திவிட்டுப் போகிறவளைப் போல், அவள் போனாலும் விஜயா அப்போது உள்ளுக்குள் களியாட்டமே ஆடினாள். 'சொல்ல வேண்டியதைச் சொல்லிவிட்டோம். இது மகத்தான வெற்றி' என்பது போன்ற களிப்பும் எக்களிப்பும் அவளை இன்ப வெள்ளத்தில் மூழ்கடித்தன. மற்றொரு முறையும் ரங்கராஜனைக் கண்கள் தேடியபோது அவனை எங்கும் காணாது போகவே, ஏமாற்றத்துக்குள்ளாகித் தன் பெற்றோரின் நினைவு வந்து, அவர்களைத் தேடிச் சென்றாள்.

நவக்கிரகங்களையும் வலம் வந்து வணங்கியாகி விட்டது. அங்கிருந்து புறப்பட்டு வரும்போது, இரண்டாவது தடவையும் அந்த இரு குடும்பங்களும் ஒரு திருப்பத்தில் சந்தித்தன. அதே கதைதான். ஒவ்வொருவரும் அவரவர் திசையில் நடக்கத் தங்கமும் விஜயாவும்தான் ஒருவரை ஒருவர் ஏறிட்டுப் பார்த்தனர்.

'பழைய' சிநேகிதியைத் திரும்பவும் பார்த்து விட்டோம் என்று நட்புறவோடு புன்னகை செய்தாள் விஜயா.

'திரும்பத் திரும்ப இவள் எதிரே வந்து கொண்டிருக்கிறாளே' என்று சலித்தவளைப் போல் முகத்தை ஒரு வெட்டு வெட்டித் திருப்பிக் கொண்டு நடந்தாள் தங்கம்.

விஜயாவுக்கு முகத்தில் அறைந்தது மாதிரி ஆகிவிட்டது. சம்பிரதாயத்துக்குக் கூடத் தன் அன்பைக் கௌரவிக்காமல் அலட்சியமாகப் போகிறாளே என்று நினைக்கும்போது அவளுக்கு அவமானமாகக்கூட இருந்தது.

'பைத்தியம் போல் உணர்ச்சிகளைக் கொட்டி விட்டேன்! என் அவசர புத்தியை என்னவென்று சொல்வது? யாரோ, எப்படிப்பட்டவர்களோ! 'பூப் போட்டுக் கும்பிடுவேன்' என்றுகூடச் சொல்லி விட்டேன். வெளியே சொன்னால் சிரிப்பார்கள்.' — இப்படி மிகவும் மனம் துவண்ட விஜயா, இந்தச் சந்திப்பைப் பற்றிக் கலாவிடம் சொல்லவே இல்லை. வலியப் போய் உறவாடி அவமானப் பட்டுத் திரும்பி விட்ட உணர்ச்சி அவளைக் கொல்லாமல் கொன்று கொண்டிருந்தது.

'அவரும் இவளைப் போலவே இருந்தால்... அண்ணனும் தங்கையும்தானே? வெவ்வேறு விதமாகவா இருக்கப் போகிறார்கள்? அவருடைய முகத்தை இத்தனை நாட்களும் பார்த்தது போல் இனி பார்க்க முடியாது. நான் வரம்பு கடந்துபோய்க் குலாவி அசிங்கமாக நடந்து கொண்டு விட்டதன் பலன் இது. அவர் எப்படிப்பட்டவராக இருந்தாலும் அவருடைய முகம் மட்டும் எனக்கு நல்ல முகமாகவே இருந்தது. அதைப் பார்த்துப் பார்த்து

ஆனந்தப்பட்டுக் கொண்டிருந்தேன். நானோ, அந்த முகமும் அவருடைய தங்கையின் உள்ளத்தைப் போல் மாறித் தோன்றுமே!''

இனிமேல் அவனைத் தெரு வாசலில் நின்று பார்க்கக் கூடாது என்று அன்றிரவு படுத்தவள், மறுநாள் விடிந்த பிறகு சந்தேகத் தெளிவுக்காக ஒரே ஒரு முறையேனும் அவனைப் பார்த்து விடத்தான் வேண்டும் என்று தீர்மானித்தாள். அப்படியே பார்க்கவும் செய்தாள். அன்று வெகு நேரம் காத்திருந்துதான் பார்க்கும்படி ஆயிற்று.

அவன் தெருவோடு நடந்து சென்றான். விதிவிலக்காக இவள் இருக்கும் திசையை நோக்கியும் திரும்பினான். இவள் தன்னைப் பார்க்கிறாள் என்பதைத் தெரிந்து கொண்டதுமே தலைகுனிந்து கொண்டு போய்விட்டான். பூரணமாகத் துலாம்பரமாகக் காட்சி தந்து மறைந்த அந்த முகத்தில் அவளால் எந்தக் களங்கத்தையும் ஏற்ற முடியவில்லை. அன்று அந்தப் பத்து மணி வெய்யிலில் சற்று அதிகமான சோபையுடனேயே அந்த முகம் காட்சி யளித்தது. அவளுடைய சந்தேகங்களும், கஷ்டங்களும் பஞ்சாகப் பறந்து விட்டன.

''அவள் எங்கே? இவர் எங்கே? அவளைப்போல் இவர் இருந்தால் இந்த முகத்தில் இவ்வளவு பிரகாசம் இருக்க முடியுமா? தாமரைப் பூ மாதிரி இருக்கிறதே முகம்!... இவர் தனிப் பிறவி. இவரை யாரைப் போலவும் நினைக்கக் கூடாது; இவரைப் போலவும் யாரும் இருக்க முடியாது.''

விஜயாவுக்கு உச்சி குளிர்ந்தது; உடம்பு மட்டுமின்றி உள்ளமும் நேராகி விட்டது. தளர்ந்து தகர்ந்த நம்பிக்கை பழையபடியும் உரம் பெற்று நிமிர்ந்தது. தன்னைப் பற்றி அவரிடம் அவள் நல்லவிதமாகவும் சொல்லியிருக்க மாட்டாள்; இழிவாகவும் சொல்லியிருக்க மாட்டாள் என்று அவளுக்குத் தோன்றியது. அவனுடைய அன்னையைப் பற்றிப் பக்தியும் பரவசமுமாகத் தான் சொன்ன வார்த்தைகளை அவள் அவனிடம் கூறியிருந்தால், தன்னைப் பார்த்து முக பாவனையிலே ஒரு சமிக்ஞையாவது காண்பித்திருப்பான். அந்தப் பாவி ஒன்றுமே சொல்லவில்லை என்பது நிச்சயம்.

தங்கத்தை நினைத்தாலே விஜயாவுக்குக் கசந்து வழிந்தது.

இரண்டே நாட்களில் ரங்கராஜன் தன் சித்தப்பாவுடன் பெட்டியும் கையுமாகச் சாத்தூருக்குச் சென்றதையும் விஜயா தன் வீட்டு ஜன்னல் வழியாகப் பார்த்தாள். எங்கே போகிறான், எப்போது திரும்புவான் என்பதை அறிந்து கொள்ள அன்று அவள் மனம் துடித்தது. ஆனால் யாரிடம் போய்க் கேட்பது? அவனுடைய வீட்டாரைத் தேடிப் போய்க் கேட்க முடியுமா?

மனத் துடிப்பைக் கட்டுப்படுத்த முடியாமல் மிகவும் சிரமப்பட்டாள். 'திரும்பவும் அந்த முகத்தை எப்போது பார்க்கப் போகிறோமோ, அவன் வெளியூருக்கு உத்தியோகம் பார்க்கப் போயிருந்தால், எத்தனை வருஷங்கள் கழித்துப் பார்க்க வேண்டியிருக்குமோ' என்றெல்லாம் ஏங்கினாள். குதூகலத்தை அறவே இழந்து நடமாடினாள். இந்த மாறுதலை அவளுடைய பெற்றோரும் , தங்கையும் உடனடியாகவே கவனித்து விட்டார்கள்.

''விஜயா ஏன் இப்படி இருக்கிறாள்? இந்த வீட்டுக்கு வந்ததிலிருந்து கலகலப்பாக இருந்தாளே! என்ன நடந்தது?'' என்று அவளுடைய தந்தையும் ஆச்சரியப்பட்டு மனைவியையும் மகளையும் விசாரிக்கத் தொடங்கினார்.

''ஒண்ணுமே நடக்கலே. அவளுக்கு இது ஒரு கிறுக்கு. திடீர்னு எதையாவது நினைச்சுக்கிட்டு மனசைக் கஷ்டப்படுத்திக்கிட்டுச் சாவாள். இன்னதுன்னு மத்தவங்களுக்குச் சொல்லவும் மாட்டாள்'' என்றாள் கலா.

''கலா! அவள் இன்னதுன்னு சொல்லித்தான் தெரியணுமா? சும்மா இரு. அவள் கவலை அவளுக்கு'' என்றாள் தாயார்.

''அவளுக்கு மட்டும் தனியா என்ன கவலை? பார்க்கப் போனால் கவலைப்பட வேண்டியவன் நான். நானே தைரியமாக இருக்கிறேன். நாய் வாலை நிமிர்த்த முடியலையேன்னு கவலைப்படுற கதைதான் இது. பைத்தியக்காரத்தனம்'' என்று சொன்னார் தந்தை.

விஜயா அவனுடைய தமையன் ஞாபகம் வந்து, அவனுடைய தறிகெட்ட போக்கையும் கேவலமான நடத்தைகளையும் எண்ணியே கவலைப்படுகிறாள் என்று எல்லோரும் பேசிக் கொண்டார்கள்.

ரங்கராஜன் சாத்தூருக்குப் போய் நான்கு நாட்கள் ஆன பிறகு, அவளுடைய நிலையையும், ஏக்கத்தையும் அவளே கண்டிக்கத் தொடங்கி விட்டாள். இரவும் பகலும் அவனைப் பற்றியே நினைத்து நினைத்து எத்தனையோ விதமாக யோசித்துப் பார்த்த பின், அவனுடைய பிரிவுக்காகத்தான் வருந்துவது பைத்தியக்காரத்தனம் என்றே அவளுக்குப் பட்டது. (தொடரும்)



தாங்க முடியாத நோவா?

அதிகச் சக்தி வாய்ந்த
நிவாரண மாத்திரையான பல நிற

ஸால்ஜான்

உபயோகியுங்கள்

தலை நோவு • ஜலதோஷம் • உடல் நோவு
பல்வலி • தசைவலி • ஃபுளூ

நினைவிருக்கட்டும் ஸால்ஜான் மட்டுமே
பல நிறம் கொண்ட நோவு நிவாரணி
ஒரு எஸ். எஸ். தயாரிப்பு

உயர்ந்த பானங்கள், தின்பண்டங்களுக்கு

வின்ஸென்ட்



- நாகரீக பார்ட்டிகளுக்கேற்றது பெப்பியோ & ஜீலா-கோலா
- உற்சாகத்துடன் சுவைக்க மாங்கோஸிப், விடோலா, வின்கோலா
- ஆரோக்கியமும், சந்துஷ்டியும் அளிக்க நான்கு வகை பழரச பானங்கள் ஆரஞ்சுவின், மாங்கோவின், பைனேவின், கிரேப்வின்
- மேலும் சுவைமிகுந்த ஜிஞ்சர், ஆரஞ்சு, லெமன் எல்லாம் உண்டு.

வின்ஸென்ட்

சத்துள்ள ரொட்டி, கேக், பிஸ்கட் வகைகள் ஒவ்வொருவரையும் மகிழ்விக்கிறது

VC: 106



TAPIS



பயோ-ஸால்

(கிரைப் மிக்சர்)

ஜே. & ஜே. டிஷேன்

ஹைதராபாத் - இந்தியா



ஜுஹூ கடற்கரையில் தவறி மூழ்கவிருந்த ஒரு நபரைக் காப்பாற்றினான் நாணு. பின்புதான் அவர் நாணுவின் அலுவலக நிர்வாகி என்பது தெரிந்தது!

"நன்றி நாணு! நீ எனக்கு உயிர் கொடுத்ததற்காக நாளைய தினமே நான் ஆபீசிலுள்ள அனைவர் எதிரிலும் உனக்கு ஒரு பாராட்டுப் பரிசு வழங்கப் போகிறேன்" என்றார் நிர்வாகி.

பாவம், நாணு விம்மிவிம்மி அழ ஆரம்பித்தான். "வேண்டாம் ஸார்! அப்படிச் செய்யாதீர்கள்! அவர்கள் என்னைக் கொன்று விடுவார்கள்!" என்று கதறினான்.

'தர்மயுக்'கிலிருந்து எடுத்து அனுப்பியவர்: பதஞ்சலி.

டயல் நம்பர் 100



பம்பாயில் அவசரமாகப் போலீஸ் உதவியை நாடுபவர்கள் 100 என்ற நம்பருக்குப் போன் செய்ய வேண்டும். அதற்காகப் பம்பாய் போலீஸ் தலைமையகத்தில் ஒரு தனி 'கண்ட்ரோல் ரூம்' இருக்கிறது. இந்த அறைக்கு வரும் எல்லா போன் 'கால்'களும் அவசரத்துக்குத்தானா? சிலர் விசித்திரமான காரணங்களுக்காகவும் இந்த அவசர நம்பரை டயல் செய்கிறார்கள். இங்குள்ள போலீஸ் அதிகாரிகளுக்கு அதனால் வேடிக்கையான அனுபவங்கள் ஏற்படுகின்றன. ஒரு நாள் ஒருவர் போலீஸ் அதிகாரியிடம் "நான் சமீபத்தில் பார்த்த ஒரு சினிமாவிலிருந்து ஒரு பாட்டைப் பாடுகிறேன், கேளுங்கள்" என்று சொல்லிவிட்டு உடனே பாடவும் ஆரம்பித்துவிட்டாராம். சில வாலிபர்கள் "நான் ஒரு 'ஜோக்'சொல்கிறேன், கேளுங்கள்" என்று சொல்கிறார்கள். இன்னும் சிலர் தங்கள் குடும்பக் கஷ்டங்களைச் சொல்லி, "இதற்கு என்ன செய்யலாம்?" என்று கேட்கிறார்கள். சமீபத்தில் பார்த்த சினிமாவைப் பற்றி விமர்சனம் செய்பவர்களும் உண்டு! சிலர் வாயாரத் திட்டுவதும் உண்டு! பலர் "எனக்குப் பொழுது போகவில்லை, அதனால் உங்களுடன் பேசிக்கொண்டிருக்கலாம் என்று நினைத்தேன்" என்று சொல்கிறார்களாம். இதற்கு முக்கிய காரணம் - '100' நம்பருக்கு போன் செய்தால் பைசா செலவில்லை! ஆதாரம்: "என்லைட்"

தகவல்: சரோஜா ராமச்சந்திரன்

பொம்மைப் பிரசாரம்

புகை பிடிப்பதால் ஏற்படக் கூடிய கெடுதியை விளக்க, 'ஜெர்மன் சுகாதார சங்கம்' ஒரு பொம்மையைப் பயன்படுத்துகிறது. 1.40 மீட்டர் உயரமுள்ள இப்பொம்மையில் 'கண்ணாடி இருதயம்' பொருத்தப்பட்டிருக்கிறது. இப்பொம்மை அடிக்கடி 'சிகரெட்' புகைக்கும். ஒவ்வொரு ஊராக இப்பொம்மை சுற்றுப்பயணம் செய்யும். முதலில் சாதாரண நிலையில் இருக்கின்ற பொம்மையின் இருதயம், புகை பிடிப்பதைத் தொடர்ந்து கொஞ்சம் கொஞ்சமாகக் கறுத்து விடுகிறது. இத்துடன் புகை பிடிப்பதால் புற்றுநோய் ஏற்பட்டு ஆபரேஷன் செய்யப்படும் திரைப்படம் ஒன்றும் மக்களுக்குக் காட்டப்படுகிறது. இதனைப் பார்த்தவர்கள், அடுத்துப் புகை பிடிக்கத் தயங்குவார்கள். புகை பிடிப்பதை நிறுத்தும் வழிகள் பற்றிச் சங்கத்தின் டாக்டர்கள் யோசனை கூறுகிறார்கள்.



- (யூ. பி. எஸ்.)



கனவில் கணவர்!

"என் சரோ, ஒரு மாதிரியாயிருக்கிறாய்?"

"பின்னே என்னடி கலா! என் கணவர் ரொம்ப மோசம். அவர் என் மாமியாருக்கு ஒரு பட்டுப் புடவை வாங்கிக் கொடுப்பதாக நேற்று எனக்குக் கனவுவந்ததடி!"

"இதுக்காகவா இவ்வளவு கவலை...?"

"இருக்காதா பின்னே? என் கனவிலேயே அவர் இப்படிச் செய்தாரென்றால், தன்னுடைய கனவில் இன்னும் என்னவெல்லாம் என் மாமியாருக்கு வாங்கிக் கொடுக்கிறாரோ!"

- சுதாகரன்

வெர்க்லி-கல்கி
இலக்கியப்
பரிசுத்திட்டம்

ஐந்நூறு ரூபாய் இரண்டாவது பரிசு

மைனுவுக்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது.

''சேச்சே...! இந்தப் பாட்டிக்கு நேரம் காலம் தெரியாது.....!'' என்று அலுத்துக் கொண்டவள், தன் 'மினி' கடிகாரத்தைக் கண்ணருகில் கொண்டு வந்து மணி பார்த்தாள்.

''மணி ஐந்து!''

'' அச்சோ... ! அஞ் சாச்சே...! இங்கிருந்து பல் பிடிச்சு லல்லி வீட்டுக்குப் போகணுமே !'' என்று மைனு தவித்தாள்.

அங்கே அவள் சிநேகிதிகள் எல்லாம் கூட்டமாகக் காத்திருப்பார்கள். இரண்டு நாட்களுக்கு முன்பே திட்டமிட்டு சினிமா புரோகிராம் போட்டாயிற்று.

மைனுவுக்கு ஒவ்வொரு விநாடியும் ஒவ்வொரு யுகமாகக் கழியவே ஆத்திரத்துடன் ''இந்த டாக்டர் வீட்டு விசிட்டர்கள் அறையில் பழி கிடக்க வேண்டுமென்று எனக்கு மட்டும்தான் தலையில் எழுதியிருக்கிறது...! நல்ல பாட்டி... நல்ல டாக்டர், நல்ல பல் வலி!'' என்று முணுமுணுத்தாள்.

அந்த ஆத்திரத்திலும் மைனுவுக்குக் 'களுக்'கென்று சிரிப்பு வந்தது. ''நல்ல பல்வலியாவது? நல்ல பல் வலிக்குமா? கெட்ட பல்தான் வலிக்கும்!''

தானே தன் ஹாஸ்யத்தை ரசித்தவளாக நிமிர்ந்து உட்கார்ந்து சுற்றும்முற்றும் பார்த்தாள் மைனு.

''டாக்டர் என். பதி ஹோமியோபதி ஸ்பெஷலிஸ்ட்.'' கொட்டையாகக் கதவின் மேல் பிளாஸ்டிக் எழுத்துக்கள் பளபளத்தன.

''ஹோமியோபதி... என். பதி! நல்ல பொருத்தம்தான்! அழகான வீடு!'' அதுவும் ஹோமியோபதி டாக்டர் வீடு. இவ்வளவு நாகரிகமாகவும், அழகாகவும் இருக்கும் என்று மைனு எண்ணவே இல்லை.

விசிட்டர்கள் அறை குளுகுளுவென்று இளம் பச்சை வர்ணத்துடன் காட்சியளித்தது.

''அட, பரவாயில்லையே! பாட்டி சொன்னது உண்மைதான்!



பெரும் ஹாஸ்யச் சிறுகதை




''சினிமாக்குப் போய் வந்த ஹோமியோபதி டாக்டர் ரொம்பக் கைராசி....! ரொம்பக் கூட்டம் இருக்கும். நிறையக் கேள்விகள் கேட்பார். நிதானமா கேட்கிற கேள்விகளுக்குப் பதில் சொல்லி விட்டு மருந்து வாங்கிண்டு வா. டாக்டர் ரொம்ப நல்லவர், தங்கமானவர். என் பெயரைச் சொன்னால் உடனே மருந்து கொடுத்து விடுவார். கொஞ்சம் வாங்கிக் கொண்டு வந்து கொடுத்து விட்டுச் சினிமாவுக்குப் போயேயம்மா! ஆ! அப்பா.... ஐய்யய்யோ! பல்வலி பிராணன் போகிறதே!'' என்று பாட்டி கத்தக் கத்த, ''பல்வலிக்குப் பிராணன் போனால் போகட்டுமே! அதுக்கு நீ ஏன் பாட்டி கத்தறே?'' என்று ஒரு ஹாஸ்யம் அடித்துவிட்டுக் குஷியாகக் கிளம்பி விட்டாள் மைனு.

ஆனால் இந்த ஹோமியோபதி டாக்டர் என் பதி. வீட்டில் 'க்யூ'வில் காத்திருக்க வேண்டும் என்று தெரிந்திருந்தால், ''பாட்டியாவது, பல் வலியாவது'' என்று நேராக 'லல்லி' வீட்டுக்குப் போயிருப்பாள்.

போகாததன் பலன் இப்பொழுது அவன் மாட்டிக் கொண்டு விழிக்கிறான்!

வெள்ளை வாயில் புடவை கட்டிய ஓர் இளம் பெண், அடிக்கடி டாக்டர் அறையின் கண்ணாடிக் கதவைத் திறந்து கொண்டு வெளியே வந்து பார்த்துப் புதிதாக வந்திருப்பவர்களின் பெயர்களை எழுதிக் கொண்டு உள்ளே போனாள்.

மைனுவும் வந்ததுமே, தன் பாட்டியின் பெயரைச்



''ஹோமியோ... பதி... பதி!''

எஸ். பத்மாவதி



சொல்லிவிட்டு, இப்பொழுது முப்பது நிமிடங்களாகக் காத்திருக்கிறாள்.

''உள்ளே போன வியாதியஸ்தர்கள் ஒவ்வொருவரும் வெளியே வர அரை மணி நேரமா ஆகும்!'' ஆத்திரத்தில் பல்லைக் கடித்துக் கடித்து, மைனாவுக்கே பல் வலி வந்துவிடும்போல இருந்தது.

கைப் பையைத் திறந்து ஒரு லவங்கத்தை எடுத்து வாயில் போட்டுக் கொண்டவள் துள்ளிக் குதித்தாள்.

டம்பப் பையினுள் அவள் வைத்திருந்த தாத்தாவின் பழைய காலத்துப் பாக்கெட் கடிகாரம் கொட்டை கொட்டையாக மணி ஐந்தே முக்கால் என்று காட்டிற்று.

''சீச்சீ ! இந்த 'ஜுவல் வாட்ச்' எப்பவும் போல் நின்று போய் முக்கால் மணியாச்சு !'' என்று தன் கைக்கடிகாரத்தைப் பார்த்து மனத்துள் படபடத்தவள் ஆத்திரத்துடன் கையை ஓங்கி அதன் தலையில் பட்டென்று ஒன்று போடப் போன சமயத்தில், பக்கத்திலிருந்த பெண்மணி, ''மணி என்னாச்சம்மா?'' என்று கேட்டாள். ஓங்கிய கையை மெதுவாகத் தன் அழகிய கடிகாரத்தின்மேல் வைத்து மறைத்தபடி, ''மணி ஐந்தே முக்கால்....'' என்று அசட்டுச் சிரிப்புடன் பதில் அளித்தாள் மைனா.

மைனா எப்பொழுதும் தன் கைக்கடிகாரத்தை நம்புவதில்லை. அதற்காகத்தான், எப்பொழுதுமே நிற்காத தாத்தாவின் பழங்காலத்துப் பாக்கெட் கடிகாரத்தை டம்பப் பையினுள் வைத்திருந்தாள்.

''ஐயய்யோ ! மணியாச்சே... போயிடுவானா....?'' என்று மைனா எண்ணித் துடித்த போது, டாக்டர் அறைக் கதவு திறந்தது.

மைனா சட்டென்று கையிலிருந்து ஒரு காகிதத்தை எடுத்து, ''அகிலாண்டம்மாள், வெரி அர்ஜெண்ட்....'' என்று அதில் கிறுக்கினாள். தலையை வெளியே நீட்டி இன்னும் யார் புதிதாக வந்திருக்கிறார்கள் என்று ஆராய்ந்து கொண்டிருந்த பெண்ணின் மூக்கினருகில் நீட்டினாள்.

அவள் அதை வாங்கிக் கொண்டு மைனாவை ஒரு கணம் முறைத்துப் பார்த்தாள். பின், தலையை இழுத்துக் கொண்டு உள்ளே மறைந்து விட்டாள்.

இரண்டு நிமிடத்தில் கதவு திறந்தது.

''அகிலாண்டம்மாள்.... வாங்கம்மா!'' அந்தப் பெண்தான் அழைத்தாள்.

மைனா, தன்னை முறைத்துப் பார்க்கும் மற்றவர்களை லட்சியம் செய்யாமல் பரபரவென்று உள்ளே நுழைந்து விட்டாள்.

''பட...பட.... பட்...பட்....'' என்று மும்முரமாக டைப் செய்து கொண்டிருந்த டைபிஸ்டை மட்டும் அந்த அறையில் பார்த்ததும் மைனாவுக்குக் கோபம்தான் வந்தது.

'நல்ல பதி! இந்த ஹோமியோ...பதி ! நர்ஸ் போதாதென்று அழகான டைப்பிஸ்ட் வேறு இவருக்கு ! டாக்டரைப் பார்ப்பது குதிரைக் கொம்பாக இருக்கும் போலிருக்கே' என்ற முணு முணுப்புடன் டைப்பிஸ்டின் மேஜை முன் போட்டிருந்த நாற்காலியை 'டர்' என்று இழுத்துப் போட்டுக் கொண்டு உட்கார்ந்து அந்த அறையிலிருந்து மற்றொரு அறையுள் சென்று மறைந்துவிட்ட நர்ஸ் எப்பொழுது வெளியே வருவாள் என்று தவிப்புடன் மைனா சுற்றுமுற்றும் பார்த்தாள்.

பட்...பட்... சத்தம் நின்றது.

''யெஸ், ப்ளீஸ் !'' — டைப்பிஸ்ட்தான் பேசினான்.

''யெஸ்..... டாக்டர் ப்ளீஸ்!'' — மைனா திரும்பாமலேயே பதில் அளித்தாள்.

டைப்பிஸ்ட் சட்டென்று நிமிர்ந்து அவளையே உற்றுப் பார்த்தான்.

''யெஸ்... நான்தான் பதி !''

''என்னது..... நீங்கதான் என். பதியா?'' ஆச்சரியக் குரலில் கூவிய மைனா சட்டென்று தன் நாக்கைக் கடித்துக் கொண்டாள்.

மைனா சிறு வயதில் எப்பொழுதோ ஒரு ஹோமியோபதி டாக்டரைப் பார்த்திருக்கிறாள். அவள் பார்த்த டாக்டர் தொள தொளவென்று ஜிப்பாவும், பஞ்சகச்சமும் கட்டிக் கொண்டு வழுக்கைத் தலையுடன் காட்சியளித்தது இன்னும் அவளுக்கு மறக்கவில்லை. தான் சிறு வயதில் பார்த்த டாக்டரே அவ்வளவு கிழமாக இருந்த போது, இப்பொழுது பார்க்கும் டாக்டர், அவரைவிட, இன்னும் வயதானவராக இருப்பார் என்று எண்ணுவதற்கு, அவள் ஒன்றும் அவ்வளவு முட்டாள் இல்லைதான் !

இருந்தாலும் அழகான 'டெரிலின் ஷர்ட், டெரிகாட் பாண்ட், ஸில்க் டை, பாயின்டெட்ஷூஸ் !'' இவற்றுடன் சிவந்த நிறமுடைய வாலிபன் ஒருவன், ''என். பதி'' என்ற பெயருடன் ஹோமியோபதியாக இருக்க முடியுமென்று அவள் சிறிதும் கற்பனை கூடப் பண்ணவில்லை. ஆகவே அதிர்ச்சியில் சிறிது நேரம் இமைகளைக் கொட்டாமல், டாக்டர் பதியின் மேல் பதித்த பார்வையை எடுக்கவும் மறந்து விட்டாள்.

மைனா போன்ற இளம் பெண், அதுவும் மிக மிக அழகான பெண், நேருக்கு நேர் அமர்ந்து கண் இமைக்காமல் தன்னை உறுத்துப் பார்ப்பது புது அநுபவமாதலால், டாக்டரின் சிவந்த முகம் மேலும் சிவந்தது.

அதை மறைக்க டிராயரிலிருந்து ஒரு புதுத் தாளை உருவி டைப்ரைட்டரில் செருகினான் பதி.

''பெயர் என்ன?''

மைனா இன்னும் அதிர்ச்சியிலிருந்து விடுபடாமலே, மெதுவாக, ''அகிலாண்டம்மாள்'' என்று பதிலளித்தாள்.

''பட...பட.... பட்...'' என்று காகிதத்தில் அந்தப் பெயரை 'டைப்' செய்த பதி நடுவில் கண்களை உயர்த்தி வியப்புடன் அவளைப் பார்த்தான்.

'இவ்வளவு அழகான பெண்ணுக்குப் பெயர் அகிலாண்டம்மாளா ? அதிசயமாக இருக்கிறதே !'

ஆச்சரியத்தை அடக்க முடியாமல் அவன் தலையிலிருந்து இடுப்பு வரை ஒரு நோட்டமிட்டான். (இடுப்புக்குக் கீழ் மேஜை மறைத்திருந்தது)

''என்ன கம்ப்ளெயிண்ட் ?''

''பல் வலி! துடி துடிக்கப் போறாப்பலே!''

படபட வென்று டைப் செய்தவன், திரும்பவும் பாதியில் நிறுத்திவிட்டு அவளை உற்றுப் பார்த்தான்.



இப்பொழுது நடைபெறுகிறது
சென்னை மிட்லண்ட் · ஸ்ரீ கிருஷ்ணா · மேகலா · நூர்ஜஹான்
மற்றும் தென்னகமெங்கும்
புரட்சி நடிகரின்
அடிமைப் பெண்
ஈஸ்ட்மென் கலர்
எம்ஜியார் பிக்சர்ஸ் தயாரிப்பு
உரையாடல்
சொர்ணம் · இசை - K.V. மகாதேவன் · ஒளிப்பதிவு - V. ராமமூர்த்தி · சியாம் சுந்தர்
டைரக்ஷன் - K. சங்கர் · ஸ்டுடியோ - சத்யா
ELEGANT

மைனுவின் செழுமையான கன்னங்களை மாறி மாறிப் பார்த்தான்.

மாசு மறுவில்லாத மழு மழுவென்ற கன்னங்கள்! அதை அடுத்துச் சிவந்த உதடுகள்... இன்னும்... ஆச்சரிய நிலை மாறாமல்... சிறிது திறந்த நிலையில் காட்சியளித்ததைப் பார்த்த டாக்டர் பதி மனம் கலங்கி, 'இவள் பல்வலியில் துடிப்பது போல் இல்லையே! இப்பொழுது என் மனசுதான் இந்தக் கன்னங்களைப் பார்த்துத் துடி துடிக்கிறது' என்று எண்ணமிட்டான்.

''எவ்வளவு நாட்களாக இந்தப் பல்வலி?''

''கிட்டத்தட்டப் பதினைந்து வருஷங்களாக!''

''என்னது?''

''ஆமாம்... நான்கு கடைவாய்ப் பல்லைக் கூடப் பிடுங்கியாச்சு !''

''பிடுங்கியாச்சா ?''

''ஆமாம்!''

மைனு சிறிது ஆச்சரியக் குறி அடங்கியவளாக நாற்காலியில் நன்றாகச் சாய்ந்து உட்கார்ந்து கொண்டாள். டாக்டர் பதி அந்த ஆச்சரியத்தைப் பிடித்துத் தன் முகத்தில் ஏற்றிக் கொண்டு, நாற்காலியின் ஓரத்தில் நகர்ந்து அமர்ந்து கொண்டான்.

''தலைவலி வருவதுண்டா ?''

''ஓ... எப்பப் பார்த்தாலும் தலைவலிதான். பல்வலியே தேவலை...!'' என்று பதிலளித்த மைனு ஒய்யாரமாகத் திரும்பி டாக்டர் அறையை ஆராய ஆரம்பித்தாள்.

''ஓ...!'' என்று யோசனையுடன் அவளை உற்றுப் பார்த்த பதி, ''என்ன டிரிங்க் பிடிக்கும்? கூல் டிரிங்கா? அல்லது சூடாக...?''

''என்ன...? கூல் டிரிங்கா? பக்கத்திலேயே வரக் கூடாது. எப்பவும் சூடாக வெந்நீர்தான் சாப்பிடுவது. கக்கு தட்டிப் போட்டு. நூற்றுப் பத்து டிகிரி வெயில் அடித்தால் கூட !''

டாக்டர் பதி விழி பிதுங்கி விட்டவன் போல் அவளை உற்றுப் பார்த்தான். 'இவ்வளவு நாகரிக நங்கை வெந்நீர் சாப்பிடுகிறாள். அதுவும் கக்கு வெந்நீர் !' தானே வெந்நீர் சாப்பிட்டவன் போல் நெற்றியில் துளித்த வியர்வையை ஒற்றிக் கொண்டான்.

''அப்போ குளிப்பதும் கடச்சுட வெந்நீரில்தானே !''

மைனு 'களு'க்கென்று சிரித்தாள்.

''இல்லவே இல்லை ! காலையில் ஐந்து மணிக்குத் துணியைக் கட்டிக் கொண்டு, கிணற்றடியில் நின்று ஜிலுஜிலு வென்று பத்து வாளித் தண்ணீர் மொண்டு விட்டுக் கொண்டுதான் குளிப்பது !''

டாக்டர் பதிக்கு மனம் மேலும் துடிதுடி யென்று துடித்தது.

அந்தப் பாவை காலையில் கிணற்றடியில் ஜிலுஜிலு வென்று வாளியில் தண்ணீர் மொண்டு குளிப்பதைக் கற்பனைக் கண்களால் கண்ட போதே பதியின் மேனி ஐஸ் வாட்டரில் குளித்தது போலச் சிலிர்த்துக் கொண்டது.

சமாளித்துக் கொண்டு தயக்கத்துடன், ''பச்சைக் காயில் என்ன காய் பிடிக்கும்?'' என்று கேட்டான்.

பட்டென்று வந்தது பதில்—''பாகற்காய்!''

டாக்டர் பதி, பாகற்காய் என்ற பெயரை உச்சரித்தாலே வாய் கசக்கும் என்று பயந்தவன் போல் முகம் சுளித்தான்.

''ஸ்வீட் ?''



''நான் வாங்கிட்டு வந்திருக்கிற இந்தப் புடவை என்ன மதிப்பிருக்கும் சொல், பார்க்கலாம்?''

''இதற்கு என்ன ஓர் எவர்சில்வர் டம்ளரோ அல்லது டபராவோ கிடைக்கும், அவ்வளவுதான்!''

''ஸ்வீட்டா? பக்கத்தில் வரவே கூடாது.''

''பப்பர்மெண்ட் சாக்லேட்கூட....!''

''சிவ.... சிவ.... கண்ணெடுத்தும் பார்க்கிறதில்லை !''

''ஐஸ்கிரீமாவது.... எப்பொழுதாவது சாப்பிடுவதுண்டா ?''

''ராம... ராமா! பெயரைச் சொன்னாலே மகா பாவம்!''

சிறிது நேரம் பேச்சிழந்து சிலையாகக்கூட அமர்ந்துவிட்ட பதி சட்டென்று தன்னைச் சமாளித்துக் கொண்டு, ''எந்த மாதிரிப் படுக்கை பிடிக்கும்? அதாவது ஸ்பிரிங் காட்டா, அல்லது....?''

''கட்டிலா? பேசப்படாது. பழைய புடவையைக் கீழே விரித்து மணைக் கட்டையைத் தலைக்கு வைத்துத்தான் எப்பவும் படுப்பது....!''

டாக்டர் பதி ஆச்சரியத்தின் எல்லையை எட்டிக் கொண்டிருந்ததால் டைப்ரைட்டரில் விவரங்களை அடித்துக் குறித்துக் கொள்ளவும் மறந்து விட்டான்.

அவன் மனத்தில் விசித்திரமான கற்பனை சினிமாக் காட்சிபோல் ஓடிக் கொண்டிருந்தது.

அவன் அந்தப் பெண்ணைக் கலியாணம் செய்து கொண்டால் வெளியில் போனால் ஜாலியாக ஐஸ்கிரீம் வாங்கிச் சாப்பிட முடியாது ! அம்மா கேட்கும் சீதனமான ''ஸ்பிரிங் காட்டில்'' படுக்க மாட்டாள். கிணற்றடி ஸ்நானத்துக்குப் புதிதாகக் கிணறு வெட்ட வேண்டும் ! ஒன்றில் மட்டும் அம்மாவுக்கும், மனைவிக்கும் ஒற்றுமை இருக்கும். இருவரும் பாகற்காய்ப் பிரியர்கள் ! பாகற்காய்க் கூட்டு, கறி குழம்பு, பாகற்காய்ப் பச்சடி..... கிச்சடி! பாகற்காய் பஜ்ஜி, பாகற்காய் பாயஸம், பாகற்காய் அல்வா!'' கற்பனை விசித்திரமாக நீண்டு கொண்டே போன போது 'டாண் டாண்' என்று மணி ஆறு அடித்தது.

மைனுவுக்குத் திடீரென்று சினிமாவுக்கு நேரமாகி விட்டது ஞாபகம் வரவே துடிப்புடன் எழுந்து நின்ருள்.

''சார், மிஸ்டர் என்.பதி! தயவுசெய்து ஹோமியோபதி மருந்தைச் சீக்கிரம் கொடுக்கிறீர்களா ?'' என்று படபடத்தாள்.

கனவு உலகிலிருந்து விடுபட்ட என்.பதி, தான் எதற்கு இந்த மாதிரி அசட்டுத்தனமான கற்பனையில் இறங்கினேம் என்று புரியாதவனுக, அவசரமாகப் பக்கத்திலிருந்த அலமாரியைத் திறந்து, அதில் அடுக்கியிருந்த மருந்துப் பாட்டில்களை ஆராய்ந்தான்.

ஜவ்வரிசி போன்ற மாத்திரைகளைக் காகிதத்தில் கொட்டியவன் அதைச் சிறு சிறு பொட்டலங்களாகக் கட்டி முடித்த நேர்த்தியைப் பார்த்துச் சிறிது நேரம் சினிமாவை மறந்திருந்த மைனு, ''மிஸ், அகிலாண்டம்மாள் !'' என்று டாக்டர் விளித்ததைக் கேட்டு, வாயிலிருந்த முப்பத்திரண்டு பற்களும் ஏககாலத்தில் வலித்தது போலத் துடிதுடித்து விட்டாள்.

அந்தச் சமயம் பார்த்துத்தானு அவள் வாயில் அடக்கியிருந்த லவங்கம் ஊறி நறுக்கென்று பல் இடுக்கில் சிக்கிக் கொள்ள வேண்டும் !

''ஆ!'' என்று அவள் கன்னத்தில் கை வைத்துத் துடிக்கத் திடுக்கிட்டு நிமிர்ந்த பதி, ''ஓ ! பல் வலி அதிகமாகி விட்டதா?'' என்று கூறிப் பதறி எழுந்து அவள் அருகில் வந்து விட்டான்.

அடுத்த கணம் மைனு விக்கி விக்கி அழ ஆரம்பித்தாள்.

பதி துடி துடித்து விட்டான்.

''ஐயையோ ! இவ்வளவு நேரம் இவளுக்கா பல்வலி என்று எண்ணிச் சந்தேகித்தோமே !'' என்று பதறிய பதி இரண்டு ஜவ்வரிசி மாத்திரைகளை எடுத்துக் கையில் வைத்துக் கொண்டு, ''சீக்கிரம் வாயைத் திறங்கள். இரண்டு குளிகை சாப்பிட்டால் உடனே பல்வலி குறைந்துவிடும்'' என்று படபடத்தான்.

மைனு கைக்குட்டையை எடுத்து வாயில் அடைத்துத் தன் அழுகையை அடக்கியபடியே, ''ஏன் சார் ! என்.பதி! ஓ.... சாரி! உங்க பதி! சீச்சீ, ஏதோ ஒரு பதி! என். பதியாம், என் பதி! உங்க பேர்தான் திருப்பதி ! என் பெயரா அகிலாண்டம்மாள்? அப்படியா இவ்வளவு நேரம் எண்ணிக் கொண்டிருந்தீர்கள்? என்னைப் பார்த்தால் அகிலாண்டம்மாள் மாதிரியா இருக்கு?'' என்று துக்கம் தாங்காமல் தேம்ப ஆரம்பித்து விட்டாள்.

பதி பதறியபடியே, ''மிஸ்... மிஸ்... நான் ஆரம்பத்திலேயே சந்தேகித்தேன். இவ்வளவு அழகான பெண்ணுக்குப் பெயர் அகிலாண்டம்மாவா என்று ! ஐ ஆம் வெரி ...வெரி... சாரி !''

பெண் என்ற பதத்துக்கு டாக்டர் கொடுத்த அடைமொழியினுல் முகம் விகசித்த மைனு கண்களைத் துடைத்துக் கொண்டே, ''அது என் பாட்டியின் பெயர், டாக்டர் ! பாட்டி பெயரை 'மாடர்னு' மாற்றி எனக்கு எங்கப்பா 'அகில்' என்று பெயர் வைத்தார். அதே எனக்குப் பிடிக்கல்லே! அதனுல் என்னை எல்லோரும் 'மைனு' என்றுதான் கூப்பிடுவார்கள்'' என்றவள் அழகாகத் தன் முத்துப் பற்கள் தெரியச் சிரித்தாள்.

''அம்மா ! தப்பித்தேன்'' என்று பெருமூச்சுவிட்ட பதி, ''அப்போ உங்களுக்கு கூல் டிரிங், ஐஸ்கிரீம்?''

''ரொம்ப ரொம்பப் பிடிக்கும் சார் ! அச்சோ! தினமும் ஐஸ்கிரீம் சாப்பிடாட்டா பிராணன் போயிடாதா ?''

பதி துள்ளி எழுந்து போன் நம்பரைச் சுழற்றினுன்.

'' ஹல்லோ ! ஐஸ்கிரீம் பார்லரா? நான் தான் உங்கள் கடைக்கு எதிர் வீடு. டாக்டர் பதி பேசறேன். உடனே இரண்டு கப் கூடச் கட..... ஓ... ஐம் ஆம் சாரி! ஜில் என்று ஐஸ்கிரீம் அனுப்புங்கள். அர்ஜண்ட்!''

எதிர்க் கடைப் பையன் அதற்குள் இரண்டு கப் ஐஸ்கிரீமுடன் உள்ளே நுழையவும் இருவரும் பிரயாசையுடன் ஒருவர் மேல் ஒருவர் வைத்த கண்களை அகற்றி ஐஸ்கிரீமின் மீது வைத்தனர்.

அடுத்த ஐந்து நிமிடங்கள் அங்கு ஒரே நிசப்தம் நிலவியது !

அதைச் சாதகமாக்கிக் கொண்டு இரு ஜோடிக் கண்கள் ஆயிரமாயிரம் பேச்சுக்களைப் பேசி எண்ணங்களைப் பரிமாறிக் கொண்டன.

கனைப்புச் சத்தம் கேட்டு இருவரும் திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்த போது டாக்டர் அறையிலிருந்து சற்று முன்பு வெளியேறிய நர்ஸ் இடுப்பில் கைகளை வைத்துக் கொண்டு குறுகுறுப்புடன் இருவரையும் ஆராய்ந்தபடி நின்று கொண்டிருந்தாள்.

'யார் இவள்? புரூட்ஸாலட் சாப்பிடும் போது அதில் தப்பி விழுந்த கண்டைக்காய் போல் வந்து நிற்பவள்?' என்று எண்ணி மைனு அவளை உறுத்துப் பார்த்தாள்.

பதி அவளைச் கண்டைக்காய் என்று எண்ணு விட்டாலும் பாகற்காய் என்றுதான் எண்ணியிருக்க வேண்டும் என்பது அவனும் முகத்தைச் சுளித்ததிலிருந்து தெரிந்தது.

பதி தவிப்புடன் ''மிஸ் மைனு! மீட் மிஸ் குமாரி. என் அஸிஸ்டெண்ட். ஹோமியோபதியில் பட்டம் வாங்கியவள்'' எனவும், ''ஓ ! என்ன உறவு டாக்டர் ? அதை முதலில் சொல்லுங்கள்'' என்று மைனு அவசரப்படவே, குமாரி புன்சிரிப்புடன் டாக்டருக்குக் கைகாட்டி விட்டு, ''உறவா? உறவொன்றும் இல்லே. பக்கத்து வீட்டுக்காரி !'' என்ருள்.

'அப்பாடி ! அவர் வீட்டுக்காரி இல்லையே ! பிழைத்தேன்!' என்று மனசுக்குள் எண்ணிய மைனு மறுபடியும் சந்தேகக் கண்களுடன் பதியைப் பார்க்கவே அவர் தவிப்புடன் மிஸ் குமாரியைப் பார்க்க, அவள் அவரை உற்றுப் பார்த்துக் கடிகாரத்தைச் சுட்டிக்காட்டி, ''மணி ஏழு ! இன்னும் பத்துப் பேர்கள் காத்துக் கொண்டிருக்கிருர்கள், டாக்டர் !'' என்று சிறிது கண்டிப்பான குரலில் கூறினுள்.

மணி நேரம், சினிமா, சிநேகிதிகள் எல்லாவற்றையும் அடியோடு மறந்துவிட்ட மைனு கனவுலகில் சஞ்சரிப்பவள் போல் ஒரு புது கிளுகிளுப்புடன் வீதியில் இறங்கிய போது தான் பாட்டியின் பல் வலி மருந்து பொட்ட

ப்ரூக் பாண்ட்

ப்ரூ இன்ஸ்டன்ட்

காபி சிக்கரி ப்ளெண்ட்

ப்ரூ—ப்ரூக் பாண்ட் வழங்கும் நொடிப் பொழுதிலாகின்ற காபி சிக்கரி கலவை.

ப்ரூ தயாரிப்பது மிகசுலபம்! வெந்நீரை ஊற்றி, விரும்பும் சுவை பெற பாலும் சர்க்கரையும் சேர்த்துக் கொள்ளவும். அசல் காபி–சிக்கரி மணமும் சுவையும் கொண்டு உங்களுக்குப் புத்துணர்ச்சி அளிக்க நொடிப் பொழுதில் ப்ரூ தயாராகிவிடுகிறது!

நினைவிலிருக்கட்டும், ப்ரூ தயாரிப்பதிலே சிறிதுகூட சிரமமோ அல்லது வடிகட்டும் தொந்தரவோ கிடையாது.

இதற்கு மேலாக, நீங்கள் விரும்பும் சுவைக் கேற்றபடி ப்ருவை சிறிது அதிகமாகவோ அல்லது குறைவாகவோ சேர்த்து தயாரித்துக் கொள்ளலாம்.

வாங்குங்கள் ப்ரூ—காபியும்–சிக்கரியும் கலந்த சுவையை நன்கறிந்த ப்ரூக் பாண்டின் ருசி பார்த்துத் தரம் காணும் திறமையாளர்களால் கவனத்துடன் கலக்கப்பட்டது.



லங்களை டாக்டர் மேஜையின் மேல் வைத்து விட்டது ஞாபகம் வரவே அவசரமாக ஓடித் திரும்பவும் டாக்டர் அறைக்குள் நுழைந்தாள்.

அவள் நுழைந்த சத்தம்கூடக் கேட்காமல் டாக்டர் வீதிப் பக்கமிருந்த ஜன்னலருகில் முகத்தைப் பதித்து வெளியில் எதை இவ்வளவு கவனமாகப் பார்த்துக் கொண்டிருக்கிறார்?

சிறு வயதிலிருந்தே மைனாவுக்கு யாராவது ஜன்னல் வழியாக எட்டிப் பார்ப்பதைப் பார்த்துக் கொண்டு சும்மா இருக்க முடியாது. ஜன்னலுக்கு மறுபுறம் இருந்து அதைப் பார்த்தால்கூடக் குடுகுடுவென்று உள்ளே ஓடி வந்து ஜன்னல் வழியாகப் பார்ப்பவர்களைத் தள்ளிக் கொண்டு தானும் முகத்தை ஜன்னல் கம்பிகளில் பதித்துக் கொண்டு வெளியே வேடிக்கை பார்ப்பாள்.

அந்தச் சுவாரசியம் அவளுக்கு இப்பொழுதும் தொற்றிக் கொண்டது.

மைனா சத்தம் செய்யாமல் நடந்து வந்து டாக்டர் தோளின் மேலாக முகத்தை நீட்டித் தானும் ஜன்னல் வழியாக அவனுடன் எட்டிப் பார்த்த போதுதான் பதி, "மிஸ் மைனா.... மிஸ் மைனா...." என்று தன்னை மறந்து பிதற்றிக் கொண்டிருப்பது கேட்டது. மைனா திடுக்கிட்டுப் பின்னால் நகர்ந்து நாற்காலியில் மோதி அதை உருட்டித் தள்ளினாள். மிஸ் மைனா வீதியில் போகும் போது அவளை 'மிஸ்' பண்ணக் கூடாதென்று தன் தலையை ஜன்னல் கம்பிகளில் பதித்து மைனா ஜபம் செய்து கொண்டிருந்த பதி அதிர்ந்து திரும்பினான்.

மைனாவை எதிர்பார்த்ததும் தடுமாறி அசட்டுச் சிரிப்புடன், "மைனா! மைனா! பறவை ஜன்னல் மேல் உட்கார்ந்தது. பிடிக்கப் போனேன். 'மிஸ்' பண்ணிவிட்டேன்" என்று கூறவே அவனுடைய எண்ணங்களை 'மிஸ்' பண்ணாமல் அறிந்து கொண்ட மைனா, "அப்படியா! இப்பொழுது ஒரு மைனா ஜன்னலுக்கு மறுபுறம் வரும்! அதை 'மிஸ்' பண்ணாதீர்கள்!" என்று நாணத்துடன் மொழிந்துவிட்டு மருந்துப் பொட்டலங்களை எடுத்துக் கொண்டு விர்ரென்று வெளியே பறந்து விட்டாள்.

வீட்டில் பாட்டியிடம் மைனா மருந்துப் பொட்டலங்களைக் கொடுத்துக் கொண்டிருந்த போது வல்லி வீட்டில் அவள் பெயருக்கு சஹஸ்ரநாம அர்ச்சனை நடந்துகொண்டிருந்தது.

அடுத்த நாள் மாலை மணி மூன்றடித்ததுமே மைனா தன்னை அழகாக அலங்கரித்துக் கொண்டு அவசரமாகப் பாட்டியிடம் வந்து நின்றாள்.

"பாட்டி....! பாட்டி....! பல் வலி எப்படியிருக்கு? மருந்து வாங்கிக் கொண்டு வரட்டுமா?" என்று கேட்கவும் பாட்டி வியப்புடன் பேத்தியைப் பார்த்தாள்.

நேற்று ஆயிரம் தடவை கெஞ்சிப் போகச் சொன்னவள் பாட்டி; இன்று பேத்தி வந்து வலுவில் கேட்டால் வியப்பாக இருக்காதா?



இயக்குனர்: "என்ன அக்கிரமம் ஸார் இது! தமிழ்ப் படத்திலே 'தி எண்டு'ன்னு இங்கிலீஷிலே போடணும்னு ஏன் கட்டாயப்படுத்தறீங்க?"

படாதிபதி: "தமிழ் தெரிந்தவங்களெல்லாம் இந்தப் படத்தை இரண்டு ஸீன்களைப் பார்த்து முதலிலேயே எழுந்து போய் இருப்பாங்க! தமிழ் தெரியாதவங்க, எழுந்து போக வேண்டாமா? அதுக்குத்தான்.",

"பல் வலியா! சுத்தமா இல்லே! நேற்று ஒரு டோஸ் மருந்து சாப்பிட்டதுமே அது பறந்து போச்சு....!"

"ஐயையோ! எப்படிப் போகும்? இருக்காது பாட்டி. உனக்கு மறதி அதிகமாச்சே!"

"ஏண்டீ மைனா! வலிகூடவா மறந்து போகும்?"

மைனாவின் முகம் தொங்கி விட்டது. மறுகணமே தன்னைச் சமாளித்துக் கொண்டு, "அப்போ இடுப்பு வலிக்கு மருந்து வாங்கிண்டு வரட்டுமா?"

"இடுப்பு வலியா? யாருக்கு?"

"உனக்குத்தான்! நேற்று அப்பளம் இட்டபோது மளுக்குன்னு பிடிச்சிண்டு வலிக்கறதுன்னு சொன்னாயே!

"அதுவா? அது ராத்திரி. அந்த அப்பளம் பொரிச்சுச் சாப்பிட்டதும் போய் விட்டதே!"

"அப்போ தலை வலிக்காவது வாங்கிண்டு வரட்டுமா?"

"ஐயோ! நான் அப்பவே சொன்னேன்! இந்த பூஃபாங் அஜந்தாக் கொண்டை எல்லாம் போட்டுக்காதேன்னு.... கேட்டால்தானே! தலையை வலிக்காமல் என்னடி செய்யும்?"

"ஐயோ, பாட்டி! எனக்கில்லை தலைவலி. உனக்குத்தான்!"

"அடியம்மா! ஜோஸியம் எப்போ கத்துண்டே! எனக்குத் தலைவலியாமே!"— பாட்டி பகபகவென்று சிரிக்கவும் புரை ஏறிக் கொண்டு இருமல் வந்து விட்டது.

மைனா முகம் மலர, "பாட்டி பாட்டி, இந்த இருமலை இப்படியே விடக் கூடாது.

ரொம்ப ஆபத்து! இரு... இரு நான் என். பதியிடம் போய் மருந்து வாங்கிண்டு வருகிறேன்.

''அடியம்மா! உன் பதியா? யாருடீ, அது?''

''போ, பாட்டி! உன் ஹோமியோபதி டாக்டர் இல்லே, அவர்தான் என். பதி'' என்றவள் நாக்கைக் கடித்துக் கொண்டு நாணித் தலை குனியவே பாட்டி சட்டென்று விஷயத்தைப் புரிந்து கொண்டு சிரிக்கவும் இரும்பவும் இருமல் வந்து விட்டது.

பாட்டியைப் பேச விட்டால் தனக்கு இருமல் இல்லை என்று கூறிவிடப் போகிருளே என்ற பயத்தில் பேத்தி, ''இரு பாட்டி மருந்து வாங்கிக் கொண்டு வருகிறேன்'' என்று கூவிக் கொண்டே மைனு போலப் பறந்து மறைந்து விட்டாள்.

அன்று மைனு டாக்டர் அறை வெளியே பதற்றமில்லாமல் அமர்ந்திருந்தாள். மிஸ் குமாரி கண்ணில் தென்படாததும் அவளுக்குச் சிறிது ஆறுதலாக இருந்தது.

எல்லோரையும் போக விட்டுக் காத்திருந்து, கடைசியில் அவள் டாக்டர் அறையில் நுழைந்தபோது அங்கு மேஜையின் மேல் தயாராக இரண்டு ஐஸ் கிரீம் கப்புகள் காட்சியளித்தன. ஐஸ்கிரீமின் மேல் சொகுசாக வீற்றிருந்த செர்ரி பழம் போல் மைனுவின் முகம் சிவந்து விட்டது.

சிறிது நேரம் அவளையே கண் கொட்டாமல் பார்த்த பதி மெல்லிய குரலில், ''மிஸ் மைனு! பாட்டிக்குப் பல்வலி எப்படியிருக்கு?'' என்று கேட்டான்.

''பல் வலியா? ரொம்பத் தேவலே. ஆனுல் இப்போ தலைவலி. இல்லே இல்லே. இடுப்பு வலி. அடடா! அதுவுமில்லே. காது வலி! காது வலியா? இல்லே போலிருக்கே! ஐயோ! ஏதோ ஒரு வலி சொன்னுங்க. மறந்துடுத்தே!''

என். பதி அவள் தவிப்பைக் கண்டு வெகுவாக ரசித்தான்.

மைனுவுக்கு முகம் தொங்கி விட்டது.

''சாரி, டாக்டர்! நாளைக்கு நன்ருக விசாரித்துக் கொண்டு வருகிறேன்'' என்ற அவள் மறக்காமல் ஐஸ் கிரீம் கப்பைக் காலி செய்து விட்டுத் தயக்கத்துடன் சுற்றுமுற்றும் பார்த்தாள்.

மிஸ் குமாரி, இன்னும் காணப்படாததால் சிறிது தெளிவடைந்தவளாக, ''மிஸ்டர் பதி, நீங்கள் மாட்னி ஷோ பார்ப்பதுண்டா?'' என்று கேட்டாள்.

மாட்னி ஷோவுக்குக் கூப்பிட வந்திருக்கிருளோ என்ற பயத்தில், ''சேச்சே! மாட்னி ஷோவுக்குப் போகிறதே இல்லே. எல்லாம் நைட் ஷோதான்'' என்று பதில் கூறவும், ''ஹையா!'' என்று குதூகலித்த மைனு, ''நினைத்தேன். அப்படித்தான் இருக்குமென்று எனக்கும் மாட்னி பிடிக்காது'' என்ருள்.

அடுத்து, ''எழுபது மைல் வேகத்தில் கார் ஓட்டப் பிடிக்குமா?'' என்று அவள் கேட்டபோது, ''பிடிக்காது'' என்ற பதில் பட்டென்று வந்தது.

''பிடிக்காதா! ஏன்?''

''ஏனென்ருல் கார் இல்லை. ஸ்கூட்டர் தான் இருக்கிறது!'' என்று பதி உற்சாகத்துடன் கூறவே இருவரும் பகபகவென்று சிரித்தார்கள்.

நறுக்கென்று நெல்லிக் காயை மறுபடியும் கடித்த மைனு சிறிது யோசனையுடன் தரையைப் பார்த்தவண்ணம், ''பூனை பிடிக்குமா?'' எனவும், பதி திகைத்து, ''பூனையா?.... என்ன பூனை?'' என்ருன்.

''என்ன பூனையா? நாலு கால் பூனைதான்!''

''என்னது? நாலு கால் பூனையா?''

''ஆமாம், நாலு கால், ஒரு வால், இரண்டு பூனைக் கண்கள் இருக்குமே.... அதே பூனைதான்'' எனவும், ''வீச் என்ற கூவலுடன் பதி தன் பூட்ஸ் கால்களைத் தூக்கி நாற்காலியின் மீது வைத்துக் கொள்ளவே மைனுவும் பதறி நாற்காலியின் மீது ஏறி நின்று கொண்டு, பீதியுடன், ''என்ன...? என்ன?'' என்று கேட்டாள்.

பதி தடுமாற்றத்துடன், ''பூனை என்று சொன்னுயே! எங்கே? மேஜைக்கடியில் வந்து ஒளிந்து கொண்டிருக்கிறதா?'' என்று கேட்ட போதுதான் விஷயம் புரிந்த மைனு, ''அப்போ, உங்களுக்கும் பூனையைக் கண்டால் பயமா? பிடிக்காதா! நமக்குள் நல்ல ஒற்றுமை! அதுக்குத்தான் கேட்டேன்!'' எனவும், ஹாஸ்யம் தாங்காமல் இருவரும் வயிற்றைப் பிடித்துக் கொண்டு மேஜையின் மேல், உண்மையாகவே விழுந்து விழுந்து சிரிக்கவும், தலைகள் 'நங்'கென்று மோதிக் கொண்டன.

''நங்''கைத் தொடர்ந்து ஒரே நிசப்தம்! இருவரும் அந்த நிலையிலேயே நிமிர்ந்து ஒருவரை ஒருவர் பார்த்தபோது, ''க்கும்!'' என்ற கனைப்புச் சத்தம் கேட்கவே, திடுக்கிடவும் மறந்து மெதுவாகத் தலையைத் திருப்பிப் பார்த்தார்கள்.

மிஸ் குமாரிதான்!

'வில்லி ஜாடையாக இடுப்பில் கைவைத்து நிற்பதைப் பார்!' என்று மனதுக்குள் எண்ணமிட்டபடி மைனு நிமிர்ந்து நாற்காலியில் நன்ருக உட்கார்ந்த போது குமாரி தொண்டையைக் கனைத்துக் கொண்டு வந்தாள். ''இங்கு யார் டாக்டர் என்று தெரியவில்லையே! ஹோமியோபதி டாக்டர்கள் தான் ஏதேதோ கேள்விகள் கேட்பார்கள் என்று கேள்வி. இங்கு மாருக வைத்தியத்துக்கு வந்தவள் ஹோமியோபதி டாக்டரிடம் ஏதேதோ கேள்விகள் கேட்கிறுள்!'' என்று கூறிக் கொண்டே யோசனையுடன் அதே போனில் டாக்டரைப் பார்த்துக் கொண்டே மேஜையை நெருங்கினுள். பதி சங்கடத்துடன் நெளிவதைப் பார்க்கப் பிடிக்காத மைனு குற்ற உணர்வுடன், ''அப்புறம் வருகிறேன் டாக்டர்.....!'' என்று கூறிக் கொண்டே 'விருட்'டென்று எழுந்து வெளியில் போய் விட்டாள்.


வீதியில் சிறிது தூரம் நடப்பதற்குள் மிஸ் குமாரியைப் பற்றிய சந்தேகம் மைனு மனத்தில் விசுவரூபம் எடுத்து விட்டது.

இப்பொழுது நடைபெறுகிறது

சென்னை

குளோப் • பிரபாத் • ராம் • சரவணா

தங்கம் • மற்றும் தென்னாடெங்கும்




அம்பாள் புரொடக்ஷன்ஸ்

காவல் தெய்வம்

கதை • ஜெயகாந்தன் • சங்கீதம் • தேவராஜன்

ஒளிப்பதிவு • விஜயன், எடிட்டிங் • R. தேவராஜன்

டைரக்ஷன் • K. விஜயன்




ELEGANT

''யார் இவன்? சுத்த அதிகப் பிரசங்கியாகவும், முட்டுக் கட்டையாகவும் இருப்பாள் போலிருக்கிறதே !'' என்று எண்ணமிட்ட மைனு அந்தச் சந்தேகத்தை முளையிலேயே கிள்ளிவிட வேண்டும் என்று தீர்மானித்துத் திரும்பி வேகமாக டாக்டர்வீட்டுக்குவந்தாள்.

டாக்டர் அறையினுள் நுழையப் போன போது உள்ளே மிஸ் குமாரி டாக்டரிடம் பேசுவது காதில் விழுந்தது.

''ஸோ.... டாக்டர் பதி! கன்கிராஜுலேஷன்ஸ்!



காதலி : என்னை ஏமாற்றிவிட்டு ஓடி விடவா, பார்க்கிறீர்...!

அடுத்த மாதம் எனக்குக் கல்யாணமாகி ஊருக்குப் போய் விடுவேனே, பிறகு நீங்கள் அஸிஸ்டெண்ட் இல்லாமல் திண்டாடுவீர்களே, என்று கவலைப்பட்டேன். மிஸ் மைனு உங்களுக்கு இங்கும், வீட்டிலும் சரியான அஸிஸ்டெண்டாக இருக்கத் தகுந்தவள்!'' என்று குமாரி கேலிக் குரலில் கூறிய போது, ''என்ன குமாரி! கேலி போதும்! நேற்றே என் தங்கை இவள் என்று கூறி விடாமல் தடுத்துப் பக்கத்து வீட்டுக்காரி என்று கூறி வேடிக்கை பார்த்தாய். இன்றும் ஏதேதோ சொல்லி — மைனுவை மருண்டு ஓட வைத்து விட்டாய்'' என்று பதி குறைப்படவே குமாரி குதூகலத்துடன் சிரித்தாள். ''அதுக்குப் பிராயச்சித்தமாக இன்றே இந்த விஷயத்தை அப்பா காதிலே 'போட்டுடறேன் பதி அண்ணா, போதுமா ?'' என்று கேட்டாள்.

வெளியில் நின்று கொண்டிருந்த மைனுவின் உள்ளம் பத்து கப் ஐஸ் கிரீம் சாப்பிட்டது போல் ஒரேயடியாகக் குளிர்ந்துவிட்டதால் வந்த சுவடு தெரியாமல் ஓடி விட்டாள்.

மறு நாள் மாலை மூன்று மணிக்கு டாக்டர் பதி வீட்டுக்குப் போவதற்கு மைனு பாட்டியின் உடல் நிலையை விசாரிக்க வேண்டிய அவசியம் இருக்க வில்லை.

ஐஸ் கிரீம் சாப்பிட்டதால் தொண்டை கட்டிக் கொண்டு விட்டதாகச் சாக்குச் சொல்லிப் பதியின் மேஜை முன் அமர்ந்த மைனு அன்று பேச்சுவாக்கில் தானே இரண்டு கப் ஐஸ் கிரீமைக் காலி செய்து விட்டாள்.

தொடர்ந்து ஒரு வாரம் மைனுவுக்கு ஏதோ உடல் நலிவு ஏற்பட்டு, டாக்டர் வீடு தேடி வந்ததில் ஐஸ்கிரீம் கடைக்காரனுக்கு நல்ல வியாபாரம் ஆயிற்று!

ஒரு நாளைக்குக் குறைந்தது மூன்று தடவையாவது தன்னைச் சந்திக்கும் சிநேகிதி மைனு ஒரு வாரமாகியும் கண்ணில் படாமல் இருக்கும் அதிசயத்தை எண்ணி வியந்த அவள் சிநேகிதி லல்லி, அன்று எப்படியும் அவளைப் பார்த்து விடுவதென்று, தோழி வீடு தேடி வந்த போது, மைனு டாக்டர் வீட்டுக்குக் கிளம்பத் தயாராகிக் கொண்டிருந்தாள்.

லல்லியைப் பார்த்ததும் அசட்டுச் சிரிப்புடன், 'வாடி !'' என்று கூப்பிடவே லல்லி கோபத்துடன் அவளை ஏற இறங்கப் பார்த்து, ''நன்றாக இருக்குடி, மைனு ! இன்று உன்னைப் பெண் பார்க்க வருகிறார்கள் என்று என்னிடம்கூடச் சொல்லக் கூடாதா?, இவ்வளவுதானா, உன் நட்பு?'' என்று படபடவென்று பொரிந்து தள்ளினாள். ஓர் ஓரத்தில் அமர்ந்து ஜப மாலையை உருட்டிக் கொண்டிருந்த மைனுவின் பாட்டி கண்களை உருட்டி வியப்புடன் இருவரையும் பார்த்தாள்.

மைனு தவிப்புடன், ''சேச்சே ! யாருடி, என்னைப் பார்க்க வருகிறார்கள்? நான் டாக்டர் வீட்டுக்கு இல்லே. புறப்பட்டுக் கொண்டிருக்கிறேன்'' என்று கூறியவள் பாட்டி கவனிப்பதைப் பார்த்து விட்டு நாக்கைக் கடித்துக் கொண்டாள்.

லல்லி இடுப்பில் கை வைத்து, தலையிலிருந்து கால் வரை மைனுவை உற்றுப் பார்க்கவே அவள் கண்கள் கேட்ட, ''உனக்கென்னடீ, கேடு?'' என்ற வினாவைப் புரிந்து கொண்ட மைனு சங்கடத்துடன் நெளிந்து, ''உடம்புக்கு ஒன்றுமில்லேடீ ! ஐஸ்கிரீம் சாப்பிட்டுத் தொண்டைக் கட்டு ! வலி!'' என்று கழுத்தைத் தடவிக் கொண்டே கூறினாள். ''ஓ!'' என்று வியந்த லல்லி பெருங்குரலில், ''ஏண்டீ ! யாருக்குக் காது குத்தறே? அடைமழையிலும் பனியிலும்கூடத் தினம் பத்து கப் ஐஸ் கிரீம் சாப்பிட்டு ஏப்பமிடுபவள் நீ! உனக்கா தொண்டைக் கட்டு? யாருடீ, அந்த டாக்டர்? சீக்கிரம் சொல்லு! இவ்வளவு அலங்காரத்துடன் நீ டாக்டர் வீட்டுக்குப் போகிறாயென்றால் ஏதோ விஷயம் இருக்கிறது!'' என்று கேலியாகக் கூவவே பாட்டி ஜப மாலையைப் போட்டு விட்டு இடுப்பு வலியையும் மறந்து 'மளக்' கென்று எழுந்து விட்டாள்.

''டாக்டர் பையன் கண்ணுக்கு லட்சணமாக நன்றாக இருக்கிறான், இந்தப் பிடிவாதக்காரப் பெண்ணுக்குப் பிடிக்க வேண்டுமே என்று கவலைப்பட்டேன். தினமும் சிநேகிதி வீட்டுக்குப் போறதாச் சொல்லிட்டு டாக்டர் பதியைத் தேடி ஓடின்டிருக்காள் என்று தெரியாமல் போச்சே ! இனி மேலும் சும்மா இருக்கக் கூடாது'' என்று பெருங் குரலில் பாட்டி முணு முணுத்துக் கொண்டே மைனுவின் தகப்பனாரைத் தேடிக் கொண்டு சென்றாள்.

அடுத்த நாள் டாக்டர் என். பதி சம்பிரதாயமாகப் பெண் பார்க்க வந்த போது, மைனு காப்பிக்குப் பதில் ஐஸ்கிரீம் கப்பைக் கையில் ஏந்தி நாணிக் கோணிக் கொண்டு, தோழி லல்லி சகிதம் உள்ளேயிருந்து அழகு நடை நடந்து வந்தாள்.

மைனு — பதி கலியாணத்தில் தடுக்கி விழுந்தவர் எழுந்து பார்த்தால், தடுக்கிவிட்ட பொருள் ஐஸ்கிரீம் கப்பாகத்தான் இருந்தது என்று கூறவும் வேண்டுமோ !



அஞ்சலையின்

கல்யாணி

"ஏ... அஞ்சலை... என்னைப் பார்க்காமலே போய்க்கிட்டு இருக்கியே?" முனிசாமி தான் கேட்டான். அவன் கேள்வியில் ஏக்கம் பிரதிபலித்தது.

தலையில் வைத்துக் கொண்டிருக்கும் கறிகாய்க் கூடையின் பாரம் கழுத்தை அழுத்தினாலும், தலையை இலேசாகத் திருப்பிக் குரல் வந்த திசையைப் பார்த்தாள் அஞ்சலை.

முனிசாமிதான் சாய வேட்டியும் இரட்டைக் கலர்த் துண்டு முண்டாசுமாக நின்று கொண்டிருந்தான்.

"ஏன்...எதுக்காவ கூப்பிட்டியாம்?" உடலைத் திருப்பாமலேயே தலையை மாத்திரம் திருப்பிக் கேட்டாள் அஞ்சலை.

"விசயம் தெரியுமா? நேத்து உன் அப்பாவை வீட்டுலே வந்து பார்த்தேன்!" என்று இழுத்தான் முனிசாமி.

அஞ்சலையின் கண்களில் சந்தோஷம் மிளிர்ந்தது.

"என் அப்பனைப் பார்த்தியா? தா.... அங்கே வா... ஊட்டு மேலே கூடையை இறக்கி வைச்சுட்டுப் பேசலாம்!" என்று நடுத் தெருவிலிருந்து தெரு ஓரத்துக்கு அவனை அழைத்துச் சென்றாள். அவன் தலையிலிருந்து கறிகாய்க் கூடையை இறக்கி ஒரு வீட்டுத் திண்ணையில் வைத்தான் முனிசாமி.

"ம்... அப்பன் என்ன சொல்லிச்சி?" ஆவலுடன் கேட்டாள் அஞ்சலை.

"ரொம்பக் கோவமாப் பேசிட்டாரு அஞ்சலை! நான் பத்துக் காசு சம்பாரிக்கக் கையாலாகாதவனாம்! உன்னைக் கட்டிக் கொடுத்தா உன் கண் கலங்காம வச்சிக் காப்பாத்த எனக்கு யோக்கியதை இல்லையாம்! அந்த ரங்கப்பன் ஒரு வாரத்திலேயே நூறு ரூபாய்க்குச் சம்பாரிக்கிறானும்! அவனுக்குத்தான் கட்டிக் கொடுப்பேன்னு திட்டவட்டமாச் சொல்லிட்டாரு!" கண்களில் தெறித்த கண்ணீரைச் சிரமப்பட்டு அடக்கிக் கொண்டு அவன் பேசினான்.

"அப்பன் சொல்லிச்சின்னு நீயும் அதைக் கேட்டுக்கிட்டு வந்தியாக்கும்! அங்கேயே ரெண்டு வார்த்தை கடச் கடக் கேட்காம விட்டுப்புட்டு வந்துட்டியே?" என்று குறைப் பட்டுக் கொண்டாள் அஞ்சலை.

"நான் எப்படிக் கேக்கறது அஞ்சலை? 'ரெண்டு காசு சம்பாரிச்சாலும் யோக்கியமாத்தான் சம்பாரிக்கிறேன்' அப்படின்னு ஒரு வார்த்தை சொல்லிட்டு வந்துட்டேன்!" ரங்கப்பன் வண்டவாளத்தை யெல்லாம் இழுத்து விட்டிருக்கலாமோ என்று அவன் மனம் இப்போது அடித்துக் கொண்டது.

"சரி.... கறிகாய்க் கூடையைத் தூக்கித் தலை மேலே வையி! இதுங்களை விக்கறதுக்கு நேரமாயிடிச்சி!" என்றவள் புறப் பட்டு விட்டாள்.

அப்படியே நின்றான் முனிசாமி.

"டேய், என்னடா, 'ராங்' பண்றே? நேத்தி என் மாமன் சொன்னப்புறமும் நீ உன் வேலையை உடலையா? அஞ்சலைகிட்டே இன்னும் உனக்கு என்ன பேச்சு? பேசாம 'ஜகா' வாங்கிக்கினு போயிடு! இல்லாட்டி எலும்பையெல்லாம் எண்ணிக் கீழே வச்சிடு



கண்ணீர்

வேன்! ஆமா...!'' கண்களை உருட்டி விழித்து, முண்டாவை ஏற்றி இறக்கி, கிருதா மீசை மீது கைபோட்டு முறுக்கி 'வார்னிங்' கொடுத்தான் ரங்கப்பன்.

அவனைக் கண்டதும் முனிசாமிக்குச் சப்த நாடியும் ஒடுங்கி விட்டது.

இருந்தாலும், ''கம்மா நிறுத்து வாத்தி யாரே! அதுக்குள்ளாற மாமன் முறை கொண்டாட ஆரம்பிச்சுட்டியே! அஞ்சலை உன்னைக் கட்டிக்கிறதுக்கு இஷ்டப்படுதான்னு தெரிஞ்சுக்கிட்டியா?'' என்று எப்படியோ கேட்டு விட்டான் முனிசாமி.

''நீ யார்ரா, எனக்குச் சொல்றதுக்கு? அப்பன் சொன்னு அந்தக் கழுதை கழுத்தை நீட்டுது!'' வலது கையால் மேல் துண்டை எடுத்து ஓர் உதறு உதறி, 'மக்மல்' சட்டை மூடிய தோளின் மீது போட்டுக் கொண்டான் ரங்கப்பன்.

ஃ ஃ ஃ

சென்னையில் இருக்கும் பல குடிசைப் பகுதிகளில் வைகுண்டபுரம் குடிசைப் பகுதியும் ஒன்று. எவனோ ஒரு மகானுபாவன் புண்ணியம் செய்து படாத பாடுபட்டு வாங்கிப் போட்ட நிலம் அது. யாருடைய சாபமோ, அந்த நிலம் அவனுடைய சந்ததிகளுக்கு உபயோகப்படவேயில்லை. எங்கெங்கேயோ 'பிளாட்பாரவாசி'களாக இருந்தவர்கள், 'சேவா சங்கம்' என்றும், 'உழைப்பாளர் மன்றம்' என்றும் இரண்டு போர்டு மாட்டி, இரண்டு கொடிகளை உச்சியில் பறக்கவிட்டு, மளமளவென்று 'ராவோடுரா வா'கக் குடிசைகளைப் போட்டு விட்டார்கள். வைகுண்டநாதன் என்ற கௌன்சிலர் பெயரில் அந்த 'திடீர்'புரத்துக்கு வைகுண்டபுரம் எனவும் நாமகரணம் இட்டுவிட்டார்கள். நிலத்துச் சொந்தக்காரர்கள், இக்குடிசை வாசிகளைக் கிளப்பவே முடியவில்லை. யாராவது ஒருவனிடம் இடத்தைக் காலி செய் என்று சொல்லி விட்டால் போதும், அந்த வட்டத்துக் கவுன்சிலர் முதல் மந்திரி வரை தலையிட்டு நிலத்துச் சொந்தக்காரர்களை வாயடைக்கச் செய்து விடுவார்கள். இரண்டு மூன்று முறை முயன்று பார்த்து, நிலத்துச் சொந்தக்காரர்கள் அந்த நிலத்துக்கு 'எள்ளும் தண்ணீரும்' விட்டு விட்டார்கள்.

அப்படிப்பட்ட வைகுண்ட புரத்திலே முனிசாமியின் தாய் அடைக்கலம் புகுந்த போது, ஓர் இடத்தைக் காட்டிக் குடிசை போட்டுக் கொள்ளச் சொன்னது அஞ்சலையின் தகப்பன் முருகேசன்தான்! அதற்கு ஈடாகக் கவுன்சிலருக்குக் கொடுக்க வேண்டுமென்று கேட்டு, முனிசாமியின் அம்மாவிடமிருந்த ஒரே நகையான ஒரு ஜோடி கம்மலையும் வாங்கிக் கொண்டு விட்டதாகக் கேள்வி!

கவுன்சிலராக இருந்து ஆட்டமாக ஆடி, கடைசியில் 'அம்போ' என்று போன வைகுண்டநாதனின் நேர் வாரிசுதான் ரங்கப்பன். அப்பனுக்குப் பிள்ளை தப்பாமல் பிறந்திருந்தான். கோயில் காளை மாதிரி வளர்ந்திருந்தான். அவனுக்கு இந்த வேலை தான் என்று நிரந்தரமாக ஒன்றும் கிடையாது. அந்தப் பேட்டையிலும், பக்கத்திலுள்ள பேட்டைகளிலும் எங்கு, எந்தச் சண்டை நடந்தாலும் அதை ஆரம்பித்து வைப்பவன் ரங்கப்பனாகத்தான் இருக்கும். அதைத் தொடங்கி வைத்துப் பேட்டையை இரண்டு செய்து பணம் பண்ணுவதில் கெட்டிக்காரன் அவன்! தேர்தல் என்று வந்து விட்டால் அவனுக்கு ஒரே குஷி! எத்தனை பேர் வேட்பாளர்களாக நின்றாலும் அவ்வளவு பேரிடமும் ஏதாவது பேசி, அவர்களை நம்ப வைத்துப் பணம் கறந்து விடுவான்!

இவனுக்கு நேர் எதிர்க் குணம் படைத்தவன் முனிசாமி. தான் உண்டு, தன் வேலை உண்டு என்று போய்க் கொண்டிருப்பான். 'கனி நாடார்' கீத்து மூங்கில் கடையில் வேலையில் இருந்தான். மாதா மாதம் சம்பளம் என்று பெயருக்கு ஏதோ வந்தது. தாயும் போய் விட்டாளாதலால் அவனுடைய ஒரு சாண் வயிற்றைக் கழுவிக் கொள்ள அந்தச் சம்பளம் போதுமானதாக இருந்தது. இந்தச் சம்பளத்திலேயே திருப்திப் பட்டுக் கொண்டிருந்தவனின் வாழ்க்கையிலேதான் அஞ்சலை குறுக்கிட்டாள்.

அந்தக் குறுக்கீடு காதலாக வளர்ந்தது. காதல் பயிர் தளதளக்கும் நேரத்திலே களைகளாக முளைத்தான் ரங்கன்.

என்னதான் பெரிய ரௌடியாக இருந்தாலும் பெண்கள் விஷயத்தில் இதுவரை ரங்கப்பன் யோக்கியன் என்றே பெயர் வாங்கியிருந்தான்! அந்த ஒரு யோக்கியத்தனத்துக்காகவே அஞ்சலையைத் தனக்குக் கட்டிக் கொடுக்க வேண்டுமென்று அஞ்சலையின் தந்தையைப் பயத்தாலும், பீடிக் கட்டாலும், மூக்குப் பொடியாலும் வசப்படுத்தி வந்தான். வாரம்

தவறினாலும் அவள் கைகளில் நர்த்தனமிடத் தவறாத நாறு ரூபாய் நோட்டுக்களைக் கண்ட அஞ்சலையின் தந்தை, இந்த உலகத்தில் இவ்வளவு காலம் வாழ்ந்து வாழ்க்கைக்கு அத்தியாவசியம் என்ன என்பதை உணர்ந்தவர். முதலில் பணத்தைப் பார்ப்போம்; பிறகு குணத்தைப் பற்றிக் கவலைப் படலாம் என்ற முடிவுக்கு வந்து ரங்கப்பனின் ஆசையை நிறைவேற்றும் அளவுக்கு முன்னேறி விட்டார்.

''என்னம்மே, அஞ்சலை! முனிசாமியோட சேர்ந்துக்கினு நம்மகிட்டேயே 'டாவு' காட்டிறியா? இன்னொருவாட்டி அவனோட பேச்சு வச்சுக்காதே! மீறினே, ரங்கப்பன் யாருங்கிறதைத் தெரிஞ்சிக்கிடுவே, ஆமா!..'' வலது கையால் மீசையை முறுக்கிக் கொண்டே 'வார்னிங்' கொடுத்தான் ரங்கப்பன். கறிகாய்களை விற்றுவிட்டு வெறுங் கூடையோடு வீடு திரும்பிக் கொண்டிருந்த அஞ்சலையைச் சந்து முனையில் நிறுத்தி.

''சீ.... என்னப்பா மனுசன் நீ? ஒரு பொண்ணு உன்னைப் புடிக்கலைன்னு சொன்னுக்கூட பின்னாலேயே சுத்தறியே! நீயும் ஒரு ஆம்பிளை மாதிரி மீசை வச்சுக்கிட்டு இந்தப் பேட்டையிலே உலாத்தறியே! உனக்கு வெக்கமாயில்லே!....'' காறி உமிழாத தோஷமாக வெடுவெடுத்தாள், அஞ்சலை.

''என்னம்மே, உனக்குக் கசக்குது?.... ரங்கப்பனைக் கட்டிக்க நான், நீன்னு இந்தப் பேட்டையிலே மாத்திரமில்லே, பக்கத்துப் பேட்டையிலேயெல்லாம் பொண்ணுங்க போட்டி போடுது! நான் அதுங்களையெல்லாம் வாணான்னு ஒதுக்கிட்டு, உன்னைத்தான் கட்டிக்குவேன்னு வந்தா, நீ என்னவோ 'ராங்' பண்றியே? நீ என் பொஞ்சாதிதான்! அதை மாத்த முடியாது! அதனாலே நல்லபடியா நடந்துக்க!....'' என்று ஆக்ரோஷத்துடன், அஞ்சலை போகும் வழியை மறித்துக் கொண்டு கத்தினான் ரங்கப்பன்.

''தூ...த்தேரி!.... என்ன தைரியம் இருந்தா இந்த அஞ்சலைகிட்டே வந்து 'நீதான் என் பொஞ்சாதி'ன்னு சொல்லுவே? இன்னொரு தரம் சொன்னே, ஆம்பளைன்னுகூடப் பார்க்காமே கன்னத்திலே கொடுத்திடுவேன்! மருவாதையாப் பூடு!....'' பாஞ்சாலியாகச் சீறினாள் அஞ்சலை.

இதற்குள் அங்கு ஒரு சிறு கூட்டமே கூடிவிட்டது.

''பொண்ணு நல்லா கொடுத்தாய்யா, 'டோஸ்'......!'' முருகேசன் மவதானே! கேக்காம இருப்பாளா?'' என்று ரங்கப்பனின் எதிரி ஆள் கத்திரிக்கோல் ஆறுமுகம் சொன்னதும், சுற்றிக் கூடியிருந்த கூட்டம், 'கொல்'லெனச் சிரித்து விட்டது.



'' என் மனைவி பஜனைப் பாட்டு பாடுகிறாள். பாடுவதற்கு சான்ஸ் வேணும். நீங்கள் பாட்டுக்கு இல்லைப் பாட்டு பாடி விடாதீர்கள்.''

ரங்கப்பனுக்கு அவமானத் தால் மீசை படபடவெனத் துடித்தது.

''அஞ்சலை, இப்படி என்னை அவமரியாதை செஞ்சதுக்கு உன்னைப் பழிவாங்காட்டி என் பேரு ரங்கப்பன் இல்லே!...'' என்று கருவி விட்டு விடுவிடுவென்று நடந்து மறைந்து விட்டான் ரங்கப்பன்.

''சரித்தான் போய்யா....'' என்று சொல்லி விட்டு, அஞ்சலையும் ஒயிலாக நடந்தாள்.

அன்று அமாவாசை. இரவு மணி இரண்டு இருக்கும். முக்காடிட்ட ஓர் உருவம் சுற்று முற்றும் பார்த்துக் கொண்டே முனிசாமியின் குடிசைப் பக்கம் சென்றது. முனிசாமியின் குடிசையை நெருங்க நெருங்க அந்த உருவத்துக்கு ஏதோ ஒரு நடுக்கம். இருந்தாலும் சமாளித்துக் கொண்டு முனிசாமியின் குடிசையை அடைந்தது. மூங்கில் தட்டியால் 'கதவு' என்ற பெயருக்கு ஒன்று இருந்தது. அதை வெளிப் பக்கமாக இழுத்துப் பார்த்தது அந்த உருவம். கம்பியால் குடிசைச் சுவருக் கம்பத்தோடு உள்பக்கமாகச் சேர்த்துக் கட்டப்பட்டிருந்தது அந்தக் கதவு. உள்ளேயிருந்து குறட்டைச் சத்தம் பலமாகக் கேட்டது.


ஒருவிதத் திருப்தியுடன் தலையை அசைத்துக் கொண்டது அந்த உருவம். மடியை அவிழ்த்து, ஒரு சிறிய டப்பாவை வெளியே எடுத்து அதைத் திறந்து ஒரு கிழிசல் துணியை வெளியே எடுத்தது. அதை வெளியே எடுத்தவுடனேயே மண்ணெண்ணெய் வாடை 'குப்' பென்று அடித்தது.

இடுப்பில் செருகியிருந்த தீப்பெட்டியை எடுத்து ஒரு குச்சியைக் கிழித்தது. அந்தக் குச்சியில் மண்ணெண்ணெய்த் துணியைப் பிடித்தது. துணியில் 'கப்'பென்று நெருப்பு பிடித்துக் கொண்டது.

அடுத்த விநாடி அந்தத் துணி முனிசாமி குடிசையின் மேல் விழுந்தது. நன்றாகக் காய்ந்து 'இதோ, இதோ' என்று காத்திருந்த தென்னங் கீற்றுகள் 'சட்'டென்று பிடித்துக் கொண்டன. குடிசை நன்றாகத் தீப் பிடித்துவிட்டது என்று மனத்தைத் திருப்திப் படுத்திக் கொண்டு அந்த உருவம் வந்த வழியே செல்லத் திரும்பிய போது, ''அதோ, அதோ! அந்தப் பாவிதான்....!'' என்று ஒரு பெண்ணுருவம் கத்தியது.

சரக், சரக்' கென்ற பூட்ஸுகளின் ஒலிகள் 'தட தட' வென்று ஓடி வந்து அந்த உருவத்தை மடக்கிப் பிடித்துக் கொண்டன.

சப் இன்ஸ்பெக்டர் 'டார்ச் லைட்'டை அந்த உருவத்தின் முகத்திற்கு நேராக அடித்தார். ஒரு போலீஸ்காரர் சட்டென்று முக்காட்டை விலக்கினார். பிடிபட்டது ரங்கப்பன்தான்! இதற்குள் அஞ்சலை... 'நெருப்பு.... நெருப்பு.... ஓடியாங்க' என்று





லிப்டன் ஹிமாலயன் கோல்டன் டஸ்ட் டீ

பருகியவர் மீண்டும் மீண்டும் விரும்பிக்
கேட்கும் பானம்! கோப்பைக்குக்
கோப்பை திருப்தி தரும் சிறந்த மணம்!
தரம் நிறைந்த கெட்டியான பானம்!
பருகுவதில் இன்பம்! விலையிலும் சிக்கனம்!

ஹிமாலயன் கோல்டன் டஸ்ட் தூள்வகை
தேயிலைகளில் ஏற்றமிக்கது.

LIPTON

லிப்டன் என்றாலே
நல்ல டீ

LHGC-8 TAM



''உங்களை எனக்கு மிகவும் பிடித்திருக்கிறது.''

''எந்த அளவில்? பாஸ் போர்ட்டா? ஆல்ப் சைஸா? புல் சைஸேதானா?''

கத்திப் பக்கத்துக் குடிசைகளில் இருந்தவர்களை யெல்லாம் எழுப்பி விட்டு விட்டாள்.

எல்லாக் குடிசைகளிலிருந்தும் மண் பானைகள் பறந்து வந்தன. பெண்கள் எங்கிருந்தோ தண்ணீரைக் குடம் குடமாகக் கொண்டு வந்தனர். ஆண்கள் தண்ணீரை வாங்கி வாங்கி முனிசாமியின் குடிசை மீது விசிறி ஊற்றினார்கள். தீ நாக்குகள் முனிசாமியின் குடிசை வாயிலைச் சூழ்ந்து கொண்டு அவனை வெளியே வர விடாமல் தடுத்தன. அப்படியும் எப்படியோ ஓடி வந்து வெளியே வந்து விழுந்தான் முனிசாமி. அஞ்சலை அவனைத் தாங்கிக் கொள்ள, இரண்டு மூன்று பேர் ஒரு கட்டிலை எடுத்து வந்து அவனை அதில் படுக்க வைத்தனர். அரைமணி நேரப் போராட்டத்தில் பாதி எரிந்த குடிசையாக முனிசாமியின் குடிசையை மீட்டனர். விஷயம் தெரிந்து நெருப்பு அணைக்கும் லாரிகள் வருவதற்குள் தீ முழுவதும் அணைக்கப்பட்டு விட்டது!

மறுநாள் மாலைப் பத்திரிகைகளில் அஞ்சலையின் தீரச் செயல்கள் அவளுடைய புகைப்படத்துடன் பிரசுரமாகியிருந்தது.

கீற்று மூங்கில் வியாபாரம் செய்யும் சிவானந்தம் வீட்டில் தினந்தோறும் மத்தியானம் பாத்திரம் விளக்கிக் கொடுக்கும் வேலையை அஞ்சலை செய்து வந்தாள். சம்பவ தினத்துக்கு முதல் நாள் பாத்திரம் விளக்க அந்த வீட்டிக்குச் சென்றபோது சிவானந்தமும் ரங்கப்பனும் பேசிக் கொண்டிருந்ததைக் கேட்டதாகவும் பேச்சின் முடிவில் அட்வான்ஸாக நூறு ரூபாப் பணம் வாங்கிக் கொண்டு ரங்கப்பன் சென்றதாகவும் போலீசுக்கு முன்கூட்டியே அஞ்சலை தகவல் கொடுத்ததால் நேரவிருந்த பெரிய விபத்து தவிர்க்கப்பட்டதாகவும் கண்டிருந்தது.

தீக்காயங்களுடன் ஆஸ்பத்திரியில் படுத்திருந்த முனுசாமி அஞ்சலையின் கண்ணீரைத் துடைத்துக் கொண்டே கூறினான்:

''அஞ்சலை! நீ ரொம்ப தைரியசாலியாச்சே! ஏன் இப்படி அழறே? நீ இல்லாட்டி நான அப்படியே அந்த நெருப்பிலே வெந்து போயிருப்பேனே! உன் அப்பன், கல்யாணத்துக்குச் சம்மதிக்க மாட்டாரோன்னு அழறியா?...''

''அதில்லே மச்சான்!... என் அப்பனையும் மாட்டி வைக்கப் பார்த்தானே பாவி ரங்கப்பன்னுதான் எனக்கு ஆத்திரமா வந்துடிச்சு. ரங்கப்பன் உன் குடிசைக்குத் தீயை வச்சுட்டு நேரே போலீஸ் ஸ்டேஷனுக்கு ஓடி என் அப்பன்தான் என்னை உனக்குக் கட்டிக் கொடுக்கக் கூடாதுங்கறதுக்காகவும், நான் ஒரே பிடியா உன்னைத்தான் கல்யாணம் கட்டிக்குவேன்னு இருந்ததினாலே உன்னையே ஒழிச்சுடறதுங்கறத்துக்காகவும் உன் குடிசையிலே தீயை வைச்சுட்டு ஓடறான்னு வாக்குமூலம் கொடுத்திடறதாச் சிவானந்தத்திடம் ரங்கப்பன் சொல்லிக்கிட்டிருந்தான். எங்கப்பன் பாவம், 'ரங்கப்பா, உனக்குத்தான் அஞ்சலைன்னு சொல்லி அந்த ஆளைப் பூரணமா நம்பி யிருந்தப்போ எங்க அப்பனையே ஏமாத்திப்பிட்டானேன்னுதான் எனக்கு அழுகையா வருது!...'' துக்கம் தொண்டை அடைக்கக் கூறினாள் அஞ்சலை.

''அதான் உங்க அப்பனைக் காப்பாத்திட்டியே, இனிமே என்ன?... ஆமா, சிவானந்தம் எதுக்காக இந்த விவகாரத்திலே தலையிடணும்?'' சந்தேகத்தோடு கேட்டான் முனுசாமி.

''அது பெரிய அக்குரும்பு மச்சான்! குடிசையிலே நெருப்பு வச்சி இருபது, இருபத்தைஞ்சு குடிசையாச்சும் எரிஞ்சு போனா, கீத்து மூங்கில் கடை வச்சிருக்கிற சிவானந்தத்துக்குத்தானே நல்ல வியாபாரம் ஆவும்? ஒண்ணுக்கு ரெண்டா விலை வச்சி விக்கலாம்? எல்லாம் கொள்ளை லாபம் அடிக்கிற வெறிதான் மச்சான்!... நீ ஒத்தருகிட்டேயும் சொல்லிடாதே!...'' என்று ரகசியக் குரலில் கூறினாள் அஞ்சலை.

அஞ்சலையின் தந்தை முருகேசன் உள்ளே நுழைந்து, ''அஞ்சலை, எல்லாம் நான் தெரிஞ்சுக்கிட்டேன். லாக்கப்பிலே இருக்கற ரங்கப்பனே சொல்லிட்டான். உன்னாலே எனக்கு ஒரு ஆம்பிளைப் பிள்ளை இல்லாத குறை தீர்ந்திடுச்சி! எனக்குப் பிள்ளை இருந்திருந்தா ஆபத்திலே எப்படிக் காப்பாத்துவானோ, அப்படிக் காப்பாத்தி யிருக்கே! முனுசாமிக்கு ரங்கப்பன் மாதிரி துணிச்சலும், தைரியமும் இல்லேன்னுதான் உன்னைக் கட்டிக் கொடுக்கப் பயந்தேன். ஆனா, ரங்கப்பனுக்கு அந்தத் துணிச்சல் தைரியம் எல்லாம் கெட்ட விஷயங்களிலே இருக்குது. என் மருமவப் பிள்ளைக்கோ நல்ல விஷயங்களிலே இருக்குது... மருமவப் புள்ளே! ரெண்டு நாளிலே உங்க உடம்பு குணமாயிடும்! கல்யாணத்தை 'ஜாம் ஜாம்' மின்னு நடத்திடறேன்! கவலைப்படாதீங்க!'' என்றார்.

ஆசை பொங்க அஞ்சலை முனுசாமியைப் பார்க்க, முனுசாமி அஞ்சலையைப் பார்க்க... அந்தக் காதல் நாடகம் எத்தனை நேரம் தொடர்ந்ததோ அது அந்தக் காதலர்களுக்குத்தான தெரியும்.

மதிப்பு என்ன!



கே.ஏ.எஸ்

"இந்த மரகதக்கல்லைப் பார்த்தீர்களா, பாதுஷா! இதன் விலை மதிப்பிட முடியாதது. ஆண்டவனின் சிருஷ்டியில் இது ஓர் அபூர்வம்! எந்த இருட்டிலும் இதைக் கொண்டு வந்தால் தன் ஒளியாலே அந்த இடத்தைப் பிரகாசிக்கச் செய்யும்" என்றார் இரத்தின வியாபாரி, அக்பர் பாதுஷாவை நோக்கி. உண்மையிலேயே அதன் பச்சை வர்ணம் கண்ணைப் பறித்தது.

சபையில் உள்ளோர்களை அந்தக் கல்லை மதிப்பிடும்படி கூறினார் பாதுஷா. ஒவ்வொருவரும் ஒவ்வொரு விலை கூறினார்கள். பீர்பால் மட்டும் மௌனமாக இருப்பதைக் கண்ட பாதுஷா, "ஏன் இந்த மௌனம் பீர்பால்? உன் கருத்து என்ன?" என்று வினவினார்.

ஒரு புன்சிரிப்புடன் பீர்பால், "அரசே! ஆண்டவனின் சிருஷ்டியில் எதுவும் சமமே. மண்ணாங்கட்டிக்கும் கூழாங் கல்லுக்கும் இரத்தினத்துக்கும் ஆண்டவன் ஒரே மதிப்பைத்தான் அளித்திருக்கிறான்" என்றார். சபையில் உள்ளவர்களுக்கு இது பிடிக்கவில்லை. பீர்பால் பொருள்களின் தராதரம் தெரியாமல் பேசுகிறார் என்றே எண்ணினர்.

அக்பர் பீர்பாலின் பேச்சைப் பொருட்படுத்தாமல் அந்தப் பச்சைக் கல்லை மிகுந்த விலை கொடுத்து வாங்கி, தமது வைரஹாரத்தின் நடுவில் பதித்துக் கொண்டார்.

மாதங்கள் சென்றன. அக்பர் இச் சம்பவத்தை மறந்து விட்டார். ஒரு தினம் பீர்பால் அரசரிடம், "சக்கரவர்த்தியிடம் ஒரு விண்ணப்பம். அதைக் கட்டாயம் பூர்த்தி செய்ய வேண்டும்" என்றார்.

சக்கரவர்த்தி புன்முறுவலுடன், "நீ கேட்டு நான் மறுப்பதா பீர்பால்! எது வேண்டுமானாலும் தயக்கம் இல்லாமல் கேள்" என்றார்.

"பிரமாதமாக ஒன்றுமில்லை, அரசே! ஆண்டவன் அன்புக்கு அடிமை ஆகிறான் என்பார்கள். அரசன் ஆண்டவன் அம்சம் என்று புராணங்கள் கூறும். தாங்களும் எனது அன்புக்குக் கட்டுப்பட்டு நாளை முழுதும் என்னுடன் கழிக்க வேண்டும். நாளை என் பிறந்த தினம். நாளை ஒரு தினமாவது நான் அளிக்கும் எளிய விருந்தைச் சுவைத்து, என்னுடன் பேசி, என்னை மகிழ்விக்க வேண்டும். அறிந்தோ, அறியாமலோ நான் ஏதாவது தவறு இழைத்தால் பொருட்படுத்துவதில்லை என்று வாக்களிக்க வேண்டும்" என்று பீர்பால் வேண்டிக் கொண்டார்.

அரசர் சம்மதம் தெரிவித்தார். மறுதினம் தலைநகரில் இருந்து வெகுதூரத்தில் உள்ள மாளிகை ஒன்றில் அக்பருக்கு விருந்தளித்தார் பீர்பால். அந்த மாளிகையைச் சுற்றி வீடோ, மாளிகையோ, எதுவும் இல்லை. மாளிகையிலும் அக்பர், பீர்பால், ஒருமூதாட்டி இவர்களைத் தவிர வேறு யாரும் இல்லை.

விருந்து பிரமாதமாகவும் சுவையாகவும் இருந்த போதிலும் அங்கு ஓர் அதிசயம்! விருந்தில் அருந்துவதற்கு நீர் மட்டும் வைக்கப்படவில்லை. அது தெரியாமல் இருக்கச் சிறிது பழ ரசம் வைக்கப்பட்டிருந்தது. விருந்தின் போது சுவையாகப் பேசி அக்பரை மகிழ்வித்தார் பீர்பால். விருந்து முடிந்து உப்பரிகைக்கு வந்ததும் அரசருடன் பேசிக் கொண்டே இருந்தார். உச்சிப் பொழுது ஏற ஏற வெய்யிலின் கொடுமை அதிகமாயிற்று. அருந்துவதற்கு நீர் கேட்டார் அக்பர்.

"மாளிகையில் குடிக்கத் தகுந்த நீர் சொட்டுக்கூட இல்லை. குடிநீர் எடுத்துக் கொண்டு வருவதற்குத்தான் மூதாட்டி தொலை தூரத்திலிருக்கும் கிணற்றை நோக்கிப் போயிருக்கிறாள். சீக்கிரம் நீர் வந்து விடும், அரசே!" என்று கூறிய பீர்பால் பின்னும் ஏதேதோ பேசிக் கொண்டே இருந்தார். அக்பரால் பேச முடியவில்லை. நாக்கு வரள ஆரம்பித்தது. ஏவுவதற்கு வேலையாட்கள் இல்லை. அக்பரும் பீர்பாலும் குதிரையில் தான் வந்திருந்தனர். நாழிகையோ ஏறிக் கொண்டே இருந்தது. அக்பர் நிலை கொள்ளாமல் தவித்தார். பீர்பால் சாந்தமாக இருந்தார்.

"இன்னும் ஒருகணம்கூட என்னால் தாமதிக்க முடியாது பீர்பால்! இப்பொழுதே கிளம்பினாலும் தலைநகர் அடைவதற்குள் என் உயிர் போய் விடும். எங்கே, அந்தக் கிழவி?"

"அவசரப்பட வேண்டாம் மகாராஜா! நானே நீர் வந்ததா என்று பார்த்துக் கொண்டு வருகிறேன்." பீர்பால் மாளிகைக்குள் சென்றார்.

சற்றுப் பொறுத்து ஒரு மண் குவளையைக் கொண்டு வந்து அரசரிடம் காட்டி, "இதில் குளிர்ந்த நீர் இருக்கிறது அரசே!" என்றார்.

''இப்படிக் கொடு! இப்படிக் கொடு!'' என்று ஆவலுடன் அதைப் பிடிக்க யத்தனித்தார் சக்கரவர்த்தி.

''அவசரம் இல்லை, சக்கரவர்த்தி ! நீரை அருந்துவதற்குமுன்பு ஒரு விஷயம் !''

அக்பர் பொறுமை இழந்தார். ''என்ன பீர்பால், இப்படித்தான் விளையாடுவதா, ஒரு மன்னரிடம்?''

''இல்லை, அரசே ! நேற்றுத் தாங்கள் வாக்குக் கொடுத்தபடி இன்று முழுதும் என் உயிர் நண்பர் நீங்கள்! அரசரில்லை. தாங்கள் கழுத்தில் அணிந்திருக்கும் அந்த வைர மாலையை அளித்தால், அதற்கு ஈடாக மாளிகையில் இருக்கும் இந்த ஒரே குவளை நீரைத் தங்களுக்கு அளிப்பேன்.''

அக்பர் யோசிக்கவில்லை. கழுத்திலிருந்த அந்த வைர ஹாரத்தை வெறுப்புடன் வீசி விட்டுக் குவளை நீரை வாங்கி ஆவலுடன் குடிக்கத் தொடங்கினார். அக்பரின் சிரமம் நீங்கியதும் பீர்பால், ''சக்கரவர்த்தி ! என்னை மன்னிக்க வேண்டும்! தங்களிடம் அதிக உரிமை கொண்டு விளையாடிவிட்டேன்! ஒரே ஒரு காரணத்துக்காக!'' என்றார். அக்பரின் சினமும் வெறுப்பும் அடங்கவில்லை. பீர்பால் விடவில்லை.

''அன்று ஒரு நாள் அரச சபையிலே இரத்தின வியாபாரி வந்த பொழுது கூறியதை நிரூபிக்கவே இப்படிச் செய்தேன் ! இந்த ஒரு மண் குவளை குளிர்ந்த நீருக்காகத் தாங்கள் சற்று முன்பு சாம்ராஜ்யத்தையே அளிக்கச் சித்தமாக இருந்தீர்கள் அல்லவா ? அங்கு அரண்மனையில் தங்கப் பாத்திரத்தில் கவனிப்பாரின்றிக் கிடக்கும் குடிநீருக்கு இங்கு ஒரு வைர ஹாரம் விலை! இரத்தினம் விலை உயர்ந்தது என்பது உண்மைதான் ! ஆனால் ஒரு குவளை நீர் ஒரு சாம்ராஜ்யாதிபதியை மகிழ்விக்க முடிந்தது போல், இந்த இரத்தினத்தால் முடிந்ததா? அரசே! அன்று நான் கூறியதைத் தாங்கள் நம்பவில்லை. ஆண்டவன் படைப்பில் எல்லாம் சமம். ஒவ்வொன்றுக்கும் ஒரு விலை உண்டு. அதை இன்று நான் நிரூபித்து விட்டேன்! ஒரு பொருளின் மதிப்பு அதன் சூழ்நிலையைப் பொறுத்ததே!'' என்று கூறினார் பீர்பால்.

அக்பர் மௌனம் சாதித்தார்.

வட்ட மேஜை

எப்போது பூர்த்தியாகுமோ ?

மதுரையில் தெற்கேயிருந்து வடக்கேயும் வடக்கேயிருந்து தெற்கேயும் செல்லுகிற லாரிகள், கார்கள் மதுரை நகருக்குள் செல்ல வேண்டிய அவசியமில்லாவிடில் மதுரை நகரை ஒதுக்கி வேறு பாதையாகச் செல்லத் தக்கதாய் 'பைபாஸ்' ரோடு அமைக்கப்பட்டது.

பைபாஸ் ரோடு அமைக்கப்பட்ட சில ஆண்டுகள் வரை தினந்தோறும் இருபத்திநான்கு மணி நேரமும் ஆயிரக்கணக்கான லாரிகளும் கார்களும் அந்த ரஸ்தாவின் வழியாகப் போய்க் கொண்டிருந்தன. மதுரைக்குள் போக்குவரத்து நெருக்கடியும் வெகுவாகக் குறைந்தது. மொத்தத்தில் அந்த ரஸ்தா பொதுமக்களுக்குப் பெரும் பயனளித்தது.

பைபாஸ் ரோடில் இருந்த மதுரை — போடி லயனில் உள்ள லெவல்கிராசிங்கில் மேம்பாலம் போடுவதற்குத் திட்டமிடப்பட்டது. மேம்பாலத்துக்கு வேண்டிய ரஸ்தாவை உயர்த்தும் வேலை பல லட்சம் ரூபாய் செலவில் காண்டிராக்ட் விடப்பட்டு வேலை தொடங்கியதும் பொதுவாய் பைபாஸ் ரோடில் போக்குவரத்து சிறிது சிறிதாய்க் குறைந்து வந்தது.

ரஸ்தாவை உயர்த்தும் வேலை முடிந்து சுமார் எட்டு மாதங்களுக்கு மேலாகியும் ரயில்வேயால் செய்யப்பட வேண்டியதாய்ச் சொல்லப்படுகிற பாலம் அமைக்கும் வேலை தொடங்க இதுவரை யாதொரு ஏற்பாடுகளும் செய்யப்படாமல் மேம்பால வேலை மொட்டைக் கோபுரமாய் நிற்கிறது. அண்மையில் பூர்த்தியாகும் அறிகுறிகளையும் காணேம். சம்பந்தப்பட்டவர்களிடம் உரிய முறையில் எடுத்துரைத்தும் நிவாரணம் காண முன்வரவில்லை.

அவசியமும் அவசரமுமுள்ள வேலைகளை ஆறப் போடுவதும் தேவையற்றவைகளைத் துரிதமாக முடித்து வைப்பதும் நமக்குப் பழகி விட்டதல்லவா ?

மதுரை — 3
16–4–69 திருவையாறு ராஜகோபாலன்

நல்வழி பிறக்குமா ?

117வது வட்டமாகிய குமரன் நகர் அசோக் நகரையும் தி. நகரையும் இணைக்கும் முக்கியமான சந்திப்பு. சுமார் 50,000 மக்களைக் கொண்ட இப்பகுதியில் நாங்கள் அநுபவிக்கும் இன்னல்கள் சொல்லி முடியாதவை.

போக்குவரத்து வசதி, தபால் தந்தி வசதி குடிநீர் வசதி ஆகியவை எதுவும் சமீபத்தில் இல்லை. சாக்கடை, தாற்காலிக மோட்டார் சரிவர இயங்காததனால், தெருக்களிலும், வீடுகளிலும் அடிக்கடி உள்வழிந்தோடி அசுத்தப் படுத்துகிறது. நிரந்தரமான பம்பிங் ஸ்டேஷன் கட்டியிருந்தும் அது இன்னும் இயங்கத் தொடங்க வில்லை. கேட்டால், சாக்கடை நீரைக் கொண்டு போய்ச் சேர்க்கும் இடம் தகராறில் உள்ளது என்கிறார்கள். ஆனால் வரி மட்டும் முன்னேறிய பகுதிக்கு வாங்குவதையே (Improved locality) வாங்குகின்றனர்.

இன்னல்கள் நீங்கி இப்பகுதிக்கு என்று தான் நல் வழி பிறக்குமோ ?

பி.ஆர். வெங்கட்ராமன்
சென்னை–33 காரியதரிசி,
17–4–69 குமரன் நகர் பொதுநல மன்றம்

Printed & published by R. Ananthanarayanan on behalf of Messrs. Bharathan Publications Private Limited at Kalki Press. Chetput, Madras-31
Managing Editor.: T. Sadasivam



பொங்கும்
உவகையில்
குளித்
ததுண்டோ?
Fanta
ஃபண்டா ஆரஞ்சு
சுவை இனிதே...
பருகிடவே
எடுக்காதோ தாகம்!
ஃபண்டா கோகா-கோலா
கம்பெனியின் தயாரிப்பு
FANTA IS A REGISTERED TRADE MARK OF THE COCA-COLA COMPANY
CMCF-1-152 TAM

Registered No. M. 4392

Registered as a Newspaper in Ceylon

